439

439

தெய்வத் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

(ஐந்தாம் வகுப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1940
MADRAS

வெளியிடுவோர்

V. C. வேங்கடேசன் கம்பெனி

பி. டி. மதராஸ்

தெய்வத் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

(ஐந்தாம் வகுப்பு)

OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1940
MADRAS

'வித்வான்' - ஐ. நடேசபிள்ளை,
பொன்னேரி.

141
4948/186

வெளியிடுவோர்:

V. C. வேங்கடேசன் கம்பெனி,

P. T., மதராஸ்.

காபிரைட்] 1939 [விலை அணு 6

THE
KESARI PRINTING WORKS,
MADRAS.

FOREWORD

The author of the present series, **Mr. A. Natesa Pillai**, a veteran educationist and a public spirited gentleman, has taken time by the forelock and immediately after the publication of the **new syllabus in May 1939**, drawn up by a special committee of experts appointed by the Department of Education, Madras, for use in Elementary Schools, has prepared and published another set of Tamil Primers in accordance with the scheme of studies prescribed in it. They are decidedly an improvement on the previous set of Readers by the same author, "ARAN TAMIL VASAGAMS" which proved so popular and successful that they ran into several editions. The present series, "**Deiva Tamil Vasagam**" are the result of much thought, labour and care and have been prepared with a thorough understanding of the psychology of little children and with the set purpose of making a child a permanent literate by the time he or she passes out his or her V Standard. The illustrations are splendid—a very valuable and rare achievement in the Indian Press—and the print distinct and neat. I wish this series of Readers all the success they deserve and feel confident that they will more than fulfil the great purpose for which they are intended.

PONNERI,
1—11—1939.

(Sd.) A. E. CHARLES, B.A., L.T.,
J. D. I. of Schools, Ponneri Range.

முன்னுரை

தெய்வத் தமிழ் வாசகம் என்னும் இப்பாட புத்தக வரிசை கல்வி இலாகா அதிகாரிகளால் 1939 மேமீ இல் புதிதாக அமைக்கப் பட்ட) ஆரம்பப் பாடசாலை பாட திட்ட முறையை முழுதும் பின் பற்றி எழுதப்பட்டிருக்கின்றது. இது ஐந்தாம் வகுப்பு மாணவர்கட் குரிய ஐந்தாம் புத்தகமாகும்.

இவ்வைந்தாம் புத்தகம் "மாணவர்களின் பருவத்திற் கேற்ற வாறு தெரிந்த, பேச்சில் உபயோகப்படுகிற மொழிகளைக் கற்பிக்க" கருவியாக அமைக்கப்பட் டிருக்கிறது. இப் புத்தகம் படித்து முடித்த மாணவன் "சுமார் 800 புதிய மொழிகளையும் அவைக ளடங்கிய சிறு வாக்கியங்களையும்" படங்களின் மூலமாயும் சம்பாஷணை மூலமாயும் எழுதவும் படிக்கவும் கற்றவனாவான்.

இப்புத்தகத்தைக் கண்ணுறுவோர், இது பள்ளி யாசிரியர்கட்கும், மாணவர்கட்கும் பெரிதும் இன்றி யமையாததா யிருக்கு மென்பதைச் செவ்விதின் உணர்வார்கள். ஆகவே, கல்வி யதிகாரிகளும் பாடசாலைத் தலைவர்களும் ஆசிரியர்களும் இதை ஆதரவு செய்து என்னைப் பின் னும் ஊக்குவார்களென நம்புகிறேன்.

இவ் வாசக வரிசையை நன்கு பார்த்து மதிப்புரை தந்த திருவாளர் A. E. சார்லஸ் அவர்கள், B.A., L.T. (Junior Deputy Inspector of Schools, Ponneri Range) பதிப்பித்து வெளி யிட்ட V. C. வேங்கடேசன் கம்பெனியார் ஆகியவர்களுக்கு என் நன்றி உரியது.

எல்லாம் வல்ல இறைவனுடைய இணையடிகட்கு இவைகளை யரிச்சிக்கும் என்கடன் பணிசெய்து கிடப்பதே.

தில்லை விலாசம்
பொன்னேரி,
1—10—1939.

இங்ஙனம்,
ஐ. நடேசன்,
தமிழன்.

முன்னுரை

[illegible] 1891 [illegible]

[illegible]

[illegible] 500 [illegible]

[illegible]

[illegible] A. R. [illegible] B.A., L.T. (Junior Deputy Inspector of Schools, Ponneri Range) [illegible]

[illegible]

பொருளடக்கம்

எண்	பாடம்	பக்கம்
1.	பாரி	1
2.	தமிழ்	6
3.	அதிவீரராமர்	11
4.	பார்த்தன் தவம்	16
5.	உலோகங்கள்	23
6.	இரவி வர்மா	28
7.	வில்வீரன்	32
8.	கண்	37
9.	சூழ்ச்சி	43
10.	நம்மாழ்வார்	48
11.	முத்து	53
12.	ஒற்றுமை	58
13.	பச்சையப்ப முதலியார்	63
14.	காஞ்சிமாநகரம்	70
15.	பிரகலாதன்	75
16.	அல்லி அரசி	81
17.	பண்டை நிலம்	87
18.	நம்நாட்டுக் கைத்தொழில்	95
19.	செஞ்சிக்கோட்டை	101
20.	சூரியன்	108
21.	கடிதம் எழுதும் முறை	114
22.	செய்யுட் பாடம்	119

(பாரி, முல்லைக் கொடியைத் தேரில் படர விடுதல்)

தெய்வத் தமிழ் வாசகம்

1. பாரி

சிற்றரசன்	நாவலர்	அலமறுகின்றது
பறம்புநாடு	களிறு	தவழ்ந்து
படைத்த	பிடி	பைங்கொடி
வாரி வாரி	கானாறு	ஆதரவு
இன்முகம்	காட்டேரி	திருபன்
வன்சொல்	கான்குளம்	கடுத்தன
அறையும்	வனச்சோலை	இறும்பூது
மடம்	திட்டு	ஆலித்து
அறியாமை	திடர்	வளி
ஓராமல்	இயற்கை	கண்ணியம்
பறி	எழில்	சீர்த்தி
பரி	குறிஞ்சி	படை (ஆயுதம்)
ஊர்தி	குன்றிடைநாடு	ஈரம்
பாடி	வளப்பம்	செம்மல்
மாடி	செழித்து	செல்லல்
வாடி	தளவம்	சான்றோர்
இரவலர்	கிளைத்து	குறுநிலம்
உன்னுவான்	முகை	பலித்து

தெய்வத் தன்மை பொருந்திய தமிழ் வழங்கும் நாடு தமிழ் நாடு. இதில் மூன்று வகையான வள்ளல்கள் இருந் தார்கள். அவர்கள் முதலெழு வள்ளல்கள், இடைஎழு வள்ளல்கள், கடைஎழு வள்ளல்கள் எனப்படுவர். முன் வகுப்புக்களில் சில வள்ளல்களைப் பற்றிப் படித்தீர்க ளல்லவா! இப் பாடமும் ஒரு வள்ளலைப் பற்றியது. அவ் வள்ளல் பாரி என்பவன். பாரி கடைஎழு வள்ளல்களுள் ஒருவன்.

பாரி ஒரு சிற்றரசன். அவன் மலைநாட்டுக்கு அரசன். அவனுடைய நாட்டுக்குப் பறம்பு நாடு என்று பெயர். பறம்புநாடு மிகச் சிறியதுதான். அது முந்நூறு ஊர்களை யுடையது. சிறியநாட்டு அரசனாயினும் பாரி, பெரிய புகழ் படைத்தவனாய் இருந்தான். அவனுக்கு எப்படிப் புகழ் விளைந்தது! வள்ளல்களின் இயல்புதான் உங்களுக்குத் தெரியுமே! வந்தவர்களுக்கு வாரி, வாரி வழங்குவார்க ளல்லவா! அதனால்தான் அரசனாகிய பாரி அவ்வளவு புகழ் படைத்தான். அது மாத்திரமா! பாரி எப்போதும் இனிமையாகப் பேசுவான்; இன்முகமே உடையவன்; அவன் வாயில் அவனை மறந்தும் வன்சொல் வருவதில்லை.

பாரியின் ஈகைக் குணத்தை யறையும்போது "கொடைமட முடையவன்" என்பது வழக்கம். ஏன் அப்படி யுரைக்கவேண்டும் என்கிறீர்களோ! அவன் கொடுக்கும் வகையில் அறியாமையை யுடையவன். யாருக்கு? என்ன? எவ்வளவு? எப்பொழுது? எங்கே? என்று ஓராமல் கொடுப்பான். பசி என்று வந்தவர் களுக்குப் பறியும் பரியும் வழங்குவான். உடை என்று

வந்தவர்களுக்கு ஊர் பல தருவான். உணவு என்று வந்தவர்களுக்கு ஊர்தியுமீவான். பாடி வந்தவர்களுக்கு மாடியும் பொன் கோடியும் கொடுப்பான். வாடி வந்தவர்களுடன் கூடியுண்பான். இரவலர்களையே உறவினர்களாக உன்னுவான். நாவலர்களுக்கு நற்களிறும் பிடியும் கணக்கின்றித் தருவான்.

மற்றொரு நிகழ்ச்சியை இங்கே கூறுவோம். பாரி ஒருமுறை வெளியில் சென்றான். அவன் எப்பொழுதும் தேரில் ஏறிச்செல்வான். சென்றவன் கானாறு, காட்டேரி, கான்குளம், வனச்சோலை, மலை, குன்று, திட்டு, திடர், மேடு, பள்ளம் முதலிய இயற்கை எழிலைக் கண்டான். தனது குடிகளையும் அவர்கள் உறையு மூர்களையும் அவற்றையடுத்த மலைச்சாரல்களையுங் கண்டு களித்தான். குறிஞ்சி யென்பது குன்றிடை நாடு. அங்கே மலைமல்லிகையும் முல்லையும் மட்டின்றி செழித்திருக்கும். அவ்விடத்தில் அரசன் ஒரு முல்லைக் கொடியைக் கண்டான்.

அந்தத் தளவக்கொடி, தனியே முளைத்திருந்தது. ஆயினும் அது வளப்பத்தில் தடையுறவில்லை. செழித்துக் கிளைத்துப் படர்ந்திருந்தது. அதில் முகையும் அலரும் அளவின்றி நிறைந்திருந்தன. ஆனால், அது கொள்கொம்பின்றி யிருந்தது; காற்றினால் அலைந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட பாரியின் மனம் பதைத்தது. ஐயோ! இப்பசுங் கொடிக்குப் பற்றுங் கொம்பில்லையே! அலமறுகின்றதே என்று இரக்கங் கொண்டான். அது படர்வதற்கு வழிதேடினான். என்ன செய்தான் தெரியுமா! தான் ஏறி வந்த தேரை அதன் அருகில் நிறுத்தினான். தரையில் தவழ்ந்திருந்த பைங்கொடியை யெடுத்துத் தேரில் விட்டான்.

முல்லைக்கு ஆதரவாகத் தேரை நிறுத்திவிட்ட நிருபன் நடந்தே சென்றான். அவன் கால்களுங் கடுத்தன. பாதங்களுஞ் சிவந்தன. ஆயினும் அது அவனுக்கு வருத்தமாகத் தோன்றவில்லை. கொடிக்கு உதவி செய்ததை எண்ணி எண்ணி இறும்பூதெய்தினான். இனி அக்கொடி ஆலித்துப் படரும்; வளியால் வருந்தாது என்பதையே கண்ணியமாகக் கருதினான். இப்படிப் பட்டவனுடைய சீர்த்தி எங்கும் பரவிற்று என்பதில் என்ன புதுமை யிருக்கிறது?

பாரி, கொடையில் சிறந்து விளங்கியதுபோலவே படையிலும் திகழ்ந்தான். போரில் அவனை வெல்ல எவராலும் இயலாது. வீரமும் தீரமும் நெஞ்சீரமும் ஒருங்கே அமையப்பெற்ற பாரியைப் பல புலவர்கள் நாடிச் செல்வதுண்டு. செம்மலாகிய பாரி சென்றவர்க்குச் செல்லல் தீரச் செல்வமீவான். சான்றோர்க்குக் கொடுத்தவன் பெயரை மூவுலகும் அறியுமல்லவா! ஆகையால், அவனைப் பற்றி யாரும் அறிந்தார்கள்; முடிமன்னர்களாகிய சேர, சோழ, பாண்டியரும் கேள்விப் பட்டார்கள். முடியுடை வேந்தர்களைக் காட்டிலும் குறுநில மன்னன் மிகப் புகழ் கொண்டானே என்ற எண்ணத்தால் பொறாமை கொண்டார்கள்.

பொறாமை யுடையவர்கள் பாரியின்மீது பகையும் உடையவர்களானார்கள். பாரிக்குப் புகழ் வளர்வது போலவே பகையும் வளர்ந்தது. அதன் பயனாகப் போரும் தொடங்கியது. பாரி ஒருவனை மூவேந்தரும் ஒன்றுகூடி எதிர்த்தனர். ஆயினும் அவனை வெல்ல அவர்களால் ஆகவில்லை; 'படைமடம் படாதவன் பாரி' ஆதலால், அவன் தோல்வி அடைவானா! 'புண்ணியத்தைப் பாவம் வெல்

லாது' என்ற பழமொழி அங்கே பலித்துவிட்டது. முடிவில் மூவேந்தரும் வஞ்சனையாகப் பாரியைக் கொன்றார்கள்.

பாரியின் உடல் அழிந்தும் புகழ் நிலைத்திருக்கிறது. அவனைப் பற்றிக் கபிலர் என்பவர் பாடியிருக்கிறார். சுந்தர மூர்த்தி நாயனாரும் தமது தேவாரத்தில் பாரியைப் பற்றிக் கூறியிருக்கிறார். அவர் சொல்லில் இருந்து பாரியின் கொடைத் திறமை விளங்கும்.

பயிற்சி 1

(அ) சிற்றரசன், புகழ் எதிர்பதம் தருக.

(ஆ) புகழ் என்பதைக் குறிக்கும் வேறு சில மொழி கூறுக.

(இ) பறி, பரி பொருள் வேறுபாடு காட்டுக.

(ஈ) பிடி, செல்லல் இருபொருள் கூறுக.

(உ) வள்ளல், ஊர்தி, இரவலர், மட்டு, ஆதரவு பொருள் எழுது.

(ஊ) இறும்பூதெய்தினான், நெஞ்சீரம், மூவேந்தர். பதம் பிரித்துக் காட்டு.

(எ) தனி வாக்கியங்களாகப் பிரிக்க

பாரியின் புகழ் எங்கும் பரவியதை மூவேந்தரும் அறிந்து, மிகுந்த பொறாமை கொண்டு, பெரும் படையுடன் சென்று, போர் தொடங்கினார்கள்.

(ஏ) கீழுள்ள மொழிகளைத் தொடரில் அமைக்க

வாரி வாரி, மாடி, நிகழ்ச்சி, தவழ்ந்து.

(ஐ) பாரியின் குணத்தைப் பற்றி ஐந்து சொற்றொடர் எழுது.

கோடிட்ட இடத்தை நிரப்புக

(ஒ) பாரி கடையெழு——ஒருவன்.

பசி என்று வந்தவர்களுக்குப்——வழங்குவான்.

குறிஞ்சி என்பது——நாடு.

மூவேந்தரும்——பாரியைக் கொன்றார்கள்.

கேள்விகள்

1. பாரியின் நாடு எது ?

2. வள்ளல்களின் உள்ளம் எப்படிப்பட்டது ?

3. பாரிக்கும் மூவேந்தருக்கும் ஏன் பகை ஏற்பட்டது ?

4. பாரி கொடைமடம் உடையவன் என்பதை விளக்கும் நிகழ்ச்சி எது ?

5. மூவேந்தர் பாரியை எப்படி வென்ருர்கள் ?

இலக்கணம்

அம்மா என்னும் மொழியில் உள்ள அ உயிரெழுத்து, ம் மெய் யெழுத்து, மா உயிர் மெய்யெழுத்து. அஃது என்பதில் மூன்று புள்ளி வடிவமாக உள்ள ஃ என்பது ஆய்த எழுத்து. தமிழ் மொழி யில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்த வெழுத்து என நான்குவகை எழுத்துக்களுண்டு. பாரியின் கையில் எஃகினுல் ஆன வேல்உண்டு. ஒவ்வொன்றும் இன்ன இன்ன எழுத்து என்று சொல்லு.

---

2. தமிழ்

கிடத்தி	மூழ்காமல்	பொருப்பு
தாலாட்டு	கரைத்து	தென்னன்
பண்டையது	தவிர்த்தது	சங்கம்
பண்பட்டது	துரை	ஏடு
புகல்	மதிப்பாக	தவழ்ந்த
வேங்கடம்	நடு நிலே	பேதை

கன்னியாகுமரி	சான்று	ஏனம்
ஓது	முழக்கம்	மருப்பு
தகைமை	நல்லியல்	பாவை
பொருட்டு	மறத்தல்	மருங்கு

மாணவர்களே, நாம் படிப்பது தமிழ்மொழி யல்லவா! நாம் சிறு வயது முதல் பேசியதும் தமிழ்தானே! நாம் குழந்தையா யிருந்தபோது நம் தாய், நம்மைத் தொட்டிலில் கிடத்திப் பாடிய தாலாட்டுப் பாட்டும் தமிழ்தானே! நம்மைப் பெற்ரூேர் சீரும் சிறப்புமாகக் கொஞ்சியபோது கண்ணே, மணியே, கிளியே, உயிரே, என்றெல்லாம் அழைத்தார்க ளல்லவா! அந்த மொழிகளனைத்தும் தமிழ்தானே! ஆகை யால், இந்தத் தமிழ் மொழியை நம் தாய்மொழி என்று ஏன் சொல்லக்கூடாது? கட்டாயமாகக் கூறலாம்.

நம் தாய்மொழியாகிய தமிழ், இனிமையான ஒலி யுடையது; மிகப் பண்டையது; பண்பட்டது; தெய்வத் தன்மை வாய்ந்தது. ஆகையால், இதைப் புலவர்கள், செந்தமிழ், நற்றமிழ், இன்றமிழ், பூந்தமிழ், பைந்தமிழ், கடவுட்டமிழ், தண்டமிழ், மென்றமிழ், பொற்றமிழ், தெய்வத்தமிழ் எனப் புகல் கின்ருர்கள். இனிமையான ஓசையுடையது ஆகையினு லேயே இதற்குத் தமிழ்மொழி எனப் பெயரிட்டார்கள். தமிழ் என்பதற்கு இனிமை என்றே பொருள்.

நமது தமிழ்மொழி, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்டானது. கீழ்நாட்டு மொழிகள் அனைத்திலும் சிறந் தது. வடக்கில் வேங்கடம் முதலாகத் தெற்கில் கன்னியா குமரி முனை மட்டில் வழங்கப்பட்டது. வேறு மொழியின் துணை இன்றி வழங்கக் கூடியது. அரசர்களாலும் ஏற்றுக்

கொள்ளப் பட்டது. சிவபெருமான், முருகக்கடவுள், விநாயகமூர்த்தி முதலியவர்களால் வளர்க்கப்பட்டது.

தமிழ் மொழியில் மேலான நூல்கள் உண்டு. மக்களுக்குச் சிறந்த ஒழுக்கங்களை ஓதுகின்ற நீதி நூல்கள் தமிழில் மிகவுண்டு. அவற்றுள் மிகச் சிறந்தவை திருக்குறள், நாலடியார் என்பவை. இதனாலேயே தமிழ்மொழி தகைமை மிக்கது எனப்படும்.

எண்ணத்தை எளிதில் எடுத்துக் காட்டும் திறமை தமிழுக்கே உண்டு. கடவுளைப் பாடும்பொருட்டுத் தமிழில் அமைக்கப்படும் செய்யுட்கள் மிக வுருக்கமா யிருக்கும். தமிழ்ப் பாட்டுக்கள் கல்மனத்தையும் கரைத்துவிடும். தெய்வ பக்தியை உண்டாக்கி, வளர்ப்பதில் தமிழ்போன்ற மொழி வேறு இல்லை. தமிழ்ச் செய்யுளின்மீது தெய்வமும் விருப்ப முடையது. அது எப்படித் தெரிகிறது என்கிறீர்களா! சிவபெருமான், சுந்தரமூர்த்தி நாயனாரை நோக்கி "தமிழ் பாடுக" என்றதாலும் சுந்தரர் பித்தா என்று பாடியதைக் கேட்டுப் பரமன் மகிழ்ந்ததாலும் தெரிகிறது. சம்பந்த மூர்த்தி, சிவபெருமானைக் கள்ளன் என்றதற்கும் பெருமான் பெரிதும் களித்தார். மேலும் பாண்டியனுடைய சுர நோயைத் தவிர்த்தது தமிழே; அப்பரைப் பரவையில் மூழ்காமல் செய்தது தமிழே என்பதையும் நீங்கள் படித்திருக்கிறீர்கள்.

இது மாத்திரமா, தமிழ் மொழியை வெளிநாட்டினர் பலர் புகழ்ந்திருக்கிறார்கள்.

வின்ஸ்லோ என்பவர் தமிழைப் பாராட்டிக் கூறியிருக்கிறார். கால்டுவெல் என்னும் ஆங்கிலேயர் 'தமிழ் மொழி

பண்டையது; நலஞ் சிறந்தது; உயர்ந்தது' என்றுரைத் திருக்கிறார். போப் என்னும் துரையும் மேன்மையாகக் கூறி யுள்ளார். மர்டாக்கு என்பவரும் மதிப்பாக மொழிந்திருக் கின்றனர். கிரியர்சன் தமிழின் பெருமையைத் தெரிவித் திருக்கிறார். மகாத்மா காந்தி "தமிழ் கற்றவர்கள் அறிவும் திறமையும் ஞானமும் உடையவர்களாவார்கள்" என்னும் கருத் துடன் தமிழைச் சிறப்பித்திருக்கிறார். நம் நாட்டு பூரண லிங்கம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, பாரதியார் முதலியவர்களும் தமிழே தகுதியின்மிக்க மொழி என மொழிந்திருக் கின்றனர்.

இத்தகைய தமிழ் மொழியைத் தமிழர்களாகிய நாம் நன்கு கற்கவேண்டும்; கற்பிக்கவேண்டும். 'தெருவெல் லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்'தல் வேண்டும். தமிழ் கற்றவர்கள் நாட்டுப்பற்று, ஒற்றுமையறிவு, வீரவுணர்ச்சி, நடுநிலை, தெய்வபக்தி ஆகிய நல்லியலுடையவர்களாய் இருப்பார்கள். இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், கம்பர், திருவள்ளுவர் முதலியவர்களின் சிறப்பே இதற்குச் சான்றாகும்.

ஆகையால் நாம், தமிழராகிய நாம், தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து, வாழும் நாம் தமிழை மறத்தலாகாது. தமிழ் மொழியைப் பெரிதும் பரவச் செய்தல்வேண்டும்.

பாட்டு

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து ஓர்ஏன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.

பயிற்சி 2.

(அ) பழமை, கீழ் நாடு எதிர்மொழி கூறு.

(ஆ) துணை என்பதைக் குறிக்கும் வேறு சில மொழி கூறு.

(இ) பரவை, பறவை பொருள் வேறு பாடு கூறு.

(ஈ) நூல், படி இம்மொழிகளுக்கு என்னென்ன பொருள் உண்டென்று கூறு.

(உ) தகைமை, கள்ளன், பித்தன். பொருள்எழுது.

(ஊ) நலஞ்சிறந்தது, சிறப்பித்திருக்கிறூர், மறத்தலாகாது பதம் பிரிக்க.

(எ) தனி வாக்கியங்களாகப் பிரிக்க:— பாண்டியனுடைய சுரத்தைத் தீர்த்து, அப்பரைக் கடலில் மிதக்கச் செய்து, கல்லோடு கரையேற்றிவிட்டது தமிழே.

(ஏ) இம்மொழிகளைத் தொடரில் அமைக்க:— சீரும் சிறப்பும், பண்படும், தகைமை, நாட்டினர்.

(ஐ) கோடிட்ட இடத்தில் தக்க மொழி வரைக.

1. நமக்குத் —— மொழி.
2. தமிழில் பல நீதி — உண்டு.
3. மர்டாக்கு தமிழை மதிப்பாக —.

கேள்விகள்

1. தமிழ் எப்படிப்பட்ட ஒலி யுடையது?
2. தமிழில் உள்ள நீதி நூல்களுள் சிறந்தவை எவை?
3. மகாத்மா காந்தி தமிழை எப்படிப் புகழ்ந்தார்?

இலக்கணம்

அ என்பது உயிரெழுத்து என்று சொன்னேம். அதைச் சேர்ந்த எழுத்துக்கள் பன்னிரண்டு. அவை:—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. என்பன. அவற்றுள் அ, இ, உ, எ, ஒ,

ஐந்தும் குறுகிய ஓசை யுடையவை ; ஆதலால், அவை உயிர்க் குறில் எழுத்துக்கள் எனப்படும். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எழும் நீண்ட ஓசையுடையவை ; ஆதலால், அவை உயிர் நெடில் எழுத்துக்கள். தமிழ் இனிய ஓசையுடையது ; ஆகையால், அதை எவரும் விரும்பு கிறார்கள். இந்தத் தொடரில் உள்ள உயிர்க்குறில், உயிர் நெடில் எடுத்து எழுது.

---

3. அதிவீர ராமர்

முன்னம்	ஓலை	மன்னிப்பு
பதி	தூதுவன்	கனிந்து
புலமை	பகைமை	கேளாத
விளைவாக	பூண்டிருத்தல்	முன்னர்
இறைவன்	பின்னர்	நறுந்தொகை
தொடக்கம்	அமர்	ஆளி
அரும்பியது	அமையாமல்	களைவோர்
திரட்டி	அணுகி	விளம்புவது
சமாதானம்	பணிந்து	வணக்கம்.

தமிழ் நாட்டில் முடிமன்னர் மூவர் இருந்தனர் என்றும் அவர்களுள் பாண்டியநாட்டை ஆண்டவர்கள் பாண்டியர் என்றும் முன்னமே படித்திருக்கிறீர்கள். பாண்டியர் மதுரையைத் தலைநகராகக்கொண்டு வாழ்ந்தவர்கள். அவர்களுக்குக்கீழ் சில மன்னர்கள் இருந்தார்கள். அப்படிப் பட்ட சிற்றரசர்களுள் வரதுங்கர் என்பவர் ஒருவர். வரதுங்கர் திருக்கருவை என்னும் நகரில் இருந்து ஆட்சி செய்தார். அவருக்கு ஒரு தம்பி உண்டு. தம்பியினுடைய பெயர் அதி

வீர ராமர். அவர் **தென்காசி** என்னும் பதியில் இருந்து அரசு செலுத்தினர்.

வரதுங்கரும் அதிவீர ராமரும் கல்வியில் சிறந்தவர்கள் ; அறிவு நிறைந்தவர்கள் ; ஒழுக்கத்தின் கரைகண்டவர்கள் ; கருணையும் ஈகையும் உடையவர்கள். இருவருக்கும் வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் புலமை உண்டு. ஆனல், இனிமையாகப் பாடும் வல்லமை தமிழில் பெற்றிருந்தார்கள். வரதுங்கர் தமது கவித்திறமையைப் பக்தியில் பயன்படுத்தினர். திருக்கருவையில் கோவில்கொண்டுள்ள சிவபெருமானைப் பாடிப்பாடி மகிழ்ந்தார். அதிவீர ராமருடைய கவித்திறமை மற்றவகையில் பயன்பட்டது. அதன் விளைவாக **நைடதம்** என்னும் நூல் ஒன்றைச் செய்தார். நைடதம் என்றல் நிடதநாட்டில் நிகழ்ந்தகதை என்று பொருள். அதில் கூறப்படுவது **நளன்** என்னும் மன்னனைப் பற்றிய கதை.

நைடதம் எழுதிய அதிவீர ராமர் அதை அண்ணனுக்கும் அண்ணன் மனைவிக்கும் காட்டினர். அண்ணன் 'இந்தக் கதை எழுதியதைவிட இறைவனைப் பாடியிருக்கலாம்' என்றார். அண்ணன் மனைவி 'இந்நூல் தொடக்கத்தில் சுவை நிறைந்ததாயும் போகப்போக சுவை குறைந்ததாயும் உளது' என்றார். இருவருங் கூறிய சொல்லால் அதிவீர ராமருக்குச் சினம் பிறந்தது. பின்பு அது வளர்ந்தது. அதிலிருந்து பகை அரும்பியது. நாளடைவில் அதுவும் அதிகப்பட்டது.

பகை மிகக்கொண்ட தம்பி படைமிகத் திரட்டிக் கொண்டு போருக்குக் கிளம்பினர். தம்முடன் தம்பி சமருக்கு வரும் செய்தியை வரதுங்கர் அறிந்தார். தம்பியைச்

சமாதானஞ் செய்ய நினைத்தார். ஒரு ஓலை எழுதித் தூதுவன் ஒருவனிடம் தந்தனுப்பினர். அதைத் தம்பி வாங்கிப் படித்துப் பார்த்தார். அண்ணன் என்ன எழுதியிருந்தார்? ஒரு பாட்டை எழுதியிருந்தார். அதனுடைய கருத்தென்ன? "கர்ணன், இராவணன், அருச்சுனன், முதலியவர்களைப்போல் நீ வாழ நினையாதே; இராமன், பரதன் இருவரைப்போல் இருக்க நினை" என்பதுதான்.

மேலே கூறிய கருத்தின் விவரம் என்ன? 'பகைமை பாராட்டகூடாது. அன்பு பூண்டிருத்தல் வேண்டும்' என்பதுதான். அதைப் படித்துப்பார்த்த அதிவீர ராமர் என்ன செய்தார். பின்னரும் போர்செய்ய விரும்புவாரா? இல்லை; போர் என்னும் பேரையும் மறந்தார். படைகளைத் திருப்பித் தென்காசிக்கே அனுப்பிவிட்டார். ஆ! என்ன மூடபுத்தி! அவசரத்தால் அறிவை இழந்தோமே! அண்ணனோடு அமர்புரியத் தொடங்கினோமே! யாருந் துணிவதற்கரிய காரியத்தில் நாம் துணிந்தோமே! கோபம் பாபத்துக்கு அஞ்சாது என்றபடி ஆயிற்றே! ஆறுவது சினம் என்பதை அடியோடு மறந்தோமே! என்று மனம் வருந்தினர்.

அதிவீர ராமர் மனம், வருந்தியதோடமையாமல் திருந்தியது. திருந்திய நெஞ்சம் இனி செய்யவேண்டியது யாது என நினைத்தது. அண்ணனை அணுகி அடிபணிந்து மன்னிப்புக் கேட்பதே முறை என உணர்ந்தது. அப்படியே அதிவீர ராமர் செய்தார். வந்து வணங்கிய தம்பியை வரதுங்கரும் அன்புகனிந்து அணைத்துக்கொண்டார். 'தம்பி, நீ யாது குற்றம் செய்தாய்! ஒன்றுமில்லை. வருந்தாதே, நீ கேளாத முன்னரே யான் உன்னை மன்னித்துவிட்டேன்' என்றார்.

அண்ணனுடைய அருளையும் அதி மேன்மையான குணத்தையும் அதிவீர ராமர் அறிந்தார். அவரை எப்படியும் மகிழ்வுபடுத்தவேண்டும் என யோசித்தார். உலகத்து மக்களுக்கு நல்லறிவு கூறும் நீதிநூல் ஒன்றை எழுதலாம்; அதைக்கண்டு வரதுங்கரும் அவருடைய மனைவியும் களிப்பார்கள். எனத் தெளிந்தார். அப்படியே அரிய நூல் ஒன்றை எழுதினர். அதன் பெயர் **நறுந்தொகை**. அதன் முதல் பாட்டு

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசேகரன் புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னல்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே

என்பதாகும். இப்பாட்டின் முதலில் வெற்றி வேற்கை எனத் தொடங்கி யிருப்பதால், அதிவீர ராமர் எழுதிய நீதி நூலாகிய நறுந்தொகையை **வெற்றிவேற்கை** என்றும் விளம்புவதுண்டு. அந்த நீதிநூலின் முதலில் கடவுள் வணக்கமாகவும் குரு வணக்கமாகவும் ஒரே பாட்டு எழுதப்பட்டுள்ளது. அது '**எழுத்தறிவித்தவன் இறைவனாகும்**' என்பது. தமிழ் நாட்டுப் புரவலனாகவும் தமிழ்ப் புலவராகவும் விளங்கிய அதிவீர ராமர் எல்லோராலும் புகழப்பட்டு வருகிறார்.

பயிற்சி 3.

(அ) தந்தனுப்பினர், வருந்தியதோடமையாமல் பதம் பிரிக்க.

(ஆ) நெஞ்சம், அணுகி, புகல் பொருள் எழுது.

(இ) குற்றம் என்பதைக் குறிக்கும் சில மொழி எழுது.

(ஈ) அறிய, அரிய பொருள் மாறுபாடு கூறு.

(உ) தூதுவன், திருப்பி, திருந்திய, இம்மொழிகளைத் தொடரில் அமைக்க.

(ஊ) அண்ணனை அணுகி, அடி பணிந்து, மன்னிப்பு கேட்பதே முறை என உணர்ந்தார். தனி வாக்கியங்களாகப் பிரித்தெழுது.

(எ) அதிவீர ராமர் செய்தியைப் பற்றிய ஐந்து சொற்றொடர் எழுது.

(ஏ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தமிழ் —— முடி —— மூவர் ——.
2. இருவரும் கூறிய —— அதிவீர ராமருக்குச் ——.
3. எழுத்து —— இறைவன் ——.

கேள்விகள்

1. பாண்டியருடைய தலைநகரம் எது ?
2. அதிவீரராம பாண்டியர் எங்கே வசித்தார் ?
3. அதிவீரராமர் எழுதிய நூல்கள் எவை ?

இலக்கணம்

அது, இது, என்னும் மொழிகள் ஏதாவது ஒன்றைச் சுட்டிக் காட்டவரும். அப்படியே அப்பையன் இப்பசு என்று வரும். ஆகையால் அ, இ, இரண்டும் சுட்டெழுத்து எனப்படும்.

எது ? ஏன் ? என்னும் மொழிகள் கேள்வியின் பொருட்டு வரும். அப்படியே அவனோ ? வீட்டிலா ? என்றும் வரும். ஆகையால் ஆ, எ, ஏ, ஓ இந்த நான்கு எழுத்தும் வினா எழுத்து எனப்படும்.

அந்த வீடு எவனுடையது? இந்த மரம் உன்னுடையதா? இப்பசு பெரியதோ? அப்பசு ஏன் ஓடுகிறது? இத்தொடர்களில் உள்ள சுட்டெழுத்து, வினா எழுத்துக்களை எடுத்தெழுது.

---

4. பார்த்தன் தவம்

கௌரவர்	அமலன்	கொட்டி
தணிய	சித்தம்	ஆர்ப்பரித்து
பிரிவினர்	இளகியது	மூண்டது
பாசுபதம்	வடிவம்	விமலன்
திருநீறு	வேடன்	பெருமான்
கண்டிகை	வேடுவச்சி	மோதியது
பொருட்படுத்த	கணங்கள்	நாயகன்
மகிமை	கணை	மூர்ச்சை
அசைந்தது	வலி சண்டை	நடித்தார்
பலியாது	தவசி	பாலன்
கைகூடும்	பிதற்றுதீர்கள்	மற்போர்
தேவராஜன்	எய்ய	உரம்
வாகு	முதல்வன்	மயங்கினான்
இளைத்தான்	முனிவு	சோதி
கரங்கள்	அங்கை	விண்

அஸ்தினபுரத்தில் கௌரவரும் பாண்டவரும் வாழ்ந்தார்கள். அவர்களுக்குள் பகை ஏற்பட்டிருந்தது. என்பதை முன் வகுப்பில் படித்தோம் அல்லவா! அதன் பின்பும் அவர்களுக்குள் பகை தணியவில்லை. அதே காரண

மாக இரு பிரிவினரும் சூதாடினர்கள். அதில் பாண்டவர்கள் தோற்றார்கள். ஆகையால், அவர்கள் பனிரண்டு வருஷம் காட்டில் வாழவும் ஒரு வருஷம் மற்றொரு நாட்டில் உரு மறைந்து வாழவும் ஏற்பட்டது.

வனம் போன பாண்டவரைப்பற்றி அனைவரும் இரங்கினார்கள். அவர்களுடைய பாட்டனாராகிய வியாசர், அவர்களைக் காணச் சென்றார். பாண்டவர் படும் துன்பத்தைக் கண்டு பதறினர்; கதறினர்; கண்ணீர் பெருக்கினர்; 'விதி யாரையும் விடாது' என்று கருதினர். பின்பு "தருமா, துரியோதனன் உங்களுக்கு நாடு கொடுக்கமாட்டான்; ஆகையால், எப்படியும் போர் விளையும். அப்போரில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால், அருச்சுனன் கைலை மலைக்குச் செல்லவேண்டும்; சிவபெருமானைக் கருதித் தவம் புரியவேண்டும்; அவரிடம் உள்ள பாசுபதம் என்னும் அம்பைப் பெறவேண்டும்" என்றார்.

அதை அருகிலிருந்து கேட்டறிந்த விஜயன் 'விர்' என்று கிளம்பினான்; விரைவாக நடந்தான்; நேரே கைலையங்கிரிக்குப் போனான்; அங்கே ஓரிடத்தில் தவம் புரியத் தொடங்கினான். அவன் திருநீறு பூசினான்; கண்டிகையணிந்தான்; ஒரு காலைத்தூக்கி ஒரு காலால் நின்றான். வெய்யில், மழை, பனி, காற்று எதையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவனுடைய தவ மகிமையால் இந்திர உலகம் அசைந்தது. உடனே இந்திரன் எழுந்து கைலைச்சாரலுக்கு வந்தான். அருச்சுனன் எதிரில் தோன்றினான். "நீ தவம் புரிவது வீண்; சிவபெருமான் உனக்குக் காட்சி தரமாட்டார். உன் எண்ணம் பலியாது" என்றான். அதைக்கேட்ட

தனஞ்சயன் "எப்படியாயினும் ஆகட்டும்; என்றனல் இயன்ற வரையில் தவம் புரிவேன்" என்றுரைத்தான். அதைக்கேட்ட தேவராஜன் மகிழ்ந்து நல்வரந்தந்து போனுன்.

இதற்குள் அருச்சுனன் தவம் புரிவதைத் துரியோதனன் அறிந்தான். மூகன் என்னும் அரக்கனை அழைத்தான். "நீ சென்று பார்த்தனுயிரைத் தீர்த்து வா" என அனுப்பினுன். அவன் பெரிய பன்றி வடிவுடன் வந்தான். அருச்சுனனைக் கொல்லச் சமயம் பார்த்துப் பதுங்கி யிருந்தான்.

தனஞ்சயன் தவம் புரிவதையும் மூகன் மறைந்திருப்பதையும் அறிந்த சிவபெருமான் வேட வடிவமாய் வந்தார். பார்வதியும் வேடுவச்சியாகி முருகனை வேடப் பிள்ளையாக்கிக் கொண்டு பரமனுடன் வந்தார். சிவகணங்களும் வேடுவர்களாக வந்தனர். தவத்திலிருந்த காண்டீபன் எவ்விதமோ பன்றியைப் பார்த்துவிட்டான். அது, தன் தவத்தைக் கெடுக்கும் என்றும் உணர்ந்தான். உடனே ஒரு அம்பை அதன் முகத்துக்கு நேராக விட்டான். அதே நேரத்தில் வேடனும் கணை விட்டான். அக்கணை பன்றியின் பின்புறம் பாய்ந்தது. உடனே பன்றி பதைத்துத் துடித்து, விழுந்து இறந்தது.

சிவ வேடனுடன் வந்த வேடுவர் விஜயனை வலி சண்டைக்கிழுக்க நினைத்தனர். "தவசியே நாங்கள் அடித்த பன்றியை நீ ஏன் அடித்தாய்? தவம் புரிகிற நீ வேட்டையாடலாமா? பொய்த்தவம் புரிய வந்தாயோ" என்ருர்கள். அதனல், அருச்சுனனுக்குக் கோபம் பிறந்தது. "அடே வேடுவர்களே. வீணுகப் பிதற்றுகிறீர்கள். நான்தான் முதலில்

அடித்தேன்; எனக்கு வேண்டுமென்று நான் அதை எய்ய வில்லை; ஒன்றும் பேசாமல் அதை எடுத்துக்கொண்டு ஏகுங்கள்" என்றான்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த முதல்வனாகிய வேடன், மிக முனிவோடு "அடா, கள்ளத் தவசியே, நீ யார்? எந்த ஊர்?" எனக் கேட்டான். அருச்சுனன் தன் வரலாற்றை உள்ளபடி கூறினான். அதைக்கேட்ட அரனாகிய வேடன் அங்கை கொட்டி, ஆர்ப்பரித்துச் சிரித்தான். "உன் பெயர் விஜயனா! பெயரைக் கேட்டுப் பயந்து போகிறவன் நான் அல்லன். நில் சண்டைக்கு" எனத் தொடை தட்டிப் புஜமுந் தட்டினான்.

வாகு தட்டி வந்தவனைக் காண்டீபன் விடுவானா? தானும் தோள் தட்டிப் போர் தொடங்கினான். இருவருக்கும் விற்போர் நடந்தது. ஒருவர்க்கொருவர் விட்ட கணைகளுக்குக் கணக்கில்லை. நெடுநேரம் நிகரற்ற கடும்போர் நிகழ்ந்தது. கடவுள் எதிரில் காண்டீபன் ஈடாவானா! சற்றே இளைத்தான்; அவனுடைய கரங்களும் தொடைகளும் நடுங்கின; அருகில் இருந்த ஒரு மரத்தினடியில் ஒதுங்கி மறைந்தான்.

அப்போதுதான் அமலனாகிய சிவபெருமானுக்குச் சித்தம் இளகியது. ஓர் அம்பு விட்டு அருச்சுனனுடைய கைவில்லை முறித்தார். அதனால், அவனுக்குச் சினம் மூண்டது. வில்லை ஓங்கி விமலனது முடியில் அடித்தான். எங்கும் நிறைந்த இறைவன் மீதுபட்ட அடி எல்லா உயிர்களின் மீதும் தாக்கியது. முக்கண் மூர்த்தி சிறிது நேரம் மூர்ச்சையாயினதே போல நடித்தார். அதுகண்ட பார்வதியும் பதைத்தார். பக்கலில் இருந்த பாலனும் கலங்கினான்.

வில்லை ஓங்கி விமலனது முடியில் அடித்தான்

இருவர் நிலையையும் கண்ட இறைவன் எழுந்தார். பின்னும் மற்போருக்கு மார்பு தட்டினர். விஜயன் விட்டானா! இல்லை. இருவரும் கைக்குத்து விட்டுக் கொண்டிருந்தனர். திடீரென்று சிவபெருமான் பார்த்தனைத் தூக்கி வானில் எறிந்தார். ஆனல், அருச்சுனன் கீழே விழாமலே குதித்தெழுந்தான்; எதிர்த்தோடினன்; எதிர் நின்ற வேடனைக் காணாது மயங்கினன்.

மயங்கினவனுக் கெதிரில் வானில் ஓரொளி தோன்றியது. நிமிர்ந்து பார்த்தான் விஜயன். அந்த ஒளியில் கண்டான் கைலைப் பெருமானை. உமையும் குமரனும் உடன் தோன்றினர்கள். பார்த்தன் பாடினன்; ஆடினன்; பாதத்தைப் பணிந்தான். "பரமனே பாசுபதக்கணை தந்தருளும்" என வேண்டினன்.

விமலன் விண்ணிலிருந்து இறங்கினர்; தனஞ்சயனைத் தழுவினர்; "அன்பனே, பன்றியாக வந்தவன் அரக்கன். அவனைக் கொல்லவே நான் வேடனக வந்தேன். இதோ, என் கணையும் இதற்குத் தக்கவில்லும் தூணியும் பெற்றுக் கொள்" என இந்தருளினர். பார்த்தன் பணிந்து சென்றான்.

பசுபதி தந்த பாசுபதத்தால் பார்த்தன் பகைவரை வென்றான். நாடு பாண்டவர்க்குக் கிடைத்தது.

பயிற்சி 4.

(அ) கண்ணீர், எப்படியாயினும், வரந்தந்து பதம்பிரிக்க.

(ஆ) இறந்தது, சிரித்தான் எதிர்பதம் எழுது.

(இ) கோபம் என்பதைக் குறிக்கும் சில மொழிகள் எழுது.

(ஈ) ஒரு, ஒறு அர்த்தம் எழுது.

(உ) மூண்டது, தாக்கி, மயங்கினன் தொடரில் அமைக்க.

(ஊ) இந்திரன் எழுந்து கைலைக்குவந்து தவம் புரிகின்ற தனஞ்சயன் எதிரில் தோன்றி "ஏன் தவம் புரிகிருய்" எனக் கேட்டான். தனித்தனி சொற்ருெடராக எழுது.

(எ) இந்திரன் பார்த்தனிடம் கூறிய மொழிகளை எழுது.

(ஏ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பார்த்தனுடைய—மகிமையால்—அசைந்தது.
2. மூகன்—வடிவுடன்—காட்டை—.
3. சிவவேடனும்—மீதுகணை—.

கேள்விகள்

1. பாண்டவர்க்கு வியாசர் கூறியது யாது?
2. அருச்சுனன் எதன் பொருட்டு கைலைக்குப் போனன்?
3. வேடனுகவந்து விஜயனிடம் போர் செய்தவர் யார்?
4. எதன் உதவியால் பாண்டவர்க்கு வெற்றி கிடைத்தது?

இலக்கணம்

க் முதல் ன் வரையில் பதினெட்டு எழுத்தும் மெய் எழுத்து. அவற்றுள் க், ச், ட், த், ப், ற் ஆறும் வல்லின மெய் எனப்படும். ங், ஞ், ண், ந், ம், ன், ஆறும் மெல்லின மெய் எனப்படும். ய், ர், ல், வ், ழ், ள், ஆறும் இடையினம் எனப்படும்.

எழுத்தறி வித்தவன் இறைவனகும்.

மெய்யே பேசினல் மேன்மை அடைவாய்

கற்கை நன்று. இவற்றிலுள்ள வல்லின, மெல்லின, இடையின மெய்களை எடுத்தெழுது.

5. உலோகங்கள்

உலோகம்	கம்பி	நிலக்கரி
பொன்	பாதரசம்	எஃகு
வெள்ளி	ஆவி	பீரங்கிக் குண்டு
செம்பு	சவரன்	கப்பல்
இரும்பு	நாணயம்	பதார்த்தம்
ஈயம்	பாத்திரம்	துப்பாக்கி
சுரங்கம்	தாமிரம்	துத்தநாகம்
கனி	களிம்பு	வெண்கலம்
கனிஜப்பொருள்	நச்சுத்தன்மை	பளு
கலப்பு	பாண்டங்கள்	இங்கிலாந்து
அபரஞ்சி	ஏற்று	பார்த்திங்கு
குன்றுத	சமையல்	ஷில்லிங்
தகடு	கந்தகம்	பென்னி

நிலத்திலிருந்து கிடைக்கும் பொருள்களுள் உலோகம் என்பது ஒருவகை. உலோகத்தில் பல பிரிவு உண்டு. அவை பொன், வெள்ளி, செம்ப, இரும்பு முதலியவை. இந்த உலோகங்கள் பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படுகின்றன. அப்படி வெட்டப்படும் இடங்களுக்குச் சுரங்கம் என்று பெயர். அதைக் கனி என்றுங் கூறுவதுண்டு. கனியில் இருந்து எடுக்கப்படுவதால் உலோகங்களைக் கனிஜப் பொருள்கள் என்பது வழக்கம். உலோகம் ஒவ்வொன்றைப் பற்றியும் சிறிது கூறுவோம்.

தங்கம்:—இதைப் பொன் என்றும் புகலலாம். இதன் நிறம் பசுமை கலந்த மஞ்சள். ஆனல், கலப்பில்லாத தங்கம்

மஞ்சளைப் பிளந்தது போல் இருக்கும். அதை அபரஞ்சி என்பார்கள். மற்ற உலோகங்களைக் காட்டிலும் தங்கம் கனமானது; பளபளப்புடையது; நயமானது; என்றும் குன்ருத ஒளியுடையது. பொன்னில் துருபிடிப்பதில்லை.

பொன்னினுல் மிக மெல்லிய தகடுகளும் கம்பிகளும் செய்யலாம். இது சுரங்கத்திலிருந்து எடுபடும்போது கல்லோடும் மண்ணேடும் கலந்திருக்கும். அவற்றை மொத்தமாகப் பொடிசெய்து பாதரசத்தில் கூட்டுவார்கள். பொன் மாத்திரம் ரசத்தில் ஒட்டிக்கொள்ளும். பின்பு அதைக் காய்ச்சுவார்கள். அப்போது ரசம் ஆவியாய்ப்போகும். நின்ற பொன் சுத்தமாயிருக்கும்.

பொன் அணிகள் செய்யவும் சவரன் ஷில்லிங்கு என்னும் நாணயங்கள் செய்யவும் உதவுகிறது. பணக்காரர்கள் பாத்திரமும் செய்வார்கள். இந்தியாவில் மைசூரைச் சேர்ந்த கோலாரிலும் அனந்தபுரம் ஜில்லாவிலும் பொன் கிடைக்கின்றது.

வெள்ளி :—இது வெண்மை நிறமும் ஒளியும் உடையது. இது பொன்னைவிடச் சிறிது குறைந்த கனமுடையது. என்ருலும் இதிலும் துருப்பிடிப்பதில்லை. கலப்பில்லாத வெள்ளி எப்பொழுதும் ஒளி குன்றுவதில்லை. அதைச் சொக்க வெள்ளி என்பது வழக்கம். சுத்தமான வெள்ளி, மிகவும் நயமானது. இதையும் மெல்லிய தகடாகவும் கம்பியாகவும் நீட்டலாம். சுரங்கத்திலிருந்து எடுபடும் வெள்ளி இயத்துடன் கலந்திருக்கும். கலப்பின்றிக் கிடைப்பதும் உண்டு.

வெள்ளியினுல் நகைகளும் பாத்திரங்களும் செய்யலாம். வெள்ளியுடன் சிறிது தாமிரத்தைக் கலந்து பணங்கள்

செய்கிறார்கள். நம் நாட்டில் ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் ஆகிய நாணயங்கள் வெள்ளியால் செய்யப்பட்டவை. அரைக்கால் ரூபாயும் வெள்ளியால் செய்யப்பட்டிருந்தது.

செம்பு :—இது, சிவந்த நிறமுடையது. இதைத் தாமிரம் என்றுங் கூறலாம். இதனால் கம்பிகளும் தகடுகளும் செய் யப்படுகின்றன. பாத்திரங்களும் செய்வதுண்டு. இந்த உலோகம் களிம்பு பிடிக்கும். களிம்பு நச்சுத் தன்மையுடை யது. ஆதலால், தாமிரப் பாண்டங்களுக்கு இயம் பூசுவார் கள். செம்பினால் பை, காலணா, முதலியன செய்வார்கள். செம்பு சூட்டை விரைவில் ஏற்றுக்கொள்ளும். அதனாற் றான் செப்புப் பாத்திரங்களில் சமையல் செய்வது வழக்கம்.

இரும்பு :—இது சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும்போது மண், கந்தகம் முதலியவற்றுடன் கூடியிருக்கும். இரும்பில் பலவகை யுண்டு. அவை வார்ப் பிரும்பு, வினை யிரும்பு, எஃகு. இவற்றுள் வார்ப் பிரும்பில் நிலக்கரியும் கலந்திருக் கும். அது விரைவில் உருகும்; அப்படியே ஒடியும். வினை யிரும்பு அப்படி உருகாது; காய்ச்சினால் மெதுப்படும். எஃகு வளையும்; ஆனாலும் விரைவில் ஒடியாது. இதனால் பீரங்கிக் குண்டு, கத்தி, சண்டைக் கப்பல் முதலியன செய்வார்கள். ஆகையால், எஃகிரும்புக்கு விலை அதிகம்.

ஈயம் :—இது சாம்பல் நிறமுள்ளது. இதில் இருவகை யுண்டு. அவை வெள்ளீயம், காரீயம் என்பன. இயம் காகி தத்தின்மேல் கருமையாய் எழுதும். தாமிரப் பாத்திரங்கட்கு உட்புறத்தில் இயத்தைப் பூசினால் களிம்பு ஏற்படாது. தனி இயத்தாலும் பாண்டங்கள் செய்வதுண்டு. இதனால் துப்பாக்கிக் குண்டுகளும் செய்கிறார்கள்.

தகரம் :—இது வெண்மையானது ; அதிக கனம் இல்லாதது ; விரைவிலும் எளிதிலும் உருகுவது. இதைத் தாமிரத்துடன் சேர்த்தால் வெண்கலமாகும். தகரத்தில் துருப்பற்றுவதில்லை. ஆதலால் இரும்புத் தகடுகளின் மீது இதைப் பூசுவார்கள். கலாய் செய்வதற்கும் இது பயன்படுகிறது.

பித்தளை :—இது ஒரு கலப்பு உலோகம். தாமிரமும் துத்தநாகமும் கலந்ததே பித்தளை. இது பசுமையான மஞ்சள் நிறமுடையது ; துருப் பிடியாதது. ஆயினும் தேய்த்துக் கொண்டிருந்தால் தான் ஒளிரும். இது திடமான பொருள்; எளிதில் உருகிவிடும். இதனல் கம்பிகளும் தகடுகளும் செய்யலாம். பித்தளையினலேயே பெரும்பாலும் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. இதுவும் களிம்பு பிடிக்குந் தன்மையுடையது. ஆகையால், ஈயம் பூசியே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.

வெண்கலம் :—தாமிரம், துத்தநாகம், தகரம் மூன்றின் கூட்டுப் பொருளே இது. இது ஒளியில் சிறந்தது. ஓசை மிக்கது. திடமும் பளுவும் உடையது. இதனல் பாத்திரங்கள் செய்வதுண்டு. நம்மையும் தவறி அப்பாண்டம் கீழே விழுந்தால் உடனே உடைந்து விடும். இங்கிலாந்தில் இதனல் சில நாணயங்கள் செய்யப்படுகின்றன. அவை பார்த்திங், அரைப்பென்னி, பென்னி எனப்படுபவை.

இன்னும் சில உலோகங்கள் உள. அவைகளைப் பற்றி மேல் வகுப்புக்களில் படிப்போம்.

பயிற்சி 5.

(அ) கலப்பில்லாத, துருப்பிடிப்பதில்லை, பதம்பிரிக்க.

(ஆ) நயமானது, கலந்து, ஒளிரும் எதிர் மொழி வரைக.

(இ) கனி, வெள்ளி. இரு பொருள் எழுது.

(ஈ) குன்றுத, கலப்பு, நகை, நஞ்சு தொடரில் அமைக்க.

(உ) கனியில் இருந்து எடுக்கப்படுவதால் உலோகங்களுக்கு கனிஜப் பொருள் எனப் பெயர். தனி நிலைத் தொடர்களாக்கு.

(ஊ) பொன்னைப்பற்றிப் பத்து சொற்றொடர் எழுது.

(எ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கலப்பில்லாத —— மஞ்சளைப் —— இருக்கும்.
2. பொன்னினால் —— மெல்லிய தகடுகள் ——.
3. வெள்ளியினால் ——— செய்யலாம்.
4. செம்பு —— விரைவில் ——.
5, தகரத்தை —— சேர்த்தால் வெண்கலம் ——.

கேள்விகள்

1. அபரஞ்சி என்று எதற்குப் பெயர் ?
2. செப்புப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவது ஏன் ?
3. பித்தளையில் கலந்துள்ள உலோகங்கள் எவை ?
4. வெண்கலத்தால் செய்யப்படும் நாணயங்கள் எவை ?

இலக்கணம்

உயிர் எழுத்து மெய்யுடன் சேர்ந்தால் உயிர் மெய் எழுத்து (அதாவது உயிர் கூடிய மெய் எழுத்து) எனப்படும். க என்னும் உயிர்மெய் யெழுத்து அ என்னும் உயிர் கூடிய க் என்னும் மெய் யெழுத்து. அப்படியே 12 உயிரும் 18 மெய்யுடன் சேர்ந்தால் $12 \times 18 = 216$ உயிர் மெய் யெழுத்தாகும்.

இரும்பு கருமையான நிறமுடைது. இதிலுள்ள உயிர் மெய் எழுத்துக்களை மெய் வேறு உயிர் வேறாகப் பிரித்துக் காட்டு.

6. இரவிவர்மா

வரைவது	குழவி	தீட்ட
ஓவியம்	சிறுன்	வல்லவர்கள்
சித்திரம்	முணுமுணுத்தல்	உணர்ச்சி
பழகினவர்கள்	மேன்மேலும்	அச்சு எந்திரம்
அலங்காரம்	ஆக்கம்	க்ஷத்திரியர்
முந்தை	நேத்திரம்	வர்மா
மலையாளம்	கவரும்	வமிசம்
குக்கிராமம்	கவின்	

உலகத்தில் எத்தனையோ பொருள்கள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் உருவம் வேறு. ஒன்றினுடைய உருவத்தைப் போல மற்றொன்றுக்கு அமைவதில்லை. அவைகளின் உருவத்தைப் பார்த்து வரைவது ஒரு கல்வி. அதை ஓவியக் கல்வி என்பார்கள். ஓவியம் என்றாலும் சித்திரம் என்றாலும் ஒன்றே. சித்திரம் வரையும் திறமை எல்லாருக்கும் ஏற்படாது. ஔவையார் "சித்திரமும் கைப்பழக்கம்" என்று உரைத்திருந்தாலும் பழகினவர்களுக் கெல்லாம் திறமை வந்து விடுகிறதா!

ஓவியம் வரையும் திறமையுடையவர்கள், நம் நாட்டில் முன் காலத்திலேயே இருந்தார்கள். அவர்கள் செய்த வேலைகளை நாம் இப்போதும் காணலாம். மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, மகாபலிபுரம், வேலூர் முதலிய இடங்களிலுள்ள கோட்டை, கோயில்களில் மிகத் திறமையான வேலைப்பாடுகள் உண்டு.

ஆனால், அழகான ஓவியங்களை நம் வீடுகளில் வைத்து அலங்காரம் செய்யும் உதவி அவர்களால் நமக்கு அதிகமாகக் கிடைக்கவில்லை. முந்தைக் காலத்து ஓவியப் படங்கள் விலை யேறப்பெற்றவை. அந்தக் கஷ்டத்தை நீக்கி ஏழை எளியவர்களின் இல்லத்திலும் சித்திரப் படம் இருக்கச் செய்தவர் இரவி என்பவர். அவரைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?

இந்தியாவிலே தென்மேற்கில் திருவாங்கூர் ராஜ்யம் என்று ஒன்று உண்டு. அது மலையாள நாட்டை யடுத்தது. அதனை ஆண்ட அரசரின் குலத்தைச் சேர்ந்தவர்கள் பலர், அவர்கள், தனித்தனி ஒவ்வொரு ஊரில் வசிந்திருந்தார்கள். அவ்விதமே கிளிமானூர் என்னும் குக்கிராமத்திலும் ஒரு குடும்பம் வாழ்ந்திருந்தது. அந்தக் குடும்பத்தில் ஏறக்குறைய நூறு வருஷத்துக்கு முன் ஒரு ஆண் குழவி பிறந்தது. அக் குழந்தைக்குப் பெற்றோர் இரவி என்னும் பெயரிட்டு வளர்த்தனர்.

இரவிக்குக் கற்கும் வயது வந்தவுடன் பள்ளியில் விட்டார்கள். அக்கறையாகவும் அறிவுடனும் இரவி கல்வி கற்றார். ஆயினும், எழுத்துக் கல்வியைக் காட்டிலும் ஓவியக் கல்வியில் அவர்க்கு அதிக விருப்பம் இருந்தது. ஆகையால், அச் சிறு வயதிலேயே எப்பொழுதும் சித்திரம் வரைந்து கொண்டிருப்பார். இவருடைய வீட்டில் எங்கும் சித்திரமே நிறைந்தது. கையில் ஒரு கரித்துண்டை எடுத்துக் கொண்டால் நேரங்கழிவதும் அவர்க்குத் தெரிவதில்லை. வெள்ளைச்சுவர் முழுதும் கறுப்புச் சித்திரமாக்கி விடுவார்.

அரசர் குலத்தில் பிறந்த ஒரு சிறுவன் இப்படிச் சித்திரம் எழுதும், வேலையில் முயல்வதை அவருடைய உறவி

னர் ஏற்றுக்கொள்ளவில்லை. பலர் காணுமல் முணுமுணுத்தார்கள். நேரகவே மறுத்துப் பேசினுர்கள் சிலர். யார் என்ன சொல்லியும் இரவியின் ஊக்கம் குறையவில்லை. மேன்மேலும் அதே முயற்சியில் இருந்தார். இவருடைய ஊக்கத்தையும் தொழில் ஆக்கத்தையுங் கண்டு களித்தவர் இராஜவர்மா என்பவர். அவர் இரவிக்கு மாமன். இரவியின் சித்திரவேலைக்கு இராஜ வர்மா துணைசெய்யவுந் தொடங்கினுர். ஒவ்வொரு படத்தையும் பார்த்து “பேஷ், பேஷ்; மிகவும் அழகு; நன்ருயிருக்கிறது; நிரம்பப் பொருத்தமாயிருக்கிறது; இப்படித்தான் இருக்க வேண்டும்; நாளுக்கு நாள் திறமையாய் எழுதுகிருய்” என்று ஊக்கிவந்தார்.

நாளேற நாளேற ரவியின் சித்திரம் நேத்திரத்தைக் கவரும் கவின் பெற்றது. கண்டதைக் கண்டபடியே எழுதும் நிலைக்கு வந்தார். இவருடைய சித்திரத்தை திருவாங்கூர் அரசரும் அரசியும் ஒருமுறை கண்டார்கள். அவர்களும் மிக மகிழ்ச்சி கொண்டு ரவியை மெச்சினுர்கள். மேலும் அதில் வளர்ச்சியடைவதற்கு உதவியுஞ் செய்தார்கள். சித்திரம் எழுதுவதென்ருல் எளியகாரியமா? அதில் முழுதும் தேர்ந்த ரவி, பின்பு வர்ணப்படம் தீட்ட ஆசை கொண்டார். அதற்காக அதில் வல்லவர்களுடன் சேர்ந்து பழகினுர். சில நாட்களுக்குள்ளாகவே அதிலும் கெட்டிக்காரராயினுர்.

இரவி வர்ண படம் வரையவல்லவரான பின்பு அவர்க்குப் புதிய உணர்ச்சி ஒன்று உண்டாயிற்று. அது என்ன என்கிறீர்களோ! பழைய கதைகளாகிய இராமாயணம், பாரதம், முதலியவற்றில் சொல்லப்படும் நிகழ்ச்சிகளை எழுதிக் காட்டவேண்டும் என்பதுதான். அப்படியே அவர்

பல கதைகளின் பகுதிகளைப் படங்களாக எழுதினர். அவற்றைக் கண்டவர்கள் ரவியை மிகவும் பாராட்டத் தலைப்பட்டார்கள். அப்போது அவர் மற்றொரு எண்ணமும் கொண்டார். நிறங்களோடு கூடிய படங்கள் குறைந்த விலைக்கு விற்கப்பட்டால் ஏழைகளும் வாங்கி வீடுகளில் வைப்பார்களே என்று அவர் எண்ணினர். அதற்காகப் பம்பாய் நகரில் ஒரு அச்சியந்திர சாலையை அமைத்தார். அதில் படங்களை அச்சிட்டு மிகக் குறைந்த விலைக்குச் சிறந்த படங் கிடைக்கும்படி செய்தார். இதனுல், இரவியின் பெயர் எங்கும் பரவிற்று.

இரவி க்ஷத்திரிய வமிசத்தைச் சேர்ந்தவரல்லவா? ஆகையால், வர்மா என்ற பட்டங்கூடி இரவி வர்மா என்னும் பெயர் வழங்கியது. அதிலும் ராஜ குடும்பத்தவர் ஆதலின் இராஜா ரவி வர்மா எனப்பட்டார். கல்வி, மனிதரை மிக மேன்மைக்குக் கொண்டு வருகிறது என்பது இவர் வரலாற்ருல் விளங்குகிறதல்லவா!

பயிற்சி 6.

(அ) ஒன்றினுடைய, பொருத்தமா யிருக்கிறது பதம் பிரிக்க.

(ஆ) ஓவியம், அலங்காரம், சிருன், மறுத்து, ஆக்கம் பொருள் கூறு.

(இ) எளிய காரியம் எதிர் பதம் எழுது.

(ஈ) எழுத என்பதைக் குறிக்கும் சில மொழிகள் எழுது.

(உ) குலம், குளம் பொருள் எழுது.

(ஊ) முணுமுணுத்தார்கள், ஏழை எளியோர், தனித்தனி தொடரில் கூட்டி எழுது.

(எ) இரவிவர்மாவின் திறமையைப்பற்றி நான்கு சொற்றொடர்கள் எழுது.

(ஏ) கோடிட்ட இடத்தை நிரப்புக

1. சித்திரமும் — —.
2. திருவாங்கூர் — —அடுத்தது.
3. இரவிவர்மா —— ஒரு அச்சு எந்திரசாலை —.

கேள்விகள்

1. இரவி எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்?
2. ‘சிலர் இரவியை முணு முணுத்தார்கள்’ ஏன்?
3. இரவியைச் சித்திரம் எழுத ஊக்கியவர் யார்?
4. இரவிக்குச் சித்திரம் பழக உதவி செய்தவர் யார்?

இலக்கணக் கேள்விகள்

1. தமிழ் எழுத்தின் வகை எத்தனை?
2. உயிர் எழுத்தில் என்னென்ன வகை உண்டு?
3. மெய்யெழுத்தின் வகை எவை?
4. ஆய்த எழுத்தின் உருவம் எப்படியிருக்கிறது?
5. உயிர் மெய் எழுத்து எப்படி உண்டாகிறது?

---

7. வில் வீரன்

பல்லாயிரம்	காக்க	நேர்ந்தன
கலைகள்	இராக்ஷசி	துரத்தி
ஈடேற்றி	கொடியவள்	மராமரம்
பாணம்	தீயவள்	தொளை
உண்டைவில்	யாகசாலை	பாற்கடல்
பாங்கி	செம்மையாக	கடைய
தொலைவில்	எதிர்த்தார்	துரும்பு
இலக்கு	சமானம்	சம்பவித்தது
அவுணர்	அவனிபர்	கோதண்டம்

இராமனைப்பற்றி முன் வகுப்பில் ஒரு கதை படித்தோம் அல்லவா இராமன் சூரிய குல மகன். சூரிய குலம் என்பது பல்லாயிர வருஷமாக அரசாண்ட மரபு. அது ரகு வமிசம் எனவும்படும். அதில் பிறந்த அனைவருமே அறிவு, ஒழுக்கம், ஆண்மை, கொடை, ஆட்சி முதலியவற்றில் சிறந்திருந்தார்கள். ஆனாலும் அவர்களுள் இராமன் எல்லாவற்றாலும் ஏற்ற முடையவன். அவன் ஒரு வில் வீரன். ஆகையால், அவனுடைய வீரச்செயல்களுள் சில வற்றை இங்கே கூறுவோம்.

இராமன் இளமையிலேயே எல்லாக் கலைகளையும் கற்றிருந்தான். ஆயினும் வில்வித்தையில் அவனுக்கு மிக்க திறமையுண்டு. இராமன் எதை எய்வதாயினும் ஒரே அம்பு தான் விடுவான். அந்த அம்பு குறிதவறாமல் அவன் எண்ணியதை இடேற்றிவிடும். ஆகையினால், உலகத்திலுள்ளவர்கள் சிறந்த ஒரு சொல்லைக் கூறுமிடத்து ‘அப்பா! அந்தச் சொல் இராமபாணம் போல் இருக்கிறது’ என்பார்கள்.

இராமன் சிறுவயதிலேயே உண்டைவில் பழகினான். அரண்மனையில் ஒரு பாங்கி யிருந்தாள். அவள் கூன் முதுகுடையவள். அவள் போகும்போதும் வரும்போதும் ராமன் உண்டையால் கூனை அடிப்பான். தொலைவில் இருந்து விளையாட்டுக்கு அடித்தாலும் அவனுடைய இலக்கு தவறுதல் இல்லை. இப்படிப்பட்ட இராமனை விசுவாமித்திரர் தம்மோடு கூட்டிச் சென்றார். தனியாகவா! இல்லை. தம்பியையும் உடன் கூட்டி, அழைத்துச் சென்றார். ஏன்? அவர் செய்யும் யாகத்தை அவுணர்கள் அழிக்கத் தொடங்கினார்கள். அவர்களைப் போக்கவும் யாகத்தைக் காக்கவும் அழைத்துச் சென்றார்.

போகும் வழியிலேயே தாடகை என்னும் இராக்ஷசி ஒருத்தி வந்தாள். அவள் மிகவும் கொடியவள். மிகுந்த பலம் உடையவள். அவளை இராமன் அம்பினால் அடித்தான். உடனே அத் தீயவள், பெரிய மலை சாய்ந்ததுபோல விழுந்து இறந்தாள். அவளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் உண்டு. அவர்கள் சுபாகு, மாரீசன் என்பவர்கள். தாடகி ஆவி துறந்ததைக் கேட்டு அவர்கள் போருக்கு வந்தார்கள். இராமன் யாகசாலையிலேயே அவர்களோடு போர் புரிந்தான். அவர்களுள் சுபாகு என்பவன் இறந்தான். மாரீசன் இராம பாணத்துக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டான்.

தாடகை முதலியவர்களின் தொந்தரவு ஒழிந்ததனால், யாகம் செம்மையாக முடிந்தது. பிறகு விசுவாமித்திரர், ராம



லக்ஷ்மணர்களை ஜனகாபுரிக்கு அழைத்துச் சென்றார். ஜனகராஜன் வீட்டில் ஒரு பெரிய வில் இருந்தது. அதைச்

சீதை இடது கை ஒன்றினாலேயே தூக்கி வைப்பாள். ஆகையால், அந்த வில்லை எடுத்து வளைப்பவனைச் சீதை மணப்பாள் என்ற ஏற்பாட்டுடன் சுயம்வரம் நடந்தது. எப்படிப்பட்டவர்களாலும் அவ்வில்லை அசைக்க முடியவில்லை. அவ்வில்லை இராமன் எடுத்து விரைவாக வளைத்தான். ஆகையால், அந்த வில் முறிந்துவிட்டது. முறைமைப்படி சீதைக்கும் இராமனுக்கும் திருமணம் நிகழ்ந்தது.

மணக்கோலத்துடன் இராமன் அயோத்திக்குத் திரும்பினான். வழியில் ஒரு வீரர் எதிர்த்தார். அவர் பெயர் பரசுராமர். அவர் பெரிய தவசி. போரில் அவருக்குச் சமானம் அக்காலத்தில் யாரும் இல்லை. அவரைக் கண்டால் அவனிபர் யாரும் அலறி யோடுவார்கள். அப்படிப்பட்ட வீரரை இராமன் எதிர்த்தான். ஒரு கணை தொடுத்தான். பரசுராமர் பங்கமடைந்தார். "இனி நான் போருக்கு வருவதில்லை என்னை விட்டுவிடு" என்றார். அவரை இராமன் மன்னித்து விட்டுச் சென்றான். மறுபடியும் பதினான்கு யாண்டு இராமன் காடு சென்றான். அங்கேயும் அவனுக்குத் துன்பம் பல நேர்ந்தன. முன்னே பயந்து ஓடி மறைந்த மாரீசன் ஒரு மானாக வடிவமெடுத்து வந்தான். அவனை இராமன் மிக்க தூரம் துரத்திச் சென்று அம்பினால் அடித்தான். அதோடு அவனும் ஆவி யிழந்தான்.

இராமன் கிஷ்கிந்தைக்குப் போனான். அங்கே ஏழு மராமரங்கள் இருந்தன. அம்மரங்கள் ஏழையும் ஒரே அம்பினால் தொளை செய்து காட்டினான். அந் நகருக்கு அரசன் வாலி. அவன் பெரிய வீரன். தேவர்களும் அரக்கர்களுங் கூடி பாற்கடலைக் கடைய முடியாமல் இளைத்த போது வாலி ஒருவனே கடைந்தான். பத்துத்

தலை இராவணன் வாலிக்கு ஒரு துரும்பு. அப்படிப்பட்ட வாலியை இராமன் ஒரே அம்பினால் அடித்துக்கொன்றான். பின்பு வானரச்சேனையுடன் இலங்கைக்குச் சென்றான்.

அங்கே இராமனுக்குப் பகைவனாகிய இராவணனோடு சண்டை சம்பவித்தது. அச் சண்டையில் இராமன் அரக்கர்களை அடித்து மடித்தான். முடிவாகப் பத்து முடிகளையுடைய இராவணனுடைய ஆவியையும் முடித்தான். இவ்வளவு வீரத் தன்மையுடைய இராமன் கையில் இருந்த வில்லுக்குக் **கோதண்டம்** என்று பெயர். அதைக் கையில் பிடித்திருந்ததனால் அவனுக்குக் கோதண்ட ராமன் என்ற பெயர் வழங்குகிறது. வில்லுக்குச் சாரங்கம் என்றும் பெயர். அதனால், இராமனைச் சாரங்கபாணி என்பதும் உண்டு. வீரனானமையால் வீர ராமன் என்றும் எப்பொழுதும் ஜயமே பெற்றவனானமையால் ஜயராமன் என்றும் அவனைக் கூறுவார்கள்.

மாணவர்களே நாமும் இராமனைப் போல் வீரமுடையவர்களாய் இருந்தால் எவ்வளவு புகழ் உண்டாகும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

பயிற்சி 7.

(அ) பல்லாயிரம், எல்லாவற்றாலும், தம்பியையும் பதம் பிரிக்க.

(ஆ) கொடியவள், போர், செம்மையாக பொருள் எழுது.

(இ) சண்டையைக் குறிக்கும் சில மொழி எழுது

(ஈ) ஏற்றம் இரு பொருள் எழுது.

(உ) தொலைக்க, தொளைக்க பொருள் எழுது.

(ஊ) குறி, பாங்கி, ஆவி, கோதண்டம் தொடரில் அமைத்து எழுது.

(எ) பரசுராமனைப்பற்றி ஐந்து சொற்றொடர் எழுது.

(ஏ) இராமன் வீரத்தில் மூன்று எழுது.

(ஐ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. —— சிறு வயதிலேயே உண்டை —— பழகினன் .
2. தாடகைக்கு ——— என ——— உண்டு.
3. மாரீசன் —— வடிவம் ———

கேள்விகள்.

1. இராமன் எந்தக் குலத்து மகன் ?
2. இராம பாணம் எப்படிப் பட்டது ?
3. தாடகி எப்படி விழுந்தாள் ?
4. சீதையின் சுயம்வரத்தில் வில் வளைக்கச் செய்தது ஏன் ?
5. வாலி எப்படிப்பட்டவன் ?

இலக்கணம்.

இராமன், அயோத்தி, நாள், கை, ஆண்மை, தவறுதல் இவைகள் பெயர்ச் சொற்கள்.

இராமன் என்பது பொருள் பெயர்.

அயோத்தி என்பது இடப்பெயர்.

நாள் என்பது காலப் பெயர்.

கை என்பது சினைப் பெயர்.

ஆண்மை என்பது குணப்பெயர்.

தவறுதல் என்பது தொழில் பெயர்.

சினையை உறுப்பு என்றும் குணத்தைப் பண்பு என்றும் கூறலாம்.

இப்பாடத்திலிருந்து ஒவ்வொரு பெயருக்கும் மும்மூன்று உதாரணம் காட்டு.

---

8. கண்

மிகமிக	தூசு	குணப்படுத்தி
முதுமொழி	உருளை	தொத்துநோய்

நோக்கம்	கண்மணி	மருத்துவம்
குருடர்	கருவிழி	கரும்பலகை
பேடு	துவாரம்	பெரியம்மை
இன்றியமையாது	அகலும்	கெடுதி
தசை	குறுகும்	நடுத்தரம்
ஆயினது	சளிப்பு	மழுங்கிய
தொடர்பு	சந்து	அறைகள்
இணைந்து	ஊளை	பலகணி
குழி	கலக்கி	நிமிர்ந்து
இமைகள்	கழுவினல்	கசக்கி

நமது உடம்பில் முதன்மையான உறுப்பு தலை. தலையில் கண், காது, மூக்கு, வாய் என்னும் பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுள்ளும் கண் மிக மிக முக்கியமானது. "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்பது முதுமொழி. அது இல்லாவிட்டால் பிறந்தும் பயனில்லை என்றே கூறலாம். சிலர் பிறக்கும்போதே கண் பார்வை யின்றிப் பிறக்கிருர்கள். சிலர் பிறந்த பின்பு பார்வை இழக்கின்றனர். எப்படியாயினும் கண் நோக்கம் இழந்தவரைக் குருடர் என்பது வழக்கம். குருடர்கள், என்றும் மனக்குறை யுடையவர்களாகவே இருப்பார்கள். அதனுற்ருன் ஔவையார் 'கூன், குருடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது' என்ருர். இதனல் என்ன தெரிகிறது? எந்த உயிருக்கும் கண் இன்றியமையாதது எனத் தெரிகிறது அல்லவா. ஆதலால், அக் கண்ணைப் பற்றிக் கட்டாயம் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

கண்ணின் உருவம் உருண்டை. இது தசையால் ஆயினது; கண்ணின் வெளிப் புறமாகிய முன்பாகம் மாத்திரம்

நமக்குத் தெரிகிறது. கண்களின் பின் பாகத்துக்கும் மூளைக்கும் தொடர்பிருக்கிறது. எப்படி என்கிறீர்களா? மூளையிலிருந்து இரண்டு கண்களுக்கும் நரம்பு இணைந்திருக்கிறது. இந்தக் கண்கள் முகத்தில் உள்ள இரு எலும்புக் குழிகளில் பொருத்தப்பட் டிருக்கின்றன. கண்களுக்குத் தீமை நேராமல் காப்பதற்கு முன் புறத்தில் இரு கதவுகள் உண்டு. அவை இமைகள் எனப்படும். இமைகள் மேலும் கீழுமாக உள்ளன. இமைகளின் முனையில் மயிர்கள் வரிசையாக உண்டு. அவை தூசுகளைத் தடுக்கும். பெருங்காற்று முதலியவற்ருல் கண்ணுக்குத் தீமை நேரும் எனத் தெரிந்தால், இரண்டு இமைகளும் ஒன்றுகூடி மூடிக்கொள்ளும்.

கண்ணில் மூன்று பிரிவுகள் உண்டு. கண்ணின் நடுவில் ஒரு புள்ளிபோன்ற உருளை தெரிகிறதல்லவா! அது தான் கண்மணி. அதைப் பாப்பா என்றுரைப்பதும் உண்டு. அதைச் சூழ்ந்து ஒரு கறுப்பு வட்டம் உண்டு. அது தான் கண்விழி இதை யடுத்துக் கண் முழுதும் வெள்ளை நிறமாக இருப்பது வெள்ளை விழி. கண்மணி என்பது உருளையாய்த் தோன்றினும் அது குண்டான உருவமுடையதன்று. அது வட்டமான துவாரம். அந்தத் துவாரத்தின் வழியாகத் தான் எதிரிலுள்ள பொருள்களை மூளை அறிகிறது. அத் தொளை இருளில் அகலும்; வெளிச்சத்தில் குறுகும். அந்தத் தொளையைச் சுற்றிலும் கோடுகள் போன்ற தசைகள் இருக்கின்றன. அந்தச் சந்தைச் சுற்றி வெண்மையும் கனமும் உடைய தோல் இருக்கிறது. அத்தோல் கண்ணைச் சூழ்ந்திருக்கிறது.

இவ்வளவு அருமையான அமைப்பையுடைய கண்ணில் சில சமயம் நோய் வருகிறது. அதைக் கண்ணோய் என்

போம். அப்போது கண் சிவந்துவிடும். ஊசியால் குத்துவதே போல வலி உண்டாகும். கண்ணின் இரு கோடியிலும் பூ ஊளை கழியும். பூ ஊளையைப் பீளை என்பதும் உண்டு. கண் இமைகளும் வீங்கிச் சிவந்து விடும். இந் நோய் சளிப்பினாலும் அதிக தூசு கண்ணில் விழுவதாலும் வரும். அப்போது கண்ணைத் தண்ணீர் கொண்டு கழுவ வேண்டும். குளிர்ந்த நீருடன் போரக்ஸ் தூளைக் கூட்டிக் கலக்கிக் கழுவினாலும் நலம். ஆஸ்பத்ரிக்குப் போனால் அவர்கள் நல்ல மருந்து விட்டுக் குணப்படுத்தி விடுவார்கள். இது தொத்து நோய். ஈ, கொசு முதலியவற்றால் பரவும். ஆயினும் கொடிய நோயன்று; உடனே நீங்கி விடும். கவனித்து மருத்துவம் செய்யாவிட்டால் கண்ணில் பூ விழுந்து விடும்.

கண்ணுக்கு மற்றொரு வகை தீமை ஏற்படுவதுண்டு. அது மிகவும் கொடியது. அதைத் தான் கவனத்துடன் தடுக்க வேண்டும். அதைப் பற்றி இங்கே கூறுவோம். சிலர் எதையும் கண்ணுக்கு அருகில் வைத்துப் பார்க்கிறார்கள். கரும்பலகை எழுத்து, புத்தக எழுத்து முதலியவற்றையும் தூரத்திலிருந்து அவர்கள் பார்த்தறிய முடியாது. இதைக் கிட்டப் பார்வை என்பது வழக்கம். இந்தத் தீமை எப்படி விளைகிறது தெரியுமா? இரமுள்ள இல்லத்தில் வசிப்பதாலும் மிக்க ஒளியிலேயே பார்வையைச் செலுத்துவதாலும் படுத்துப் படிப்பதாலும் மாலை இருளில் படிப்பதாலும் பலக் குறைவாலும் பெரியம்மை என்னும் வைசூரியாலும் ஏற்படுகிறது.

கிட்ட பார்வை என்னும் கெடுதி உண்டாகாமல் இருக்க வேண்டுமானால், நடுத்தரமான ஒளியில் நடுத்தரமான எழுத்தைப் படிக்கவேண்டும். மிகச் சிறிய எழுத்தை மழுங்கிய ஒலி

யில் படித்தலாகாது. அறைகளில் உள்ள பலகணிகளைப் போதுமான வெளிச்சம் கிடைக்கும்படி திறந்து வைக்க வேண்டும். எப்போதும் தலை நிமிர்ந்தே படிக்க வேண்டும். குனிந்து படித்தல் பெருங் குற்றம். விளக்கை முகத்தெதிரில் வைத்துக்கொண்டு படிக்கக்கூடாது. நமக்குப் பின்னால் தீபம் இருக்குமாறு வைத்துப் படித்தல் வேண்டும். புகை பிடிக்கும் பழக்கம் கூடாது. மிக நுட்பமான தையல் வினை, அச்செழுத்துப் பொருக்கும் வேலை, மெல்லிய நூல் கோக்குந் தொழில் ஆகிய இவைகளை மிகுதியாகச் செய்யலாகாது.

நாம் பெருங் காற்றில் போக நேர்ந்தால் கண்ணுக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு போக வேண்டும். கண்ணாடியின்றிச் சென்றால் தூசுகள் விழுந்து கண்ணைக் கெடுக்கும். புகை வண்டியில் போகும்போது, அது போகும் திசையை நோக்கி உட்காரலாகாது. அப்படி உட்கார்ந்தால் புகையுடன் வரும் நிலக்கரித் துண்டுகள் கண்ணில் விழும். நம்மிலுந் தவறிக் கண்ணில் ஏதாவது விழுந்துவிட்டால் கையை வைத்துக் கசக்கிக்கொள்ளல் தவறு. அவ்வாறு கசக்குவதால் கண் கலங்கிப் பார்வை கெடும்.

கண்ணுக்கு ஏதாவது தீமை நேர்ந்தால் நம் இஷ்டப்படியோ கண்டவர் கூறும் பல விதமாகவோ ஒன்றும் செய்யலாகாது. கண் வைத்தியம் தேர்ந்தவரிடம் காட்டிக் குணப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பயிற்சி 8.

(அ) முதுமொழி, இன்றியமையாதது, குணப்படுத்தி பதம் பிரிக்க.

(ஆ) பார்வை என்பதற்கு வேறு மொழி எழுது.

(இ) இணைந்து, குறுகும், எதிர் பதம் எழுது.

(ஈ) அரை, அறை பொருள் எழுது.

(உ) நோக்கம், மூளை, கூட்டி, நிமிர்ந்து, தவறு தொடரில் பொருத்துக.

(ஊ) கண்ணின் அமைப்பைப்பற்றி நான்கு வரி எழுது.

(எ) என்றும் இரு பொருள் எழுது.

(ஏ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கண் —— பிறந்தும் —— இல்லை.
2. கண் —— உருவம் உடையது.
3. எப்போதும் —— நிமிர்ந்தே ——.

கேள்விகள்.

1. கண்ணின் உருவம் எப்படிப்பட்டது?
2. கண் எத்தனைப் பிரிவை உடையது? அவை எவை?
3. கண்மணி என்பது யாது?
4. கிட்ட பார்வை எதனால் ஏற்படுகிறது?
5. படிக்க வேண்டிய முறை யாது?

இலக்கணம்.

மனிதன், யானை இரண்டும் பொருட் பெயர்கள். ஆனாலும், மனிதன் வந்தான் என்கிறோம். யானை வந்தது என்கிறோம். ஏன்? மனிதன் உயர்ந்த குலம், யானை உயர்வு அல்லாத குலம். உயர்ந்த குலப் பொருளை உயர்திணைப் பொருள் என்றும் உயர்வு அல்லாத குலப் பொருளை (அல்திணை) அஃறிணைப் பொருள் என்றும் கூறுவது வழக்கம். திணை - குலம்.

இப்பாடத்திலிருந்து ஒவ்வொரு திணைக்கும் நந்நான்கு பெயர்கள் எழுது.

9. சூழ்ச்சி

மச்சம்	வலை	சிந்தி
நனி	வீச	நயந்து
கொழுத்து	நம்பிக்கை	சால
அலவன்	தீர்மானம்	கண்டம்
கவிழ்ந்து	எல்லை	முந்தி
தப்பிக்கும்	ஆனந்தம்	கவை
வினவியது	கௌவி	முண்டம்
துயரம்	அருந்தியது	இருப்பிடம்
நாடும்	எஞ்சிய	வென்று
செம்படவர்	பாறை	தாழ்ச்சி

ஒரு குளக்கரையில் பெரிய ஆலமரம் ஒன்றிருந்தது. அதில் பல கொக்குகள் கூடுகட்டி வசித்திருந்தன. அவை குளத்திலுள்ள மீன்களைப் பற்றித் தின்று காலங் கழித்தன. ஒரு கொக்கு மச்சங்களை நனி தின்று கொழுத்துப் பருத்திருந்தது. அது ஒரு நாள் குளக்கரையில் அமர்ந்திருக்கும்போது ஒரு நண்டைப் பார்த்தது. அந் நண்டு மிகப் பெரியதா யிருந்தது. அதை எப்படியாவது புசிக்க வேண்டும் என்று ஆசை கொண்டது.

கொக்கு, மறுநாள் வழக்கப்படி குளக்கரைக்கு வந்தது. மிகுந்த வருத்தத்தோடு தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தது. காலை முதல் யாதொரு உணவையும் உட்கொள்ளவில்லை; கண்களையும் திறக்கவில்லை; அசையாமல் ஒரே நிலையில் இருந்தது. கொக்கின் நிலைமையைக் கண்டது அலவன். அதன் எதிரில் வந்து "கொக்கே, நீ ஏன்

இன்று இவ்வாறு வாடியிருக்கிறாய்? வந்த துன்பமென்ன? காலை முதல் கண்மூடி, முகங்கவிழ்ந்து, மனங்கலங்கி யிருக்கிறாயே. இதுவரையில் ஒரு நாளும் நீ இப்படி இருந்ததில்லையே," என வினவியது. அதன் பின்பு அந்த இரண்டும் பேசிக்கொண்டன.

கொக்கு:—எனக்கொன்றும் துன்பமில்லை. அப்படி எனக்கு வந்தாலும் நான் வருந்த மாட்டேன்.

நண்:—அப்படியானால் உன் உறவினருக்கு ஏதேனும் துயரம் உண்டோ?

கொக்:—அப்படியும் இல்லை.

நண்டு:—மற்று யாருக்குத்தான் துன்பம் விளைந்தது?

கொக்:—அதை நீ அறிந்தால் அதிக துக்கப்படுவாய். எனக்குத் தெரிந்தது என் மனத்தோ டிருக்கட்டும்.

நண்:—எனக்கு அதிக துக்கந்தருவதாகிய அச் செய்தியை நான் அறியா திருக்கலாகுமா?

கொக்:—அறிய வேண்டுந்தான்; ஆனால், ஆபத்து வருங்காலத்தில் அஞ்சாமல், அதிலிருந்து தப்பிக்கும் வழியை நாடுந் திடம் உனக்கிருந்தால் அறியலாம்.

நண்:—அப்படியானால் சொல்லு; நான் அஞ்சேன். அதோடு எனக்கு உன் உதவி இருப்பதால் கொஞ்சமும் அஞ்சேன்.

கொக்:—இன்று விடியற்காலையில் சில செம்படவர்கள் இங்கே வந்தார்கள். அவர்கள் பேசியதைக் கேட்டுத்தான் நான் பெரிதும் வருந்துகிறேன்.

நண்:—அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள்.

கொக் :—" எல்லாக் குளங் குட்டைகளிலும் உள்ள மச்சங்களைப் பிடித்தோம். இனி, இது ஒன்றுதான் நின்றது. இன்றிரவு இதில் வலை வீச வேண்டும்" என்ருர்கள்.

நண் :—ஐயோ! அப்படியா! உண்மையாகவா!

கொக் :—என் சொல்லில் உனக்கு நம்பிக்கை இல்லையா?

நண் :—ஆனல், நண்பா, அதற்கு என்ன செய்வது?

கொக் :—என்ன செய்வது? நீதான் யோசித்துச் சொல்ல வேண்டும்.

நண் :—எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நீயே ஒரு தந்திரம் கூறு.

கொக் :—நான் சொல்லுகிறபடி நீ கேட்பாய்; மற்ற மீன்களும் நண்டுகளும் கேட்குமோ?

நண் :—நான் கேட்கச் செய்கிறேன்.

கொக் :—அப்படிச் செய்தால் நன்மைதான். எல்லாக் குளங்களிலும் குட்டைகளிலும் செம்படவர் வேட்டையாடிவிட்டனர். ஆகையால், இங்கே உள்ளவர்கள் அனைவரும் வேருெரு குளத்துக்குக் குடியேற வேண்டும். அதற்காக நான் முன்னமே ஒரு குளம் கண்டு வந்தேன்.

நண் :—ஆனல் சரி. அங்கே குடி போகலாம்.

என இரண்டும் பேச்சை முடிவு கட்டின. நண்டு சென்று எல்லா மீன்களையும் அலவன்களையும் கூட்டியது. வரப்போகும் துன்பத்தைக் கூறியது. இனிச் செய்யவேண்டியதையும் கூறிற்று. அவைகளும் கொக்கு கூறிய யுக்தியை ஒப்புக்கொண்டன. முடிவில் கொக்கே அவைகளைக்

கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானமும் ஏற்பட்டது. அதையறிந்த கொக்குக்கு எல்லை கடந்த ஆனந்தம் உண்டாயிற்று.

ஏற்பாட்டின்படி கொக்கு மீன்களை அலகினல் கௌவிச் செல்லத் தொடங்கியது. போகும் வழியில் வயிறு கொண்டமட்டில் அருந்தியது. எஞ்சியவைகளை ஒரு பாறையின்மேல் உலர்த்தியது. கடைசியாக நண்டின் முறை வந்தது. கொக்கு நண்டை வாயால் கௌவிக் கொண்டு சென்றது. போகும் வழியில் மீன்களின் எலும்புகள் சிந்திக் கிடப்பதை நண்டு கண்டது; ஐயங்கொண்டது. உடனே கொக்கின் வஞ்சகத்தை உணர்ந்தது. சரி; சரி. கொக்கு நம் குளத்து மீன்களைக் கொன்று தீர்த்தது. நண்டுகளையும் சாலப்புசித்தது நம்மையுங் கொல்ல நயந்திருக்கிறது. ஆயினும் நாம் முந்திக் கொள்ளுதல் வேண்டும்; எப்படியும் இன்னுஞ் சிறிது நேரத்தில் இதன் உயிரைப் போக்க வேண்டும் என நினைத்து விட்டது.

உடனே நண்டு தனது முன் காலின் கவைகளினல் கொக்கின் கண்டத்தை அழுத்திப் பிடித்தது. அதன் கழுத்து இரு துண்டுபட்டது. தலை வேறு முண்டம் வேருக வீழ்ந்தன. நண்டு உயிர் பிழைத்துச் சென்று தனதிருப்பிடமடைந்தது. நண்டு சாலச் சிறியதா யிருந்தும் பெரிய கொக்கைவென்று விட்டது? இக் கதையினல் சூழ்ச்சியுடையவர்க்குத் தாழ்ச்சி யில்லை என்பது விளங்குகிறதல்லவா!

பயிற்சி 9.

(அ) இருப்பிடம், எப்படியாவது, இன்றிரவு பதம் பிரிக்க.

(ஆ) சூழ்ச்சி, மச்சம், வஞ்சகம், கவை பொருள் எழுது.

(இ) முந்தி, தாழ்ச்சி எதிர்மொழி வரைக.

(ஈ) சூழ்ச்சி என்பதற்கு வேறு சில மொழி எழுது.

(உ) நாடு இரு பொருள் எழுது.

(ஊ) நாடும், கௌவி, கவை, முண்டம் தொடரில் அமைக்க.

(எ) நண்டு செய்த சூழ்ச்சியைப்பற்றி ஐந்து வரி எழுது.

(ஏ) போகும் வழியில் சிந்திக்கிடந்த எலும்புகளை நண்டு கண்டு, ஐயங்கொண்டு, கொக்கின் வஞ்சகத்தை அறிந்தது. தனித்தனி தொடராகப் பிரித்து எழுது.

தொடரை முடிக்க.

1. கொக்கு குளக்கரையில் வாடி ——.
2. கொக்கும் நண்டும் பேசிக் ——.
3. கொக்கு மீன்களை அலகினல் கௌவிச் ——
4. நண்டு உயிர் பிழைத்துப் பழையவிடம் ——.

கேள்விகள்.

1. கொக்கு எப்படி நடித்தது ?
2. எதனல் நண்டு பயப்பட்டது?
3. கொக்கு மச்சங்களை என்ன செய்தது ?
4. இக்கதையில் உள்ள சூழ்ச்சிகள் எவை ?

இலக்கணம்.

திணையில் சில பிரிவு உண்டு. அந்தப் பிரிவுக்கு பால் என்று பெயர். உயர் திணைப்பிரிவு ஆண் பால், பெண் பால், பலர் பால்.

அஃறிணைப் பிரிவு ஒன்றன் பால், பலவின் பால்.

முருகன் ஆணைக்குறிப்பதால் ஆண்பால்.

வள்ளி பெண்ணைக் குறிப்பதால் பெண் பால்

மனிதர் ஆண், பெண் கூடிய பலரைக் குறிப்பதால் பலர் பால்.

அஃறிணையில் ஆண், பெண் என்ற பிரிவு இல்லை.

கோக்கு ஒன்றைக் குறிப்பதால் ஒன்றன்பால்.

கோக்குகள் பலவற்றைக் குறிப்பதால் பலவின் பால்.

இப்பாடத்தில் இருந்து ஒவ்வொரு பாலுக்கும் மும்மூன்று பெயர் எழுது.

10. நம்மாழ்வார்

தாமிருவருணி	வரம்	அழுகை
குருகூர்	திருப்பதி	அருந்துகை
யாண்டு	பெருமாள்	பசுங்குழவி
வேளாளர்	நம்பிக்கை	மகிமை
அகமுடையாள்	மகப்பேறு	சாடினர்
திருமால்	பழுது	துதிகள்
எள்ளாத	பாலன்	அரிபதம்
பிள்ளைப்பேறு	பாலகன்	வைகுந்தம்
இடைவிடாது	மகிழ்ச்சி	மாயன்
நோன்பு	வாட்டம்	அண்ணல்
தலங்கள்	சடம்	ஞாலம்

தாமிரவருணி நதிக் கரையில் திருநெல்வேலி என்று ஒரு நகரம் உண்டு. அதன் கிழக்கே ஆழ்வார் திருநகரி என்ற ஒரு ஊர் உளது. அதை முன் காலத்தில் குருகூர் என்று சொல்வது வழக்கம். அவ் வூரில் சுமார் ஆயிரம் யாண்டுகளுக்கு முன் காரி என்பவர் வாழ்ந்திருந்தார். அவர் வேளாளர். அவருடைய அகமுடையாளின் பெயர் உடைய நங்கை. இவர்கள் இருவரும் கடவுளன்புடையவர்கள். 'திருமாலுக் கடிமை செய்' என்பதை எள்ளாதவர்கள்.

உடைய நங்கைக்குப் பல நாள் வரையில் பிள்ளைப்பேறில்லை. ஆகையால், அவர்கள் மனக்கவலை கொண்டிருந்தார்கள். இடைவிடாது நோன்பும், அறமும் புரிந்து காலங் கழித்தார்கள். பல தலங்களுக்குச் சென்று, பணிந்து வரம் வேண்டி வருவார்கள். அதேபோல ஒரு சமயம் அவர்களிருவரும் திருக்குறுங்குடி என்னும் திருப்பதிக்குச் சென்றார்கள். ஆலயத்தில் எழுந்தருளியுள்ள பெருமாளை வணங்கினார்கள். தங்கள் குறையைக் கூறிக் கண்ணீர் விட்டார்கள். அப்போது அவர்கள் மனதில் ஏதோ ஒருவகை நம்பிக்கை ஏற்பட்டது. மகப்பேறு பெறுவோம் எனத் திடமாக நினைத்தார்கள். மீண்டும் வணங்கி வீடுவந்து சேர்ந்தார்கள். அவர்கள் நம்பிக்கை பழுதடையவில்லை. அழகிய ஆண் மகவு ஒன்றைப் பெற்றார்கள்.

பாலன் பிறந்த மகிழ்ச்சி ஒருபுறமிருக்க மற்றொரு குறையைக் கடவுள் காரிக்குத் தந்தார். அது யாதென்றால், பிறந்த பாலகன் அழவுமில்லை; பாலுண்ணவு மில்லை. ஆனாலும் அக் குழந்தையின் உடல் வாட்டமடைய வில்லை. அதனால், பெற்றோரிருவரும் சிறிது குறையற்றவர்களானார்கள். குழந்தைக்குரிய பாலுண்ணல், அழுகை முதலிய இயற்கைக்கு மாறாகப் பால் அருந்தாமலும் அழாமலும் இருந்ததோடு, உண்ணாமலிருந்தும் உடல் இளைக்காத மாறுபாட்டால் மாறன் என்னும் பெயர் அக் குழந்தைக்கு இடப்பட்டது. சடம் என்னும் வாயுவின் தொழிலாகிய அழுகையை வெறுத்த குழவியாகையால் சடகோபன் என்ற பெயரும் அக் குமரனுக்கிடப்பட்டது.

உடைய நங்கை, ஒரு நாள் பாலுண்ணாப் பாலகனைத் திருக்குருகூர் கோவிலுக்கு எடுத்துச் சென்றார்; பெருமாள்

எதிரில் கிடத்தினர். ஆண்டவனே, அழுகையும் அருந்துகையும் இப் பிள்ளைக்கில்லை. அக் குறையைத் தீர்க்க வேண்டும்" என வரங்கேட்டுப் பணிந்து, குழந்தையை எடுத்துக் கொண்டு, கோவிலின் அருகில் உள்ள புளிய மரத்தின் கீழ் வந்தார். ஒரு தொட்டிலிட்டார். அதில் அக் குழந்தையைக் கிடத்தினர். அதே யிடத்தில் அம் மகவு வளர்ந்தது. பசுங்குழவி வளர்ந்து பதினறு வயதடைந்தது. அப்போது அங்கே மதுரகவி என்னும் ஒரு விஷ்ணு பக்தர் வந்து சேர்ந்தார்.

மகவின் மகிமையை மதுரகவி அறிந்தார். மிகவும் வியப்படைந்தார். ஒரு நாள் மதுரகவிக்கு மனதில் ஒருணர்ச்சி தோன்றிற்று. மாறனுடைய நிலையை ஆராய நினைத்தார். உடனே ஒரு சிறு கல்லை எடுத்து சடகோபன் மீது சாடினர். கல் பட்டவுடனே காரியின் மகன், கண் திறந்து பார்த்தார். அப்போது மதுரகவி அக் குமரனை ஒரு கேள்வி கேட்டார். குமரனும் பொருத்தமான விடை கூறினர். விடையைக் கேட்ட மதுரகவி, மாறனுடைய மலரடிகளில் வணங்கினர். பின்னும் சில உண்மைகளைக் கேட்டுணர்ந்தார். அதேமாதிரி பலரும் மாறனிடம் பல அரிய பெரிய ஐயங்களைத் தீர்த்துக் கொண்டார்கள்.

பின்பு சடகோபர் விஷ்ணு தலங்கள் அனைத்தையும் காண விரும்பினர். அப்படியே புறப்பட்டுச் சென்றார். எல்லாக் கோயில்களிலும் எழுந்தருளியுள்ள திருமாலைப் பணிந்தார். பல துதிகள் பாடினர். அப்பாக்களை மதுரகவிக்குக் கற்பித்தார். இயற்கையிலேயே கல்வியும் அறிவும் கடவுட் பக்தியும் உடையவராதலால், மாறன் புகழ் எங்கும் பரவியது. அதன் பின், அவருக்கு நம்மாழ்வார் என்ற பெயர் வழங்கலா

யிற்று. இவையேயன்றி வகுளாபரணர், பராங்குசர் என்னும் பெயர்களும் மாறனுக்கு வழங்கின. சடகோபர் தமிழ் நாடு முழுதும் மதிக்கப்பெற்றார். அறிவுக் கிருப்பிடமாகிய நம் மாழ்வார் முப்பத்தைந்து யாண்டுகள் வாழ்ந்தார். அதன் பின் அரிபதம் என்னும் வைகுந்தத்தை அடைந்தார்.

நம்மாழ்வாரால் எழுதப்பட்டவை திருவிருத்தம், திரு ஆசிரியம், பெரிய திரு அந்தாதி, திருவாய் மொழி என்பவைகளாகும். அவை படிக்க இனியன; பக்தி நிறைந்தன. அவற்றுள் திருவாய்மொழியி லிருந்து ஒரு செய்யுளை இங்கே கூறுவோம்.

கண்ணனை மாயன் தன்னைக்
        கடல்கடைந் தமுதங்கொண்ட
அண்ணலை, அச்சுதனை,
        அனந்தனை அனந்தன் தன்மேல்
நண்ணிநன் குறைகின்றானை
        ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறிய மாட்டேன்
        யாவையும் யவருந்தானே.

பயிற்சி 10.

(அ) பிள்ளைப்பேறு, திருப்பதி, பதம்பிரிக்க.
(ஆ) அரி, அறி பொருள் எழுது.
(இ) உளது எதிர் பதம் எழுது.
(ஈ) மகிழ்ச்சியைக் குறிக்கும் வேறு சில மொழி எழுது.
(உ) சாடி இருபொருள் எழுது.
(ஊ) பிள்ளைப்பேறு, நம்பிக்கை, வாட்டம், சாடினர் தொடரில் அமைக்க.
(எ) நம்மாழ்வார் பிறப்பைப்பற்றிச் சில சொற்றொடர் எழுது

(எ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(1) ஆழ்வார் திருநகரியின் பழைய பெயர்———.

(2) காரி என்பவர்———குலத்தைச் சேர்ந்தவர்.

(3) அழுகை———என்னும் வாயுவின்———.

(4) வந்த மதுரகவி———மகிமையை———.

கேள்விகள்

(1) திருநெல்வேலி எங்கே இருக்கிறது?

(2) காரி என்பவரின் மனையாள் பெயர் யாது?

(3) 'மகவு பிறந்தும் காரிக்கு மகிழ்ச்சி இல்லை' ஏன்?

(4) மாறன் என்ற பெயர் ஏன் உண்டாயிற்று?

இலக்கணம்

பெயர்ச் சொல், ஒன்றைக் குறித்தால் ஒருமைப் பெயர் என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட பலவற்றைக் குறித்தால் பன்மைப் பெயர் என்றும் பெயர்.

மனிதன், ஆடு, வீடு ஒருமைப் பெயர்கள். மனிதர், ஆடுகள், வீடுகள் பன்மைப் பெயர்கள்.

இப்பாடத்தில் இருந்து ஒருமைப் பெயர் நான்கும் பன்மைப் பெயர் மூன்றும் வரைக.

இலக்கணக் கேள்விகள்.

(1) பெயர் வகை எத்தனை? எவை?

(2) திணை வகை எத்தனை? எவை?

(3) பால் வகை எத்தனை? எவை?

(4) எண் வகை எத்தனை? எவை?

மேல்கண்ட வகை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் எழுது.

11. முத்து

முத்து	புழு	முத்துக்குளித்தல்
தவளம்	நுழையும்	வாரிதி
இழிவான	உறுத்தும்	சுமாராக
இப்பிமீன்	அரும்பாடு	ஆழமான
அகட்டில்	பசை	படகுகள்
கடினம்	பொழுதடைவில்	இழிந்த
கிளிஞ்சில்	உறைந்து	பிராணி
கொழுகொழுத்து	இறுகும்	கோவை
மேனி	பளிங்கு	மற்றும்
வழுவழுத்த	இங்ஙனம்	அணி
உலவி	தேறி	பதிக்க
பிளவு	நித்திலம்	சவரம்
தரை	தரளம்	கோரோசனை
மட்டம்	புக	புனுகு
ஒட்டிக்கொள்	தீவு	சவ்வாது
ஊண்	கடற்கரை	அழல்
பூச்சி	கோடி	எள்ளார்

முத்து என்பது நவரத்தினங்களுள் ஒன்று. அது தவள நிறமும் உருண்ட வுருவமும் பளபளப்பான ஒளியும் உடையது. இச் சிறந்த பொருள் அளவிடப்படாத மிக்க விலையுள்ளது. இம் முத்தோ இழிவான இப்பிமீன் அகட்டில் பிறக்கிறது.

இப்பிமீன் என்பது கடினமாகிய கிளிஞ்சிலுக்குள் கொழு கொழுத்து மெத்து மெத்தென்றிருக்குந் தசை

மேனியுடைய ஓர் உயிர்ப்பொருள். அது பார்வைக்கு அழ
குடையதன்று. இப்பியின் பிறவியே வியப்பானது. அது
இளம் பருவத்தில் நத்தைபோன்ற வழுவழுத்த உடலுடன்
கடல் நீரின்மீது மிதந்து உலவிக் கொண்டிருக்கும். அப்
போது அதன் உடலின் மேல்மூடியாகிய கிளிஞ்சில் இராது.
வயதேற வயதேற விரைவாகவே கிளிஞ்சில் உண்டாகும்.
கிளிஞ்சில் மூடவுந் திறக்கவுங் கூடியபடி, பிளவுபட்டு
இரு பிரிவாய் அமைந்திருக்கும். அச் சமயத்தில் இப்பி,
நீரில் மிதக்க வருந்தும். கிளிஞ்சிலின் கனத்தால் நீரில் மூழ்
கித் தரைக்குச் செல்லும்.

தரை மட்டத்திற்குப் போன இப்பி அங்குள்ள பாறை
களுள் ஒன்றைத் தேடி ஒட்டிக் கொள்ளும். ஊண்
வேண்டுமே! அதற்காகத் தன்னை மூடியுள்ள கிளிஞ்சிலைத்
திறந்து வைக்கும். அப்போது அதில் நீர் புகுமல்லவா?
அதனோடு சில சிறு பூச்சிப் புழுக்களும் நுழையும். அவற்றை
இப்பி தின்று வளரும். சிற்றுயிர்களும் அறிவுத் திறமை
யுடையன என்பது இதனால் தெரிகிறதல்லவா! திறந்த
கிளிஞ்சிலோட்டில் நீர் நுழையும்போது சிறு மணல், மீன்
முட்டை முதலியனவும் நுழைவதுண்டு. அவை இப்பியின்
உடலோடு ஒட்டிக்கொள்ளும். பின்பு இப்பி கிளிஞ்சிலை
மூடும்போது மணலும் முட்டையும் உடலில் உறுத்தும். அத
னால், இப்பி படும்பாடு கொஞ்சமல்ல.

வெகு நேரம் அரும்பாடு பட்ட இப்பி, தன் உடலை
உறுத்தும் மணலை ஒருவகைப் பசையால் மூடும். அப் பசை
இப்பியின் உடலிலிருந்தே நீர்போல் சுரக்கும். அவற்றைச்
சுற்றி மூடப்பட்ட பசை, பொழுதடைவில் உறைந்து கட்டி
யாகும். உறைந்த அப்பசை பளிங்கு போன்று ஒளிரும்.

இங்ஙனமே தினமும் நீர் சுரப்பதும் மூடுவதும் இறுகுவதும் ஆகிய தொழில் நிகழும். முடிவில் அது உருண்டு திரண்டு ஒளியுள்ள ஓர் முத்தாகும்.

இப்படிப் பாறையில் கிடந்த இப்பிகளை முத்துக் குளிப்பவர்கள் வாரிச் செல்வார்கள். கரையை யடைந்தவுடன் கிளிஞ்சில்களை உடைத்துப் பார்ப்பார்கள். சிலவற்றுக்குள் முத்துக்கள் தேறி இருக்கும். சிலவற்றில் சின்னஞ் சிறு முத்துக்கள் தேருமலிருக்கும். சில ஒன்றுமின்றியுமிருக்கும். எடுக்கப்பட்ட முத்துக்களின் தகுதிக்கேற்ற விலை அமையும். இது இயற்கையாக அமையும் நித்திலத்தின் வரலாறு.

இனி சீன தேசத்து மக்கள் தரளங்களைப் புதுமையான வடிவுடனும் அமையச் செய்கிருர்களாம். அவர்கள் திறந்த கிளிஞ்சிலுக்குள் சில உருவச்சிலைகளைப் புகவிடுகிருர்களாம். மணலை மூடுவது போலவே அச்சிலைகளையும் பசை மூடுமல்லவா! ஆகையால், பலவகை விக்கிரகங்களைப் போல முத்துக்கள் உருப்பெறுகின்றன. இவர்களின் திறமையை என்னென்று புகல்வது!

இம்முத்து ஆஸ்திரேலியா, நியூ கினி, பிலிப்பைன், போர்னியா முதலிய தீவுகளை யடுத்த கடற்கரைகளில் மிகுதியாகக் கிடைக்கின்றன. இந்தியாவின் தென் கோடியில் உள்ள பாண்டி நாடு, பழைய காலத்தில் முத்துக்குப் பேர் போனதா யிருந்தது. அங்கு இப்பொழுதும் முத்துக் குளித் தற்றொழில் சுமாராக நடந்து வருகிறதாகத் தெரிகிறது.

முத்துக் குளிப்பவர்கள் கப்பல்களில் ஏறி வாரிதியின் ஆழமான இடத்தை யடைவார்கள். அங்கே சில படகுகளை மிதக்கவிட்டு, நீரில் மூழ்குவார்கள். படகிலும் சிலர் தங்கி யிருப்பார்கள். நீரில் மூழ்குகிறவர்கள் தங்களுடன் கூடை

களைக் கொண்டு செல்வார்கள். அவர்கள், தரை மட்டத்தில் சென்று இப்பிகளைத் திரட்டி வாரிக் கூடையை நிரப்பிக் கொண்டு மேலே கிளம்புவார்கள். படகிலுள்ளவர்கள், அக் கூடையை வாங்கி அதிலுள்ள கிளிஞ்சில்களைக் கப்பலில் கொட்டுவார்கள். பிறகு, கப்பல் கரையை அடையும். அங்கே கிளிஞ்சிலை உடைக்கும் பொருட்டுப் பலர் காத்திருப்பார்கள். அவர்களே ஒவ்வொரு கிளிஞ்சிலாக உடைத்து முத்தெடுப்பார்கள்.

மிக இழிந்த ஒரு பிராணியினிடத்தில் தோன்றிய முத்து உயர்ந்த மன்னர்களின் கழுத்துக்குக் கோவையாகிறது. மற்றும் பல அணியாகிறது. முடியில் பதிக்கப்படுகிறது. மணலின் மாறுபாடாகிய முத்து மன்னர் தலைமேல் இருக்கிறதல்லவா? இதனால், அறிவுடையவர்கள் தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும் மேன்மையடைவார்கள் என்பது விளங்குகிறது. பாருங்கள்,

சாமரை பொன்முத்து சவரங்கோ ரோசனைபால்
பூமரு தேன்பட்டு புனுகு சவ்வாது—ஆமழல் மற்று
எங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்?

பயிற்சி 11.

(அ) நவரத்தினம், பொழுதடைவில், முத்துக் குளித்தல். மொழி பிரிக்க.

(ஆ) கடினம், தரை, உறைந்து, திரண்டு பொருள் எழுது.

(இ) புதுமை, எதிர்மொழி எழுது.

(ஈ) முத்து, கெட்டி என்பவற்றைக் குறிக்கும் வேறு சில மொழிகள் எழுது.

(உ) பாரை, பாறை, பொருள் எழுது.

(ஊ) முடி இருபொருள் எழுது.

(எ) கடினம், கொழுகொழுத்து, பொழுதடைவில், மற்றும் தொடரில் அமைக்க.

(ஏ) முத்துக் குளித்தலைப்பற்றி ஆறு சொற்றொடர் எழுது.

(ஐ) முத்து வெண்மை நிறமும் உருண்ட வடிவமும் பளபளப்பான ஒளியும் மிக்க விலை மதிப்பும் உடையது. தனிச் சொற்றொடர்களாகப் பிரித்தெழுது.

(ஒ) கோடிட்ட சொற்களை நீக்கி எதிர் பதம் எழுது :—

(1) கடினமான பொருள் ஒன்று கொடு.

(2) இப்பியின் வரலாறு புதுமையானது.

(3) இப்பி மீன் தண்ணீரில் மூழ்கும்.

(4) கிளிஞ்சிலை இப்பி மீன் திறந்து திறந்து மூடும்.

கேள்விகள்

(1) இப்பி மீன் எங்கே வாழும் ?

(2) எப்போது இப்பி மீன், நீரில் மூழ்கும் ?

(3) சிற்றுயிரும் அறிவுத்திறமையுடையது என்று எப்படித் தெரிகிறது ?

இலக்கணம்

நாம் யாரோடாவது பேசும்போது யாரைப்பற்றியாவது, நம்மைப்பற்றியாவது, நமது பேச்சைக் கேட்பவரைப்பற்றியாவது பேசிக்கொள்வது உண்டு. அப்படிப் பேசுகிறவன் தன்னைப்பற்றிக் குறிக்கும் சொல் தன்மைச் சொல் என்றும், பேசுவதை எதிர் நின்று கேட்பவனைக் குறிக்கும் சொல் முன்னிலைச் சொல் என்றும், பேசப்படும் பொருளைக் குறிக்கும் சொல் படர்க்கைச் சொல் என்றும் கூறுவது வழக்கம். இவை மூன்றும் இடம் எனப்படும்.

தன்மை (இடச்சொல்) நான், யான், நாம், யாம், நாங்கள், யாங்கள்

முன்னிலை (இடச்சொல்) நீ, நீர், நீங்கள்.

படர்க்கை (இடச்சொல்) அவன், அவள். அவர், அது, அவை.

இப்பாடத்திலிருந்து ஒவ்வொரு இடத்துக்கும் மும்மூன்று மொழி எழுது.

---

12. ஒற்றுமை

எமன்
வரை
அடிவாரம்
குவடு
பூசை (பூனை)
சூழல்
கண்ணி
விரித்தான்
சிக்கி
இயன்ற
மாளும்
மரணம்
உண்டி
அவதி

எக்கம்
சிக்குண்டு
சடுதி
விடுதலை
பருந்து
பிழைக்கலாம்
தாமதம்
நேராது
துண்டித்து
ஒளியாமல்
நல்லறிவு
ஊறிற்று
இம்மி
சேதம்

கத்தரிக்க
கடத்து
பதற்றம
தானம்
நிதானம்
அணிமை
பற்றுவது
வாவி
மார்ச்சாலம்
மாயமாய்
ஒப்புக்கொண்டது
விடுவித்தது
அடக்கி
ஆளலாம்

எலிக்கும் பூனைக்கும் பகை என்பது நமக்குத் தெரியும். எலியை எங்கே கண்டாலும் எப்போது கண்டாலும் பூனை விடுவதில்லை. பூனையே எலியினத்திற்கு எமன் என்

றுங் கூறிவிடலாம். ஆகையால், பூனையின் குரலைக் கேட்டாலே எலி காற்றுய்ப் பறந்தோடும். இவ்வளவு பகையுள்ள இரண்டும் ஒற்றுமையாகிய ஒரு கதையைக் கூறினுல் நீங்கள் வியப்படைவீர்கள் அல்லவா!

ஒரு வரையின் அடிவாரத்தில் பூனை ஒன்று வசித்திருந்தது. அக் குவட்டின் சூழலில் குடியிருந்த குறவன், அதைப் பார்த்து, எப்படியாவது இதைப் பிடிக்க வேண்டும் என நினைத்தான். ஒரு நாள் அதற்கென்று கண்ணி விரித்தான். பூனை வலையில் சிக்கிக் கொண்டது. அது தன்னுல் இயன்ற வரையில் தப்பித்துக்கொள்ள முயன்றது. பூனையின் முயற்சி பயன் படவில்லை. "இனி நாம் பிழைப்பதில்லை. இன்றோடு நம் முயிர் மாளும். நம்முடல் குறவனுக்கு உண்டியாகி விடும்" எனத் தீர்மானித்தது. தன் அவதியை எண்ணி எண்ணி ஏக்க மடைந்தது.

குறவன் வந்து தன்னை என்ன செய்வானே! எப்படிக் கொல்வானே! என்று கலங்கிக் கொண்டிருக்கும்போது அவ் வழியே ஒரு எலி வந்தது. வந்த எலியைப் பூனை பார்த்து "தம்பீ, நான் வலையில் சிக்குண்டு வருந்துகிறேன். கொலைக் கஞ்சாக் குறவன் வந்தால் கொன்று தீர்ப்பான் சடுதியில் என்னை விடுதலை செய்" என்றது.

அதைக்கேட்ட எலி "அண்ண, ஆம், உன் உயிருக்கு உறுகண் உற்றிருக்கின்றது. உன்னைக் காக்க என்னுல் ஆகும். அது ஒரு பெரிய காரிய மன்று. ஆனுலும் மேலே பார். எனக்கு எமனுக ஒரு பருந்து பறந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து நானும் தப்பவேண்டும். நாம் ஒற்றுமைப்பட்டால், இருவரும் பிழைக்கலாம்" என்றது.

அப்போது பூனை "தம்பீ, இனி நமக்குள் பகை இல்லை. நீ என்ன சொன்னாலும் அதைக்கேட்டு அப்படியே செய்கிறேன். எதையும் தாமதமில்லாமல் யோசித்துச் சொல்" என்றது. "ஆம்; அண்ணா இச்சமயத்தில் நிதானம் கூடாது. நான் உன்னுடன் இவ்வலையில் புகுந்து கொள்கிறேன். நீ என்னைக் கொல்லாமல் இருந்தால், உனக்கும் கொலை நேராது. குறவன் வரும்போது வலையை நான் துண்டித்து விடுகிறேன். இருவரும் இன்பமாக வாழலாம். என்ன சொல்கிறாய். உன் எண்ணத்தை ஒளியாமல் கூறு" என்றது எலி.

பூனைக்கு நல்லறிவு பிறந்தது. "அப்படியே செய். நான் உன்னைக் கொல்ல மாட்டேன். உன்னை அடித்துத் தின்றால், அடுத்தபடி என்னுயிர் எமனிடம் சேரும் என்பது எனக்குத் தெரியும். உண்மையாக உன்னைக் காப்பேன். என் சொல்லை நம்பு" என்றது. அதை நம்பி எலியும் வலைக்குள் நுழைந்து கொண்டது.

பூனைக்கு நாவில் நீர் ஊறிற்று. பற்கள் 'பத, பத' எனப் பதைத்தன. ஆயினும் அது ஆசையை அடக்கிக் கொண்டது. ஏன்? எலியின் ஆவி போனால் தன்னைக் காத்துக் கொள்ள முடியாதல்லவா! ஆகையினாற்றான். அதை உணர்ந்ததால் எலியும் இம்மியளவும் பயமின்றி உடனிருந்தது. பருந்து பயனின்றித் திரும்பிச் சென்றது.

வலையிற் புகுந்த எலி, சிறிது சிறிதாக வலையைச் சேதஞ் செய்யத் தொடங்கியது. ஆனாலும் பூனை வெளிப்பட்டுவிடும் அளவு அது கத்தரிக்கவில்லை. பூனைக்கு ஆத்திரந்தான். தம்பீ, இன்னும் தாமதமா? ஏன் காலம் கடத்துகிறாய்? குறவன் வந்து விடுவானே" என்றது. எலியோ

"அண்ணு, ஐந்து வந்தாலும் அவசரங் கூடாது; பத்து வந்தாலும் பதற்றங் கூடாது. தானத்தைக் காட்டிலும் நிதானம் பெரிது. பயப்படாதே, உன்னைப் பாதுகாப்பது என் கடமை" என்றது.

கொஞ்ச நேரத்துக்குள் கண்ணி விரித்த குறவன் வருவதை எலி பார்த்தது. அவன், அண்மையில் வரும்போது வலையை மிகுதியாகக் கடித்தது. குறவன் வலைக்குள்ளிருந்த இரண்டையும் பார்த்தான். மனங் கொள்ளாத மகிழ்ச்சி யடைந்தான். எதை முதலில் பற்றுவதென யோசித்துக் கொண்டிருந்தான். வலைக்குள்ளிருந்த பூனை வாவியோடிற்று. அதைப்பற்ற முயன்ருன் குறவன். ஆனல், மார்ச்சலாம் மாயமாய் மறைந்தது. திரும்பிப் பார்ப்பதற்குள் எலியும் திட்டென்று வெளிப்பட்டது. வெளிப்பட்ட எலி விரைந்தோடி வளையில் புகுந்தது.

குறவனது ஆசையெல்லாம் வீணுயிற்று. "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே" என்று அவன் வருந்தினன். 'வாய்த்தவிடும் போயிற்று அடுப்பு நெருப்பும் போயிற்று என்றபடி, வலையும் சேதமடைந்தது. வலையில கப்பட்ட எலியும் பூனையும் தப்பியோடின' என்று நினைத்துக் கொண்டே சென்ருன்.

என்றும் பகையைப் பாராட்டும் பூனை, எலியை உதவி வேண்டிற்று. எலி, பகையை மறந்து உதவ ஒப்புக் கொண்டது. தன்கையில் அகப்பட்ட எலியைப் பூனை இன்னல் செய்யாமல் விட்டது. அதைப் போலவே எலியும் பூனையை வலையிலிருந்து விடுவித்தது. இவ்வளவும் ஒற்றுமையினல் நடந்தன அல்லவா? ஒன்றுபட்டால் உலகத்தையும் அடக்கி ஆளலாம் என்பது இதனல் தெரிகிறது.

இது போலவே மக்கள் ஒன்றுபட்ட உணர்ச்சி யுடைய வர்களானால் ஒன்றாலும் குறைவின்றி வாழலாம்.

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு.

பயிற்சி 12.

(அ) பறந்தோடும், திட்டென்று, உற்றிருக்கிறது பதம்பிரிக்க.

(ஆ) பாய்ந்து என்பதை வேறு மொழியால் கூறு.

(இ) குரவர், குறவர் பொருள் எழுது.

(ஈ) ஒற்றுமை, மாளும், தாமதம் எதிர்மொழி எழுது.

(உ) ஒளி, இருபொருள் எழுது.

(ஊ) ஒளி, ஒலி அர்த்தத்தின் மாறுபாடு கூறு.

(எ) ஏக்கம், விடுதலை, தானம், நிதானம், ஆளலாம் தொடரில் அமைக்க.

(ஏ) பூனையின் இயல்பைக் குறிக்கும் ஆறு சொற்றொடர் எழுது.

(ஐ) குறவன் பூனையைப் பார்த்தான்; எப்படியாவது பிடிக்க நினைத்தான்; ஒருநாள் கண்ணிவிரித்தான்; அதில் பூனை சிக்கு மாறு செய்தான். இத்தொடர்களை ஒரே தொடராக்கு.

(ஒ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(1) ———எலிகளுக்கு எமன்.

(2) ———முயற்சி பயன்படவில்லை.

(3) ———எண்ணிப் பூனை ஏங்கியது.

(4) ———புகுந்த எலி அதைச் சேதித்தது.

கேள்விகள்

(1) இப்பாடத்தில் ஒற்றுமை கொண்டவை எவை?

(2) ஆம்; அண்ணா இச்சமயத்தில் நிதானம் கூடாது; என்பது யாரால் யாரிடம் எப்போது கூறப்பட்டது?

(3) 'குறவன் ஆசை வீணாயிற்று' எப்படி?

(4) இக்கதையின் நீதியாது?

இலக்கணம்

இராமன் அடித்தான், இராமனை அடித்தான் இவற்றில் இராமன் என்பதற்கும் இராமனை என்பதற்கும் என்ன வேறுபாடு. இராமன் என்பது அடித்தலைச் செய்தவன் என்று காட்டுகிறது; இராமனை என்பது அடியைப் பட்டவன் என்று காட்டுகிறது. இப்படி அடித்தவன் என்னும் பொருளை அடிபட்டவன் என்னும் பொருளாக வேற்றுமை செய்தது எது? ஐ என்னும் எழுத்து ஆகையால், இது வேற்றுமை உருபுஎனப்படும். வேற்றுமை எட்டு வகை.

முதல் வேற்றுமை கை.
இரண்டாம் வேற்றுமை கையை—ஐ உருபு
மூன்றும் வேற்றுமை கையோடு—ஓடு
நான்காம் வேற்றுமை கைக்கு—கு
ஐந்தாம் வேற்றுமை கையி லிருந்து—இருந்து
ஆறும் வேற்றுமை கையினது—அது
ஏழாம் வேற்றுமை கையில்—இல்

எட்டாம் வேற்றுமை கையே, இது கூப்பிடுதல். அம்மையே, இராமா, கந்தா, முருகா என வரும்.

இப்பாடத்தி லிருந்து ஒவ்வொரு வேற்றுமைக்கும் ஒவ்வொரு உதாரணம் எழுது

---

13. பச்சையப்ப முதலியார்

காஞ்சி	மண்டபம்	வட்டி
விரதம்	விக்கிரகம்	குவிந்து
அமயம்	செல்வாக்கு	வட்டத்துக்கு

வாய்த்தது	தோடா	அந்தியம்
கதி	மோதிரம்	வருகை
நண்பர்	சரிகை	கருவம்
உதித்தது	உருமால்	சாற்றுவோம்
அடைக்கலம்	பல்லக்கு	பட்டினம்
தாகு	இசை	கல்விச்சாலை
இராணுவம்	வீணை	சிதம்பரம்
உத்தியோகஸ்தர்	தேவாரம்	கோபுரம்
நட்பு	திருவாசகம்	காசி
துவிபாஷி	தனவந்தர்	இராமேசுவரம்
இசுரன்	வாணிபம்	திண்ணம்
திருப்பணி	இராஜாங்கம்	வழிகாட்டி

காஞ்சிமா நகரில் **விசுவநாத முதலியார்** என்பவர் ஒருவர் வசித்திருந்தார். அவருடைய மனைவியின் பெயர் **பூச்சியம்மாள்** இவர்களுக்கு மிகுந்த பொருட் செல்வமில்லை. ஆனாலும் தயையும் தருமமும் உடையவர்களா யிருந்தார்கள். நற்குணமும் நற்செய்கையும் உடைய இவர்களுக்கு இரு பெண் குழந்தைகள் பிறந்தன. ஆண்மகவு இல்லையே என்ற குறை விசுவநாத முதலியாருக்கும் பூச்சியம்மாளுக்கும் ஏற்பட்டது. ஆகையால், ஆண்டவனை வேண்டி அரிய விரதங்கள் இருந்தார்கள்.

விசுவநாத முதலியாரின் விரதத்தாலும் பூச்சியம்மாளின் புண்ணியத்தாலும் ஆண்மகன் பிறக்கும் அமயம் வாய்த்தது. ஆனால், பிள்ளை பிறப்பதற்குள் தந்தை மரணமடைந்தார். கணவனை யிழந்த பூச்சியம்மாள் கதியின்றிக் கலங்கினார். இரு பெண் குழந்தைகளையும் கூட்டிக்

கொண்டு பெரியபாளையம் என்னும் ஊரை யடைந்தார். அங்கே விசுவநாதருடைய நண்பர் ஒருவர் இருந்தார். அவர் அந்தணர்; அவருடைய பெயர் ரெட்டிராயர். பூச்சியம் மாள் இராயருடைய இல்லத்தை யடைந்தார். ரெட்டிராயர், பூச்சியம்மாளையும் குழந்தைகளையுங் காப்பாற்றினர். அங்கேதான் ஆண் குழந்தை உதித்தது.

பிறந்த குழந்தையைக் கண்ட ரெட்டிராயர், நண்பர், மீண்டும் பிறந்ததாக நினைத்து மகிழ்ந்தார். பச்சையப்பன் என்ற பெயருமிட்டார். கண்ணுங் கருத்துமாக வளர்த்தார்; கல்வியுங் கற்பித்தார். பச்சையப்பனே படிப்பில் மிக ஊக் கங் கொண்டு படித்து வந்தான். அப்போது திட்டென்று ரெட்டிராயர் இறந்தார். அதன் பின்பு மூன்று குழந்தை களுடன் பூச்சியம்மாள் சென்னையை யடைந்தார். அங்கே அப்போது பெரிய பணக்காரராய் இருந்தவர் பௌனி நாரா யண பிள்ளை என்பவர். அவர் மிகவும் நற்குணம் வாய்ந்த வர், தருமம் புரியுந் தன்மை யுடையவர். அவரிடத்தில் பூச்சியம்மாள் அடைக்கலம் புகுந்தார். தம் கையிலிருந்த சிறிது பொருளையும் அவரிடமே தந்து வைத்தார். நாரா யண பிள்ளை, பூச்சியம்மாள் தந்த பணத்தைப் பல வகையில் அதிகப் படுத்தினர். அப்படியே பச்சையப்பனையும் படிப் பில் முன்னுக்குக் கொணர்ந்தார். பச்சையப்பனும்படிப்பு, அறிவு, உழைப்பு, உண்மை முதலியவற்றில் சிறந்து விளங் கினன்.

சில நாட்களில் பச்சையப்பன் ஒரு பீங்கான் கடையில் தரகு வேலைக்கு அமர்ந்தான். அதன் மூலம் நல்லவர் பல ருடைய நேசம் பச்சையப்பனுக்குக் கிடைத்தது; மரியா

தையும் ஏற்பட்டது. அது முதல் யாரும் பச்சையப்பர் என்று சிறப்பிக்கத் தொடங்கினர்கள். பச்சையப்பருக்கு இராணுவ உத்தியோகஸ்தர் ஒருவருடைய நட்பும் ஏற்பட்டது. அவ்வுத்தியோகஸ்தர் பச்சையப்பருக்கு ஒரு வேலை பார்த்துக் கொடுத்தார். ஆனல், நாராயண பிள்ளை அதை விரும்பவில்லை. பச்சையப்பரை அழைத்து வந்து ஒரு துரையிடத்தில் துவிபாஷியாய் அமர்த்தினர்.

சிறிது நாளில் பச்சையப்பர், மணம் புரிய மனங் கொண்டார். இளமையிலே அவர் கொண்டிருந்த தரும குணமும் வளர்ந்தோங்கியது. ஆதலால், காஞ்சி ஈசுவரன் கோயிலில் ஒரு கலியாண மண்டபத் திருப்பணி செய்தார் கோயிலுக்கு வேண்டிய இரண்டு விக்கிரகங்களும் செய்து வைத்தார். இக்காரணங்களால் பச்சையப்பருடைய பெயர், எங்கும் பரவிற்று. புகழும் பெருகிற்று. நல்ல செல்வாக்கும் ஏற்பட்டது.

பச்சையப்பருடைய உருவத்தைப் பாருங்கள். தலைப் பாகையும் காதில் கடுக்கனும் பச்சைக்கல் முருகும் கழுத்தில் மணி மாலையும் கரங்களில் தோடாவும் கைவிரல்களில் மோதிரமும் அணிந்திருக்கிறர். அவர் இடையில் சரிகைக் கட்டுடன் நிற்கிறர். கையில் எப்போதும் சிவப்பு உருமால் பிடித்திருப்பார். பச்சையப்பர் பல்லக்கில் ஏறிச் செல்வது வழக்கம். பச்சையப்பருக்கு இசை பாடவும் நன்ருகத் தெரியும். வீணையுடன் தேவார திருவாசகங்களைப் பாடுவார். பூசை செய்யும்போதும் தேவார திருவாசகப் பாக்களைப் பாடுவார். கடவுட் பூசையைப் பச்சையப்பர் ஒரு நாளும் மறந்தவரல்லர்.

நாளடைவில் பச்சையப்பர் ஒரு பெரிய தனவந்தராயினர். அப்போது அவர் சலிவன் துரையிடத்தில் துவிபாஷி

யாய் அமர்ந்தார். வயதேற வயதேற வாணிபம், இரா
ஜாங்கம் முதலியவற்றில் மிகத் தேர்ச்சி யடைந்தார்.

இராஜ தந்திரமிக்க பச்சையப்பர் தஞ்சாவூரை யடைந்தார். சிற்றரசர்களுக்கு உதவியாயிருந்தார். பல குறுநில வேந்தர்களுக்குப் பணவுதவியும் புரிந்தார். அப்போது அவருக்கு வட்டியில் பணம் மிகுதியாகக் குவிந்து விட்டது. அதனேடு வட்டத்துக்குப் பணங் கொடுத்ததாலும் பொருள் திரண்டது. அதனல், பச்சைப்யர் தஞ்சாவூரில் பெரிய மாளிகை அமைத்துக் கொண்டார். பச்சையப்பர் தமது அந்தியகாலத்தில் தஞ்சாவூரையடுத்த திருவையாறு என்னும் ஊரில் வசித்தார். சென்னே சிந்தாதிரிப்பேட்டையிலும் அவர் வசித்திருந்தார். அக்காலத்தில் அவருக்குப் பொருள் வரகை மிகுதி. மிக்க பொருள் குவிந்த காலத்திலும் அவர் கருவங் கொள்ளவில்லே. பல தருமங்களேச் செய்து மகிழ்ந்தார். பச்சையப்பர் தமது உடல் நலனேக்கருதிக் கும்ப கோணத்தில் கொஞ்ச நாள் தங்கியிருந்தார். ஆனல், அவர் திருவையாற்றிலேதான் இறந்தார்.

இனி பச்சையப்ப முதலியார் செய்த தருமங்களேச் சாற்றுவோம்:—காஞ்சிமா நகரிலும் சென்னேப் பட்டிணத்திலும் பச்சையப்பரது பொருளால் நியமிக்கப்பட்ட கல்விச் சாலேகளே யாரும் அறிவார்கள். சிதம்பரத்தில் கிழக்குக் கோபுரம் கட்டினர். காசிமுதல் இராமேசுவரம் வரையில் உள்ள பல கோவில்களில்சிற்சில ஏற்பாடுகள் (கட்டளேகள்) செய்திருக்கிறர்.

தருமமே உருவமாகப் பிறந்த பச்சையப்பர் தமது நாற்பதாம் வயதாகிய 1794-ஆம் வருஷம் ஆவி துறந்தார். ஆனலும் அவருடைய புகழ், இறவாமல் இன்றும் நிலேத்திருக்கிறது. இனிமேலும் அவருடைய பேரும் பெருமையும் புகழப்படும் என்பது திண்ணம். அறம் புரிவதால் ஆகும்

இன்பத்தை அடைந்த பச்சையப்பர் மக்களுக்கு வழி காட்டியாகிறார் அல்லவா !

பயிற்சி 13.

(அ) பொருட்செல்வம், நற்குணம் மொழி பிரிக்க.

(ஆ) அமயம், உதித்தது, தனவந்தர், திண்ணம் பொருள் கூறு.

(இ) ஏற்பாடு என்பதைக் குறிக்கும் வேறு சிலமொழி கூறு.

(ஈ) தனவந்தர் எதிர்பதம் எழுது.

(உ) மணம், மனம் பொருள் எழுது.

(ஊ) விரதம், தரகு, செல்வாக்கு, வட்டி, கட்டளை, திண்ணம் தொடரில் அமைக்க.

(எ) பச்சையப்பர் தேவாரம் படிப்பார் ; பூசைசெய்வார் ; தருமத்தையே சிந்திப்பார் ; பலருக்கும் நன்மை செய்வார். ஒரே தொடராக்கு.

ஏ. கோடிட்ட இடத்தை நிரப்பு.

(1) ——— விசுவநாத முதலியார் வாழ்ந்தார்.
(2) ——— பெரியபாளையத்தில் வசித்திருந்தார்.
(3) ——— பீங்கான் கடையில் தரகுவேலை செய்தான்.
(4) ——— பச்சையப்பர் பெரிய தனவான் ஆனார்.

கேள்விகள்

(1) பச்சையப்பரின் பெற்றோர் யார்?
(2) பௌனி நாராயணபிள்ளை என்பவர் யாவர்?
(3) பச்சையப்பர் எவ்வெவ்விடங்களில் வசித்தார்?
(4) பச்சையப்பர் செய்த தருமங்கள் எவை?

இலக்கணம்

கண்ணன் வந்தான். கண்ணன் வந்து போனான். நேற்று வந்த கண்ணன். இவற்றில் வந்தான் என்பது முடிவான பொருளைத் தருகிற-

வினைச்சொல்; ஆகையால், முற்றுவினை எனப்படும். வந்து, வந்த என்பவை முடிவான பொருளைத் தராத வினைச்சொல்; ஆதலால், எச்சவினை எனப்படும்.

இப்பாடத்திலிருந்து முற்றுவினை நான்கும் எச்சவினை ஆறும் எடுத்து எழுது.

---

14. காஞ்சிமா நகரம்.

முத்தி	திரள்	உயர்வு
தொண்டை நாடு	ஆங்காங்கு	நிலை
திகழ்கிறது	ஆழம்	பாமரர்
சிவாலயம்	அகலம்	கைகூப்பி
விஷ்ணுவாலயம்	தானியம்	பாராட்டு
ஜைன மதம்	பூர்வ கதை	திகைப்பது
சைவ மதம்	வழங்குகிறது	மாடம்
தழுவிய	இராது	கூடம்
தொண்டன்	தலம்	மேம்பட்ட
பகுதி	விருக்ஷம்	பாதைகள்
திருவிழா	ஈடு	தென்னிந்தியா
திருநாள்	எடுப்பு	இருப்புப்பாதை
பெருவிழா	ஒப்பு	தொன்மைப்பதி

நாம் வசிப்பது இந்து தேசம் இது ஒரு புண்ணிய பூமி. இத்தேசத்தில் அழகிய பல பட்டணங்களிருக்கின்றன. அவற்றுள் ஏழு நகரங்கள் மிகச் சிறந்தவை. அவை காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, மதுரை, மாயை, அயோத்தி என்பன.

அந்த ஏழு நகரங்கள் முத்தி தருவன எனப்படும். அவற்றுள் காஞ்சியை காஞ்சீபுரம் காஞ்சிமா நகரம், கச்சிப்பதி, எனச் சிறப்பாய்க் கூறுவதுண்டு.

காஞ்சீபுரம் தொண்டை நாட்டின் முகமாக விளங்குகிறது. அது பல்லவ அரசர்களுக்குத் தலை நகரமாயிருந்தது. பல்லவர் குலத்துக்குத் தோண்டைமான் குலம் என்ற பெயருமுண்டு. ஆகையால், அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட பூமி, தொண்டை மண்டலம் எனப்பட்டது. காஞ்சி பாலாற்றங் கரையிலிருக்கிறது; நெடு நாட்களாகவே சிறப்புடன் திகழ்கிறது. அதனுள் பல சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் உள்ளன. அவற்றுள் ஏகாம்பர நாதர் கோயில் என்னும் சிவன் கோயிலும் வரதராஜப் பெருமாள் கோவில் என்னும் விஷ்ணுவாலயமும் பெரியவை. இவையன்றி காமகோடி பீடம், குமரகோட்டம், கச்சாலீசுரர் கோயில், பச்சைவண்ணர் கோயில், பவளவண்ணர் கோயில், வைகுந்த பெருமாள் கோயில், சொன்ன வண்ணங் கேட்ட பெருமாள் கோயில் எனப் பல கோயில்களுண்டு.

காஞ்சிமா நகரத்தில் இருந்த பல்லவ மன்னர்களுள் மிகப்புகழ் பெற்றவர்கள் இருவர். அவர்கள் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் என்பவர்கள். மகேந்திரவர்மன் என்பவன் முதலில் ஜைனமதத்தைக் கைக்கொண்டிருந்தான். அவன் காலத்தில் திருநாவுக்கரசர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஜைனமதத்திலிருந்து சைவமதத்துக்கு மாறினர். அப்போது மகேந்திரவர்மனும் சைவமதத்தில் சேர்ந்தான். சைவமதந் தழுவிய மகேந்திரவர்மன் மிகச் சிறந்த சிவத் தொண்டனகி விட்டான். அதன் பயனுக அங்கங்கே பல சிவாலயங்கள் கட்டப்பட்டன.

மகேந்திரவர்மனுக்குப் பின்னல் நரசிம்மவர்மன் பட்டம் பூண்டான். அவனை மாமல்லன் என்றும் வழங்குவதுண்டு. அவன் காலத்திலும் மிகமிகக் கோயில்கள் கட்டப் பட்டிருக்கின்றன. முன்னே கூறப்பட்ட கோயில்களனைத்தும் பல்லவர்களால் கட்டப் பட்டவைகளே.

காஞ்சீபுரம் இருபகுதியாயுளது. அவை பெரிய காஞ்சீபுரம், சின்ன காஞ்சீபுரம் எனப்படும். பெரிய காஞ்சியில் சிவன் கோயிலும் சின்ன காஞ்சியில் விஷ்ணு கோயிலும் அமைந்திருக்கின்றன. ஏகாம்பரநாதர் கோயிலில் பங்குனி மாதம் சிறப்பான திருவிழா நடைபெறும். வரதராஜர் கோயிலில் வைகாசி மாதம் மேன்மையான திருநாள் நிகழும். மற்ற ஆலயங்களுக்கும் ஒவ்வொரு மாதத்தில் உயர்ந்த திருவிழாக்கள் நடக்கும். அங்கே நடக்கும் திருவிழாக்கள் கண்டானந்திக்கத் தகுந்தவை. பெருவிழாக்கள் இரண்டிலும் கணக்கற்ற மக்கள் திரள் திரளாக வந்து குவிவார்கள்.

கச்சிப்பதியில் உள்ள தெருக்கள், மிக அகலமானவை. மிக்க நீளமும் உடையவை. அவை சிறந்த அழகு மிகுந்தவையும் ஆகும். காஞ்சிமாநகரத்தில் ஆங்காங்கு ஆழமும் அகலமும் உள்ள பலகுளங்கள் உண்டு. அவை படிகளால் அழகு செய்யப் பட்டிருக்கும். அந்நகரத்தின்தெரு, கோயில், குளம் முதலியவற்றைப் பார்த்தால், பல்லாண்டுகட்கு முன்னமே காஞ்சி, நாகரிகத்திலும் கல்வியிலும் சிறந்திருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

காஞ்சியில் கைத்தொழிலும், காலங் காலமாக நடந்து வந்தது. அது நெசவுத் தொழிலுக்குப் பேர் போனது. அதிலும் பட்டு நெசவு, பன்னூறு யாண்டுகளாக நிலைக்கப்

பெற்றது. ஆனது பற்றியே "காஞ்சீபுரம் போனல் காலாட்டிச் சோறுண்ணலாம்" என்னும் பழமொழியும் வழங்குகிறது.

காஞ்சீபுரத்தில் பல கல்விமான்கள் வாழ்ந்திருந்தார்கள். அங்கே அருமையான பாடசாலைகள் அநேகம் இருந்தன. இன்னும் அது வியாபாரத்துக்கும் பேர் பெற்றது. உழவுத் தொழில் அங்கே ஊக்கத்தோடு செய்யப்பட்டது. "உமாதேவி, காசியிலிருந்து காஞ்சிக்கு வந்து பயிர்த் தொழில் செய்து விளைந்த தானியத்தைக் கொண்டு முப்பத்திரண்டு வகையான தருமம் செய்தார்" என்னும் பூர்வ கதை ஒன்று வழங்குகிறது. இப்படி உழவு, வாணிபம், கைத்தொழில், கல்வி, அரசு ஆகியவற்ருல் மேன்மையுற்ற ஒரு நகரம் செல்வத்தால் குறைந்திருக்குமா? இராதன்றே.

காஞ்சிமா நகரத்தில் ஏகாம்பரநாதர் கோயிலில் ஒரு தல விருக்ஷம் உண்டு. அது மாமரம். அதன் தோற்றம், ஈடும் எடுப்பும் இல்லாதது. ஒப்பு, உயர்வில்லாத அத்தரு; தெய்வத்தன்மை பொருந்தியது. அதைக் கண்ணுல் கண்டவர்கள், கடவுள் நிலையைக் கண்டதே போல் களிப்பும் வியப்பும் ஒருங்கே கொள்வார்கள். பாமரரும் அம்மாமரத்தைக் கண்டால் கடவுள் நம்பிக்கை கொண்டு தம்மை மறந்து கைகூப்பி வணங்கிப் பாராட்டுவார்கள். அம்மாமரத்தைப் பார்ப்பவர், அம்மா! மரமா இது! எனத்திகைப்பது திண்ணம்.

தெய்வத் தன்மை பொருந்திய அத்திருப்பதி, மாட மாளிகைகளாலும் கூடகோபுரங்களாலும் விளங்குகிறது. விளக்கத்தால் மேம்பட்ட இப்பட்டணத்துக்குப் பல திசை

களிலிருந்தும் பாதைகளமைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் தென்னிந்திய இருப்புப் பாதையும் ஒன்ருகும்.

தொண்டை நன்னுட்டின் தொன்மைப்பதியாகிய இதை எவரும் கண்டு களிக்க வேண்டியது அவசியம் அல்லவா!

பசிற்சி 14.

(அ) விஷ்ணு வாலயம், ஆங்காங்கு, பூர்வகதை பதம் பிரிக்க.

(ஆ) ஈடு என்பதைக் குறிக்கும் வேறுமொழி கூறு.

(இ) திரள், பூர்வம், கூப்பி, பதி பொருள் கூறு.

(ஈ) பெருஞ் சிறப்பு, பெறுஞ் சிறப்பு பொருள் எழுது.

(உ) பாதை இருபொருள் எழுது.

(ஊ) திகழ்கிறது, விழா, ஆங்காங்கு, எடுப்பு, மாடகூடம் தொடரில் அமைக்க.

(எ) திருநாவுக்கரசர் சைவமதத்தில் சேர்ந்தார்; அப்போது மகேந்திரவர்மனும் சேர்ந்தான் ஒரே தொடராக எழுது.

(ஏ) சின்ன காஞ்சிபுரத்தைப்பற்றி ஐந்து சொற்றொடர் எழுது.

(ஐ) கோடிட்ட இடத்தை நிரப்பு.

(1) ——— இருபகுதியா யிருக்கிறது.

(2) ——— ஏகாம்பரர் கோயில் உளது.

(3) ——— கைத்தொழிலும் காலங்காலமாக நடந்தது.

(4) ——— கோயிலின் தலவிருக்ஷம் மாமரம்.

கேள்விகள்

(1) காஞ்சிப்பதியில் உள்ள கோவில்கள் எவை?

(2) காஞ்சிபுரத்தைப்பற்றிய பழமொழி யாது?

(3) காஞ்சிமா நகரத்தைப்பற்றிய பூர்வகதை எது?

இலக்கணம்.

வந்த கண்ணன் வந்து போனான் என்னும் இரண்டும் எச்சவினை. ஆயினும் வந்த என்பது பெயரைக்கொண்டு முடிகிறது; ஆதலால், அது பெயரெச்சம். வந்து என்பது வினையைக் கொண்டு முடிகிறது; ஆகையால், அது வினையெச்சம் இப்பாடத்திலுள்ள எச்சவினைகளுள் இரண்டு பெயரெச்சமும் இரண்டு வினையெச்சமும் எழுது

---

15. பிரகலாதன்.

சற்றேனும்	இரந்தான்	மீறவில்லை
தேவனை	இறவாத	இனி
கும்பிடல்	கருப்பம்	மாண்டு
சட்டங்கள்	ஈன்றாள்	பிறவி
திருத்தினார்கள்	வல்லவன்	ஆண்டவன்
செருக்கினான்	பணிய	கொலைஞர்
சுருட்டி	அதிகாரம்	மடு
பாதாளம்	பலிக்க	கொப்பரை
வராகம்	மாரி	கரி
புவனம்	நழுவி	இழை
துஞ்சினான்	பூரித்தான்	பித்து
வெட்கம்	உன்னினான்	பரம்
வெகுளி	பலவான்	விடை
பிரமன்	கருத்து	மதம்
அயன்	கடைத்தேற	பொங்கிற்று
நளினம்	மாருக	இருமாந்த

நண்ணிய	அமர்த்திஞன்	நரசிங்கம்
படைக்கும்	மறுக்கிருப்	அவதாரம்
கோருகிறேன்	தவிர	நாசம்

முன் காலத்தில் இரணியன் என்று ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு தம்பி யுண்டு. அவன் பெயர் இரணியாக்கன். இருவரும் பெரிய வீரர்கள். அஞ்சாத நெஞ்சு படைத்தவர்கள். அதிக நாள் தவம் செய்து வரம் பெற்றவர்கள். அவர்கள் எதையும் எண்ணியபடி இயற்றுவார்கள். இது நல்லது, இது கெட்டது என்று சற்றேனும் அறியாதவர்கள்.

தேவனை நோக்கித் தவம் செய்து, கடவுளிடம் வரம் பெற்று, கனமடைந்த பின் கடவுளை இருவரும் மறந்து விட்டார்கள். கடவுளைக் காட்டிலும் தாங்களே மேல் எனத் திடமாகத் தீர்ப்புச் செய்தார்கள். நினைத்தபடி சட்டங்களைத் திருத்தினார்கள். இவ்விதம் இரணியன் ஆட்சி நிகழும்போது, அவனுடைய தம்பி செருக்கினன். உலகத்தைப் பாய்போல் சுருட்டிப் பாதாளத்திற்குக் கொண்டு போய் விட்டான். அப்போது திருமால், வராக வுருவமாய்ச் சென்றார். இரணியாக்கனைக் கொன்றார். திரும்பவும் புவனத்தைக் கொண்டு வந்து பழைய நிலையில் வைத்தார். பாதாளத்தில் தம்பி துஞ்சினன் என்பதை இரணியன் அறிந்தான். அளவில்லாத துக்கமடைந்தான். அதோடு வெட்கமும் அவனை வாட்டியது. தாங்க முடியாத வெகுளி வளர்ந்தெழுந்தது. அப்போதே 'அத்திருமாலை அழிக்க வேண்டும்' என நினைத்தான். ஆனல், கொஞ்சம் அஞ்சினன். ஏன்? 'திருமால் நம்மைக் கொன்று விடுவாரோ' என்றுதான்.

இரணியன் மறுபடி தவம் செய்ய நினைத்தான். பெருங் காடடைந்தான். ஊண், உறக்கம் மறந்தான். பனி, மழை, வெய்யில், ஒளி, இருள் எதையும் பொறுத்தான். ஒரே எண்ணத்தில் ஊக்கங் கொண்டான். உண்மைத் தவம் புரிந்த இரணியன் பிரம தேவரைக் குறித்துச் செய்தான். பல யாண்டாகப் பக்தியோடு தவம் புரிந்த இரணியன் மீது அயனுக்கு அருள் பிறந்தது. அவன் எதிரில் தோன்றினர். அப்போது இரணியன் பிரம தேவரைப் பணிந்து, "நான் முகக் கடவுளே, நளின மலர் நண்ணிய நாதா, படைக்குந் தொழில் புரியும் பரமனே," என்று புகழ்ந்து பாடிக் கைகூப்பி நின்ருன்.

நான் முகன் இரணியனைப் பார்த்து "உனக்கு யாது வரம் வேண்டும்? விரும்புவதைக் கேள்" என்ருர். "அண்ணலே, அடியேனுக்கு மரண மில்லாதவாறு அருள் புரிய வேண்டும். எவராலும் எப்போதும் எவரிடத்திலும் இறப்பில்லாதவன் என்கிற நிலைமை எனக்கீயக் கோருகிறேன். இதேயான் வேண்டுவது" என இரணியன் இரந்தான். இறவாத வரத்தை இரந்த இரணியனுக்கு எண்ணிய படியே பிரம தேவர் ஈந்தருளினர்.

இரணியன் தவத்துக்குப் போகும்போது அவனுடைய மனைவி கருப்பமா யிருந்தாள். அவன், தவத்திலிருக்கும் போதே அவள், ஆண் பிள்ளையை ஈன்ருள். அரண்மனையிலிருந்த குருவாகிய சுக்கிராசாரியர், அக்குழந்தைக்கு பிரகலாதன் என்னும் பெயரிட்டார். அப்பிள்ளை அழகிலும் அறிவிலும் சிறந்து விளங்கியது. இயல்பாகவே கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தது. அதிலும் திருமாலையே முதற் றெய்வமாகக் கருதியிருந்தது. திருமாலின் பெயர்களுள் ஒன்ருகிய நாரா

யணன் என்பதை அப்பிள்ளை மறப்பதே யில்லை. எப்போதும் 'நாராயணுய நம' என்னும் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

இந்த நிலையில் பிரகலாதன் இருக்கும் போது இரணியன் திரும்பி வந்தான். வரம் பெற்ற களிப்போடு மகன் பிறந்த மகிழ்ச்சியும் கலந்தது. சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்தது போலவும், பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்றும் உளம் பூரித்தான். ஒன்ருலும் குறைவில்லை என்று உன்னினுன். ஆனுலும் தம்பியைக் கொன்ற திருமாலைப் பழி வாங்கும் எண்ணத்தை அவன் மறக்கவே யில்லை. அதன் பொருட்டல்லவா அதிக நாள் தவம் புரிந்து வரம் வாங்கினுன். அதை விடுவானு!

இரணியன் தன் மகனைத் தன் உயிர் போல எண்ணினுன். செல்வமாக வளர்த்துத் தன் குலத்தைப் பெருக்கக் கருதினுன். தனக்குப் பின் தன் மகனே பகைவரை யழிக்கும் பலவானு யிருப்பான் என்றும் நம்பினுன். ஆனல், அவன் கருத்து கடைத் தேறவில்லை. அவன் எண்ணத்திற்கு மாருக முடிந்தது. பிரகலாதனுடைய செய்கையைப் பற்றிச் சுக்கிராசாரியார் இரணியனிடம் கூறினர். இரணியன் மகனைக் கூப்பிட்டான்; மடிமேல் அமர்த்தினுன். "பிரகலாதா நீ என்னைத் துதி. நானே தெய்வம் வேறு ஒரு தெய்வம் இருப்பதாக நீ நினைக்கிருய்; அதையே அல்லும் பகலும் துதிக்கிருய். இது உனக்குத் தகுதியன்று. உன்னைத் தவிர வேறு யாரும் இச்செயலைச் செய்யத் துணியவில்லை. தேவர்களும் என் கட்டளையை மீறவில்லை. இனியாயினும் நீ இதை மீருமல் செய்" என்ருன். அதைக் கேட்ட அப்பிள்ளை "அப்பா, அவனன்றி

ஓரணுவும் அசையாது! மாண்டு பிறக்கும் மற்ற எப்பிறவியும் ஆண்டவனுக்குச் சமம் இல்லை; என்ருல் நானே ஆண்டவன் என்று நீர் இயம்புவது எப்படிப் பொருந்தும்" என்ருன். அதனல், இரணியனுக்கு ஏற்பட்ட கோபத்துக்கு அளவில்லை.

கோபங்கொண்ட கொடியோன் குழந்தை என்பதையும் மறந்தான். கொல்லும்படி சொல்லி விட்டான். கொலைஞர் பிரகலாதனைக் கொண்டுபோய், ஆழ் கடலின் நடுவில் தள்ளினர்கள்; மலையின் மீதிலிருந்து மடுவில் உருட்டினர்கள்; நஞ்சைப் பாலில் கலந்து ஊட்டினர்கள்; கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் தோய்த்தார்கள். கரியின் காலில் அகப்பட விட்டார்கள். பிரகலாதன் இளம் பிள்ளையாயினும் எதற்கும் இமையளவும் பயப்படவில்லை; அவன் இறைவனையே ஏத்திக் கொண்டிருந்தான். இன்னலின்றி இன்பமாகவே இருந்தான்.

எதனுலும் இறவாத இளம் பிள்ளையை இரணியன் பார்த்து "அடே, உனக்கென்ன பித்தேறி விட்டதா? அதனுல் தான் கண்ணுல் காண முடியாத ஒரு பொருள் உண்டென்று நம்பி, அதையே பர தெய்வமாகத் துதிக்கிருயா" என்ருன். அதற்கு விடையாக "அப்பா, உம் மனதில் மதமயக்கம் நிறைந்திருக்கிறது. அதனுல் தான் எங்கும் நிறைந்துள்ள இறைவனை இகழ்கிறீர்" என்ருன் பிரகலாதன். இரணியனுக்கு இன்னும் கோபம் பொங்கிற்று. எதிரில் உள்ள ஒரு கம்பத்தைக் காட்டி "எங்கும் நிறைந்திருக்கிருர் என்று உன்னுல் சொல்லப்படும் கடவுள் இக்கம்பத்தில் இருக்கிருரு" என்று கேட்டான். "இத்தூணிலும் சிறு துரும்பிலும் இறைவன் இருக்கிருர்" என்ருன் இளை

ஞன். இருமாந்த இரணியன் உடனே கம்பத்தை எட்டி உதைத்தான்.

இரணியனால் உதைக்கப்பட்ட கம்பம், இரண்டு பிள வாயிற்று. அதிலிருந்து திருமால் வெளிப்பட்டார். அவருக்குச் சிங்க முகமும் மனித வுடலும் இருந்தது. அதற்கு நரசிங்க அவதாரம் என்று பெயர். வெளிப்பட்ட நரசிங்க மூர்த்தி இரணியனைத் தூக்கி மடிமீது போட்டுக் கொண்டு மார்பைப் பிளந்து கொன்றார்.

'நானே தெய்வம்' என இருமாந்த இரணியன் நாசமடைந்தான். பிரகலாதன் முன்னிலும் மிகுந்த பக்தியோடு கடவுளைத் தொழுதான். ஆகையால், அவருக்குப் பிரகலாத ஆழ்வார் என்று பெயர் வழங்கலாயிற்று.

பயிற்சி 15.

(அ) கடைத்தேற, மீறவில்லை, மொழி பிரிக்க.

(ஆ) தீர்ப்பு, செருக்கு, வெட்கம், ஈன்றாள், மடு, பொருள் எழுது.

(இ) இரந்தான், இறந்தான் பொருள் எழுது.

(ஈ) மாரி இருபொருள் எழுது.

(உ) அணு என்பதைக் குறிக்கும் வேறுமொழி கூறு.

(ஊ) தீர்ப்பு, நளினம், ஈய, ஈன்றாள், இம்மி, மடு, இருமாந்த தொடரில் அமைக்க.

(எ) இரணியன் மகனைக் கூப்பிட்டான்; மடிமேல் அமர்த்தினான்; முத்தம் கொடுத்தான். ஒரே சொற்றொடராக்கு.

(ஏ) கோடிட்ட இடத்தை நிரப்பு.

(1) ——— தம்பி இரணியாக்கன்.

(2) ——— இரணியாக்கன் பாயாகச் சுருட்டி பாதாளத்தில் மறைத்தான்.



(தூணிலிருந்து நரசிங்க மூர்த்தி வெளிப்படுதல்)

(3) ——— இறவாதவரத்தை இரணியனுக்குத் தந்தார்.
(4) ——— நரசிங்க மூர்த்தி வெளிப்பட்டார்.

கேள்விகள்

(1) இரணியன் திருமாலை ஏன் பகைத்தான் ?
(2) பிரகலாதனுக்குத் தந்தையின் பகை எப்படி ஏற்பட்டது ?
(3) கடவுள் எங்கே இருக்கிறார் ?
(4) இக்கதையின் நீதி என்ன ?

இலக்கணம்

கடவுள் வந்தார் ; கடவுள் வருகிறார் ; கடவுள் வருவார். என்னும் தொடர்களில் உள்ள வினைச்சொற்களுள் வந்தார் என்பது முன்னமே தொழில் நிகழ்ந்ததைக் காட்டுகிறது ; ஆகையால், இறந்த கால வினைச்சொல். வருகிறார் என்பது இப்போது தொழில் நிகழ்வதைக் காட்டுகிறது ; ஆதலால், நிகழ்கால வினைச்சொல். வருவார் என்பது இனி நிகழும் என எதிர்பார்க்கப்படும் வினைச்சொல் ; ஆகையினால், எதிர்கால வினைச்சொல். ஆகவே வினைச்சொல்லில் மூன்று பிரிவு உண்டு.

இப்பாடத்திலிருந்து ஒவ்வொரு காலத்துக்கும் உதாரணமாக மும்மூன்று வினைச்சொற்கள் எழுது.

---

16. அல்லியரசி.

தலை நகரம்	உவகை	அண்மி
பங்காளி	தரு	நன்னிலை
புத்திரப்பேறு	தெண்ணீர்	கோலம்
குழவி	வாவி (கயம்)	கன்னிகை
அடவி	அல்லி	செருக்களம்

தாயத்தார்	மோந்து	மங்கை
கலந்து	கேணி	நங்கைமார்
ஒருங்கு	இன்னருள்	மந்திரி
அரணியம்	கெடுமதி	சேனாதிபதி
சீரிய	துரோகி	நியமித்தாள்
ஓர்ந்தான்	நெடிது	எதிர்க்கும்
ஊழியம்	அகம்	சந்திரகுலம்
ஒருத்தி	புழுங்க	நிறைவேற்று
விளித்து	கலைகள்	மெல்லி
ஒப்படைத்தான்	செல்வி	அரிவை

தமிழ் நாட்டின் ஒரு பிரிவு பாண்டி நாடு என்று முன்பே படித்திருக்கிறோம் அல்லவா? அந்த நாட்டை ஆண்டவர்கள் பாண்டிய மன்னர்கள். அவர்களுக்குத் தலை நகரம் தேன் மதுரை. பாண்டியர்களுள் சித்திராங்கதன் என்பவன் ஒருவன். அவனுக்கு மகவுப் பேறு இல்லை. ஆகையால், மனம் வருந்தினான். அவனுக்குப் பிள்ளை யில்லாதது போலவே பங்காளிகளுக்கும் புத்திரப் பேறில்லா திருந்தது.

சித்திராங்கதன் தன் குலத்துக்கு ஏற்பட்டிருந்த குழவி யில்லாக் குறையைப் போக்கக் கருதினான். அனைவருடனும் புறப்பட்டு அடவி போகவும் அருந்தவம் புரியவும் ஆண்டவனருட் பெறவுந் திடங் கொண்டான். தன் தாயத்தாரோடு கலந்து யோசித்தான். அவன் கொண்ட கருத்து தகுதியுடைய தென்றே அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஒருங்கு கூடி உயர்மரங்களடர்ந்த வொரு அரணியத்தைக் குறித்தார்கள். சீரிய வேந்தனாகிய சித்திராங்கதன் தன் அரசை யாரிடம் ஒப்பித்துச் செல்வ தென ஓர்ந்தான்.

தனது அரண்மனையில் நெடு நாட்களாக ஊழியஞ் செய்த ஒருத்தி மகனைத் தேர்ந் தெடுத்தான். 'நல்ல குணமும் நய மொழியும் நல்லொழுக்கமும் நகரையாளும் ஆண்மையும் அவனுக்கே உண்டு, என உறுதியாக நினைத்தான். நீன் முகன் என்னும் பெயருடைய அவனை விளித்து அரசை ஒப் படைத்தான். பின்பு உவகை மிக்க உளத்தோடு உறவின ருடன் கூடித் தவத்துக்குச் சென்றான்.

சித்திராங்கத பாண்டியனும் மற்ற பாண்டியர்களும் பயம், பசி, பனி, பரிதி வெப்பம், பருவமழை, பரவிருள் முத லிய எதையும் கருதாமல் தவம் புரிந்தார்கள். அவர்கள், தனித்தனி ஒவ்வொரு தருவின் கீழ் இருந்து தவஞ் செய்தார் கள். சித்திராங்கதன் இருந்த இடத்திற்குப் பக்கத்தில் ஒரு கயம் இருந்தது. அவ்வாவி தண்ணிய தெண்ணீரை யுடையது. அதில் அல்லிக்கொடி படர்ந்திருந்தது. மன்னன் தவந்-தொடங்கிய சில நாட்களுக்குப் பின், ஒரு நாள் ஒரு சிறு மகவின் அழுகுரல் அவன் காதிற்பட்டது. அழுகை யொலி கேட்டவுடன் அரசன் எழுந்து சுற்றிலும் பார்த்தான். அவ்வொலி வரும் திக்கு நோக்கி நடந்தான். அல்லிக்கே ணியின் அருகில் சென்று, அல்லி யிலையின் மீது கிடந்து அழுங் குழவியைக் கண்டான். அது, அழகிய ஓர் பெண் மகவாயிருந்தது. அரசன், அதை அன்பொடு மெடுத்து, மார்போடு அணைத்துக் கொண்டு, மகிழ்வுடன் நடந்து வந்து மரத்தடியை யடைந்தான்.

மகவுடன் வந்த மன்னனை மற்றவர்களும் பார்த்தார் கள். அனைவரும் அவனிருந்தவிடம் வந்து சேர்ந்தார்கள். அருங் குழவியைக் கண்டார்கள். குழந்தையின் அழகையும் கடவுளின் அருளையும் புகழ்ந்தார்கள். தனித்தனி எடுத்து,

முத்தமிட்டு உச்சி மோந்து, உள்ளம் உவந்தார்கள். தெய்வத்தின் இன்னருளால் கிடைக்கப் பெற்ற இளமகவுக்கு இடும் பெயர் யாது! என யோசித்தார்கள். அல்லி யிலையின் மீது இருந்தெடுக்கப்பட்டதால் அல்லி என்றே பெயரிட்டனர்.

பாண்டியருடைய குலம் வளரக் கடவுளால் தரப்பட்ட பெண் மகவைப் பெற்ற பின் அனைவரும் நகருக்குத் திரும்பினர்கள். அங்கு என்ன நடந்தது தெரியுமா? நீன்முகன் கெடுமதி கொண்டான். சித்திராங்கதன் திரும்பி வந்தாலும் அரசைத் தருவதில்லை என எண்ணினன். மன்னன், மதுரைக்குள் நுழைய முடியாதபடி காவலை யமைத்தான். நம்பிக்கைத் துரோகிக்கு நல்லவனுகிய சித்திராங்கதன் நடுங்கினன். அரசை யிழந்து, அழுகையும் கண்ணீருமாகத் திரும்பினன். சுற்றத்தாரையும் உடன் கூட்டிக் கொண்டு சோழ நாடடைந்தான். குடிகளுள் ஒருவனுக விருந்து நெடிது நாள் கழித்தான். வறுமை வாழ்விலும் சித்திராங்கதன் அகம் புழுங்கவில்லை. அல்லிக்கு யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, வாள்வித்தை, மல்யுத்தம் முதலிய வற்றைக் கற்பித்தான். அல்லி, கல்வி, அறிவு, வீரம், வன்மை ஆகிய கலைகள் எல்லாவற்றிலும் சிறப்படைந்தாள்.

சிறப்படைந்த செல்வியாகிய அல்லி தக்க வயதடைந்தாள். ஒரு நாள் தன் தந்தையை அண்மி "அப்பா, நாம் யார்? நமது ஊர் எது? நமது நிலையாது? நாம் நன்னிலை யடையும் வழி என்ன" என்று இரங்கிக் கேட்டாள். சித்திராங்கதன், எதையும் மறைக்காமல் இயம்பினன். அல்லி, சிறிது நேரமும் வீணுக்காமல் போர்க் கோலங் கொண்டு புறப்பட்டாள். மதுரையை நோக்கிச் சென்றுள். சித்திராங்கதனிடம் அன்புள்ள சில வீரர்களும் கன்னிகைக்குத்

துணை சென்றனர். சிறுபடையுடன் சென்ற சிறுமி, செருக்களத்தில் நீன்முகனை வென்றாள்.

வெற்றியடைந்த வீர மங்கையாகிய அல்லி மதுரைக்கு அரசியானாள். அவள் தன்னைப் போன்ற வீர நங்கைமாரையே மந்திரி, சேனாதிபதி, முதலியவர்களாக நியமித்தாள். அவளுடைய நாடு எல்லா வகையிலும் சிறந்திருந்தது. நீர்வளம், நிலவளம், குடிவளம், ஆகியவை நிறைந்து, வறுமையின்றி யிருந்தது. அவளை எதிர்க்கும் பகைவரே அக்காலத்தில் இல்லை. அந்த நாட்டில் கல்வி, கைத்தொழில், வாணிபம், உழவு முதலியன வளர்ந்தன.

அல்லியின் புகழ் அதிக தூரம் பரவியது. வட நாட்டிலும் சென்று பரவிற்று. அக்காலத்தில் வடக்கே சந்திர குலத்து மன்னர்கள் அரசு செலுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் பாண்டுவின் மக்கள் பல்வகையிலும் சிறப்புடையவர்களாவார்கள். அவர்கள், அண்ணன் தம்பி ஐந்து பேர். ஆகையால், பஞ்ச பாண்டவர் என்ற பெயர் அவர்களுக்கு வழங்கிற்று. அவர்களைப்பற்றி முன்னமே நீங்கள் படித்திருக்கிறீர்கள்.

பாண்டவர்களுள் நடுப் பிறந்தோனாகிய அருச்சுனன் அல்லியைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவளை மணந்து கொள்ள ஆசைப்பட்டான். அவனுடைய மாமனும், உண்மை நண்பனும் ஆகிய கண்ணனுடைய துணையை வேண்டினான். கண்ணனும் வேண்டிய தந்திரங்களைச் செய்தான். அருச்சுனனுடைய ஆசை நிறைவேறிற்று. ஆண்மையும் அழகும் நிறைந்த அருச்சுனனுக்கும் வீரத்தில்மிக்க அல்லியாகிய மெல்லிக்கும் அணி மணம் நிகழ்ந்தது. அதன் பின்பும் அல்லி அரசியாகவே இருந்தாள்.

அல்லியைப் போல அறிவும், வீரமும் மிக்க அரிவையர் பலர், நம் நாட்டில் முன் காலத்தில் இருந்தார்கள்.

பயிற்சி 16.

(அ) தேர்ந்தெடுத்தான், பரவிருள், காதிற்பட்டது, இருந்த விடம், மொழி பிரிக்க.

(ஆ) சீரிய, சீறிய பொருள் எழுது.

(இ) காட்டைக் குறிக்கும் வேறு சிலமொழி கூறு.

(ஈ) வாவி இருபொருள் எழுது.

(உ) அண்மி எதிர்மொழி கூறு.

(ஊ) பங்காளி, விளித்து, கெடுமதி, அண்மி, தொடரில் அமைத்து எழுது.

(எ) சித்திராங்கதன் காடுபோகக் கருதினான்; தாயத்தாரோடு கலந்து பேசினான்; அவர்களையும் கூட்டிக்கொண்டு வனம் சென்றான்; தவம்புரிந்தான். ஒரு தொடர்வாக்கியமாக்கு.

(ஏ) அல்லியைப்பற்றி ஆறு சொற்றொடர் எழுது.

(ஐ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(1) ——— மகப்பேறில்லாக் குறை ஏற்பட்டது.

(2) ——— கூடி சித்திராங்கதன் வனம் போனான்.

(3) ——— குழந்தை அழுவதை அரசன் அறிந்தான்.

(4) ——— இழந்த சித்திராங்கதன் சோழநாடு சென்றான்.

(5) ——— அருச்சுனன் மணந்தான்.

(6) இந்தியாவில் பல ——— ——— ——— இருந்தார்கள்.

கேள்விகள்.

(1) நீன்முகனுக்கு அரசு எப்படிக் கிடைத்தது?

(2) அல்லிக்கு அப்பெயர் ஏன் இடப்பட்டது?

(3) காட்டிலிருந்து திரும்பிய சித்திராங்கதன், எந்த நாட்டில் வாழ்ந்தான்?

(4) அல்லியை எவன், யார்துணைகொண்டு மணந்தான்?

இலக்கணக் கேள்விகள்

(1) இடம் எத்தனை வகை? எவை?
(2) வேற்றுமை எத்தனை? எவை:
(3) வினை எத்தனை வகை? எவை?
(4) எச்சவினையின் வகை எத்தனை? எவை?
(5) காலம் எத்தனை? எவை?

இவற்றின் ஒவ்வொரு வகைக்கும் மும்மூன்று உதாரணம் எழுது.

---

17. பண்டை நிலம்.

நானிலம்	சாமை	நாமம்
வையகம்	வரகு	பஞ்சம்
மாதிரி	மூவினம்	சங்கீதம்
திடர்	கொன்றை	பசித்திருக்க
உறைவார்கள்	காயா	சீர்மை
சிறுகுடி	தோன்றி	விதி
இருல்	மருதம்	விலக்கு
அகழ்வார்கள்	நாரை	சான்று
சந்தனம்	அன்னம்	நாகரிகம்
தேக்கு	செறிந்து	தரணி
அகில்	பேரூர்	நடை
அசோகு	மூதூர்	உடை
மூங்கில்	நெய்தல்	நடிப்பு
காந்தள்	புன்னை	நாவன்மை
வேங்கை	தாழை	உபகாரம்

கான நாடு	வருணண்	ஒழுகிய
ஆயர்கள்	பரதவர்	தோற்றம்
பாடி	பாக்கம்	அடிக்கடி

நாம் வசிக்கும் இடமாகிய பூமிக்கு 'நானிலம்' என்று ஒரு பெயர் உண்டு. நான்கு நிலம் என்னும் இரு சொற்கள் சேர்ந்து நானிலம் என்ருயிற்று. இதை நான்கு வகையாக வுள்ள நிலம் என்று விவரித்துச் சொல்லவேண்டும். ஏன் அப்படிச் சொல்லப்படுகிறது? வையகத்தில் உள்ள எல்லா தடமும் ஒரேமாதிரி இருப்பதில்லே. மலேகளும் குன்று களும் மேடுகளும் காடுகளும் திட்டுகளும் திடர்களும் வயல் களும் நதிகளும் கடல்களுமாக இருக்கின்றன. பல வகை யாக மாறுபட்ட இடங்களிருந்தாலும் அவற்றைச் சில வகை யாக்கிப் பெயரிட்டிருக்கின்றனர். அவை நான்குவகைகள்.



மலே, குன்று, திட்டு, திடர் ஆகிய கற்கள் நிறைந்த இடம் மலேநிலம் எனப்படும். இதைக் குறிஞ்சிநிலம் என்றும்

மலை நாடு என்றும் கூறலாம். அங்கு மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்குக் குறவர் (குன்றவர்) என்று பெயர். குறவர்கள் குடிசைகளை அமைத்துக்கொண்டு உறைவார்கள். அவ் விடத்துக்குச் சிறுகுடி என்பது பெயர். குறவர்கள், மலையில் நெல்லும் தினையும் பயிரிடுவார்கள்; அங்குள்ள தேனிறால்களையழித்துத் தேன் சேர்ப்பார்கள்; கிழங்கு அகழ்வார்கள். குறிஞ்சி நிலத்தில் கிளியும் மயிலும் உண்டு. சிங்கம், புலி, கரடி, யானை முதலிய கொடிய விலங்குகளை அங்கே காணலாம். சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் ஆகியவை அங்குத் தோன்றும். குறிஞ்சி, காந்தள், வேங்கை முதலிபூ அங்கதிகம். குறிஞ்சிக் கடவுள் முருகன்.



உயர்ந்த மரங்களும் முட்செடிகளும் புதர்களும் நெருங்கியுள்ள இடத்துக்குக் காட்டுநிலம் என்று பெயர்.

அதை முல்லைநிலம் என்று கான நாடு (கானம் + நாடு) என்றும் இயம்பலாம். அங்கே ஆயர்கள் (இடையர்) வாழ்வார்கள். அவ்விடம், பாடி எனப்படும். பாடியில் உறையும் ஆயர் சாமை, வரகு முதலிய தானியங்களைப் பயிரிடுவார்கள்; மூவினம் மேய்ப்பார்கள். பசு, எருமை, ஆடு இவைகட்கு மூவினம் என்று பெயர். முல்லை நிலத்தில் காட்டுக்கோழி யுண்டு. மான், முயல் முதலிய விலங்குகள் வாழும். கொன்றைமரம், காயாமரம் (காசாமரம்) தோன்றும். முல்லைப்பூவும் தோன்றிப்பூவும் மிகுதி. முல்லைநிலத்துக்குக் கடவுள் திருமால் (விஷ்ணு).



நன்செய், புன்செய் என்னும் வயல்களையுடைய இடம் வயல்நிலம். அது மருதநிலம் என்றும் பெயர் பெறும். அதையே வயல்நாடு என்றும் உரைக்கலாம். மருத நிலத்தில் உறைகிறவர்களுக்கு உழவர் என்று பெயர். அவர்கள்

அழகான வீடுகளை அமைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்து வார்கள். அவ்வீடுகள் செறிந்த இடம் பேரூர் அல்லது மூதூர் என்னும் பெயர் பெறும். உழவர்கள், உழுது பயிரிட்டு உண்டு களிப்பார்கள். மருத நிலத்தில் நாரையும் அன்னமும் உண்டு; எருமை, நீர்நாய் முதலியன இருக்கும்; மருதமரம் மலிந்திருக்கும். தாமரை, அல்லி முதலிய அலர்களை யங்குக் காணலாம். அங்குள்ளவர்களுக்குத் தெய்வம் இந்திரன்.

கடல் உள்ள இடம் கடல்நிலம். அது நெய்தல் நிலம் எனப்படும். அதைக் கடல்நாடு என்றும் பகரலாம். அந் நிலத்துக் குடிகளுக்குப் பரதவர் என்று பெயர். பரதவரை இக்காலத்தில் செம்படவர் என்பது வழக்கம். அவர்கள் கடற்கரையில் சிறு குடில்களில் குடியிருப்பார்கள். அக்



குடிலமைந்த இடம் பட்டினம், பாக்கம் என்பவற்றுள் ஒரு நாமம் பெறும். பரதவர், மீன் பிடிப்பார்கள்; அவற்றை உலர்த்தி விலைப்படுத்துவார்கள்; உப்பு விளைவிப்பார்கள்.

நெய்தல் நிலத்தில் கடல் காக்கையும் மீனும் உண்டு; புன்னைமரம் காணப்படும்; நெய்தற்பூவும் தாழம்பூவும் மிகுதி. அந்நிலத்துக்கு வருணன் கடவுள்.

பண்டைத் தமிழ்நாடு இந்நிலையில் இருந்தது. பொதுவாகத் தமிழ்நாட்டு மக்களைப்பற்றிச் சிறிது கூறலாம். நானிலங்களுள் எங்கே இருந்தவர்களும் தமிழர்களே. அவர்கள் தமிழ் மொழியைப் பேசியதால் அப்பெயர் பெற்றார்கள். தமிழர் வீரம், கருணை, உண்மை, உழைப்பு, ஒற்றுமை, கடவுள் நம்பிக்கை ஆகிய எல்லாக் குணங்களும் உள்ளவர்கள். நடுநிலை தவறாத நல்லியல்பு நந்தமிழர் மனதையே தாயகமாகக் கொண்டிருந்தது. ஆகையால், வஞ்சமில்லா நெஞ்சும், பஞ்சமில்லா வாழ்க்கையும் உடையவர்களாக விருந்தார்கள். தமிழர் பல்லாயிரம் யாண்டுகளுக்கு முன்பே தக்க கல்வி யறிவு பெற்றிருந்தார்கள். சித்திரம், சங்கீதம், கைத்தொழில், வியாபாரம் ஆகிய எல்லாவற்றிலுந் தமிழர்களுக்குத்திறமை ஏற்பட்டிருந்தது.

தமிழ் நாட்டு மக்கள், தந்நலம் ஒன்றையே கருதாமல் பொது நன்மைக்கே பாடு பட்டவர்கள்; பிறர் பசித்திருக்க விட்டுத் தாம் புசிக்காதவர்கள்; இல்லை என்னும் சொல்லைக் கூறாத நல்லவர்கள்; பிறர் பொருட்டு உடல், பொருள், ஆவி எதையும் ஈயும் இயல்பு நிறைந்தவர்கள்; சீர்மை, பெருமை, புகழ் உடையவர்கள்; விதி, விலக்குகளுக்கு இசைந்திருந்தவர்கள்; அரசு முறையை அறிந்தவர்கள். தமிழர் நாகரிகமே தரணியில் தலை சிறந்த சான்றாயிருந்தது. நடை, உடை, நடிப்பு நாவன்மைகளைத் தமிழர்கள் நாகரிகமாகக் கருதவில்லை. பிற உயிர்களின் பொருட்டு மனம் இரங்கி,

உபகாரம் செய்வதே நாகரிகம் என்னும் உண்மையைக் கண்டு ஒழுகியவர்கள் தமிழ் மக்களே.

இனி, தமிழ் நாட்டின் வளமையைக் குறித்துக் கொஞ்சம் கூறுவோம். இத்தமிழ் நாடு, இயற்கை வளம் மிக்கது. மலை, காடு, நாடு, கடல் ஆகிய விடங்களில் தந்தம், முத்து, பவளம், மணி, பொன் முதலியன கிடைக்கும். மலை, காடு, யாறு, வயல், கடல் முதலிய கண்ணுக்கினிய காட்சியால் சிறப்புடையது தமிழ் நாடு. பல நாட்டு மக்களுக்கும் இடந் தந்து வாழ்விக்கிறது நம் தமிழ் நாடு.

தமிழ் நாட்டின் நானில வளங்களையும் அழகிய தோற்றங்களையும் அடிக்கடி கண்டு களிப்பது தமிழர்களாகிய நடது கடமை யல்லவா !

பயிற்சி 17.

(அ) நானிலம், கானநாடு, சொற்கள், கடற்கரை, மொழி பிரிக்க.

(ஆ) சான்று, நாமம் பொருள் கூறு.

(இ) அகழ், பாடி இருபொருள் எழுது.

(ஈ) விதி எதிர்மொழி கூறு.

(உ) செறிந்து, பஞ்சம், இசைந்து, உபகாரம், தோற்றம் தொடரில் அமைக்க.

(ஊ) குறிஞ்சியைப்பற்றி ஆறுவரிகள் எழுது.

(எ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

(1) ——— நிறைந்த நிலம் மலைநிலம்.

(2) ——— நிலத்தில் தேனிறால் மிகவுண்டு.

(3) ——— நிலத்தைக் கான நாடு என்பர்.

(4) கடற்கரையில் உள்ள ஊர் ———.

கேள்விகள்.

(1) குறிஞ்சி நிலத்தில் உள்ள பறவைகள் எவை ?
(2) முல்லை நிலத்தில் உள்ள விலங்குகள் எவை ?
(3) மருத நிலத்து மலர்கள் எவை ?
(4) நெய்தல் நிலத்துத் தெய்வம் எது ?
(5) தமிழருடைய இயல்பு யாது ?

இலக்கணம்.

நண்பா வா. நண்பா வருக. என்பவற்றுள் வா என்பது கட்டளை இடுகிறது ; அதாவது ஏவுகிறது. ஆதலால், வா என்பது ஏவல்வினை. வருக என்பது வேண்டுதல்போல இருக்கிறது. ஆகையால், அது வியங்கோள்வினை.

(1) ஏவல்வினை, முன்னிலை இடத்தில் மாத்திரம் ஒருமை, பன்மை வேறுபாடு கொண்டு வரும்.

உதாரணம் - நண்பா, வாழ். நண்பர்களே, வாழுங்கள்.

(2) வியங்கோள் மூவிடத்துக்கும் ஐம்பாலுக்கும் பொதுவாய் வரும்.

(உ-ம்)

நான் வாழ்க.	நாங்கள் வாழ்க.	தன்மை
நீ வாழ்க.	நீங்கள் வாழ்க.	முன்னிலை
அவன் வாழ்க. அவள் வாழ்க. அவர்கள் வாழ்க. அதுவாழ்க. அவை வாழ்க.		படர்க்கை

18. நம் நாட்டுக் கைத்தொழில்.

இஞ்ஞான்று	உடுப்பாள்	பாராட்டி
சகாயம்	கம்பளம்	பொருட்காட்சி சாலை.
பிறநாடு	நூற்கும்	
மலிவான	பேண	குன்றி
கவனிப்பார்	சால்வை	களைகட்டி
போந்தனர்	சாயம்	அறுவடை
அந்நிய நாடு	தோய்ப்பதில்	பெறும்பயன்
வேற்று நாடு	பார்த்திபர்	பெரும்பயன்
தழை	அரியாசனம்	பின்பற்றி
பட்டாடை	முந்தை	மேற்கொள்ள
பருத்தியாடை	இயன்று	கோணி
நெய்யப்பட்டன	இழிவுற்றது	நன்னிலை

பண்டைக் காலத்தில் நம் இந்தியாவில் கைத் தொழில் மேன்மையுற்றிருந்தது. ஆனல், இஞ்ஞான்று அது, தாழ்வடைந்திருக்கிறது. ஏன்? என்ருல் மற்ற நாட்டுப் பொருள்கள் மட்டின்றி நம் நாட்டுக்கு வந்து சேர்கின்றன. அவை குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. பிற நாட்டுப் பொருள்கள் குறைந்த விலைக்கு விற்கப்படுவதன் காரணம் என்ன? அவை எந்திரங்களின் சகாயத்தால்செய்யப்படுவதே யாகும். நம் நாட்டுப் பொருள்களோ கையாலேயே செய்யப் படல் வேண்டும். எந்திரத்தால் செய்யப் பட்டாலும் எந்தி ரங்கள் பிற நாட்டிலிருந்தே பெரும் பொருள் கொடுத்து

வாங்க வேண்டும். வேற்று நாட்டுப் பொருள்கள், மலிவான விலைக்குக் கிடைப்பதால், மிக்க விலையையுடைய நம் நாட்டுப் பொருள்கள் விலையாவதில்லை. அதனாலே கைத்தொழிலைக் கவனிப்பாரில்லை. கவனிப்பாரில்லாவிட்டால் கைத்தொழில் வளர்ச்சியடையுமா ?

முன் காலத்தில் நம் நாட்டில் எவ்வெக் கைத் தொழில்கள் ஏற்ற முற்றிருந்தன என்பதைச் சிறிது கூறுவோம்:—

நம் நாட்டில் விளையும் பொருள்களையும் கைத் தொழில்களையும் விரும்பியே கிரேக்கரும் இத்தாலியரும் இங்குப் போந்தனர். பன்னூறு யாண்டுகளுக்கு முன்னமே இந்தியா, வாணிபத்தில் உயர்வடைந்திருந்தது. இந்து தேசத்தில் மிளகு, வாசனைப்பொருள், யானைத்தந்தம், முத்து, இரத்தினம் முதலியன மிகுதியும் உண்டு. மற்ற நாட்டவர்களின் மனதை அப்பொருள்களே கவர்ந்தன. மயில், குரங்கு, சந்தனக்கட்டை முதலியவை அந்நிய நாட்டு அரசர்கட்கு இங்கிருந்து அனுப்பப்பட்டன,

வேற்று நாட்டு மக்கள் தழைகளை உடையாக உபயோகித்தபோது இந்தியர், பட்டாடைகளையும் பருத்தியாடைகளையும் உடுத்திக் கொண்டிருந்தார்கள்; அன்றியும் பொன், முத்து, மணி முதலியவற்றால் செய்யப்பட்ட நகைகளையும் நாகரிகத்தோடு அணிந்திருந்தார்கள். அவர்கள் யானை, குதிரை, தேர் முதலியவைகளில் சிறப்பாகச் சென்றார்கள்.

சர்க்கரை என்னும் இனிய பொருள் இந்தியாவிற்றான் முதன் முதல் செய்யப்பட்டது. பின்பு யவனம், பாரசீகம், கிரீஸ், ஐரோப்பா முதலிய இடத்தவர்க்குந் தெரிந்தது. நெடு நாட்களுக்கு முன்னரே நம் நாட்டில் மெல்லிய சிறந்த ஆடை

கள் நெய்யப்பட்டன. அவுரங்கஜீப் என்னும் அரசனுடைய மகள், ஏழு உடைகளை ஒன்றன் மேல் ஒன்றாக உடுப்பாளாம். அப்படி யுடுத்தாலும் அவளுடைய அழகு வெளியில் தெரியுமாம். அப்படிப்பட்ட ஆடை நெய்யப்பட்ட இடம் இந்தியாதானும். அக்காலத்தில் நம் நாட்டில் மாலைப் பனிபோலவும் மெல்லிய காற்றுப் போன்றும் ஓடும் நீர் போலும் வெண்புகை மாதிரியும் நீராவி யொப்பவும் பாம்பின் தோல் போலவும் மூங்கிலின் உட்புறத்துள்ள வெண்மை நிறத்தோல் போன்றும் மெல்லிய ஆடைகள் நெய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

நூலை நூற்பதும், நெசவுத்தொழில் செய்வதும் ஆகிய வேலைகள் நம் நாட்டுப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் மிக எளிது. அதிலும் நூற்குந் தொழில், பெண்களால் பேணப்பட்டது. எலி மயிரால் எழில் மிக்க கம்பளங்கள் நெய்த இடம் நம் நாடு. இப்போதும் காஸ்மீர தேசத்தில் ஆட்டு மயிரினால் சால்வை, கம்பளம் முதலியன நெய்யப் படுகின்றன. அவைகளை எந்நாட்டவரும் ஏற்று மகிழ்கிறார்கள். அந்தச் சால்வை, கம்பளங்களைப் போல வேறெங்கும் நெய்ய முடிவதில்லை என்பது திடம்.

சாயந் தோய்ப்பதில் சிறந்த பழக்கம் இந்தியருக்குண்டு. இப்பொழுதும் நூலுக்குச் சிறந்த சாயம் ஏற்றுந்தொழில் காஸ்மீரத்தில் நடக்கிறது. அங்கு ஏற்றப் படுகிற சாயம் நிலையாக இருக்கிறது. அன்றியும் நயமாகவுமுளது. அதற்குக் காரணம் அங்குள்ள நீரின் இயல்பு என்றும் எண்ணப் படுகிறது. இச் சாயத் தொழில் காஸ்மீரத்தில் நீண்ட நாட்களாக நடைபெறுவதாகும். ஆகையினால், பண்டை

தொட்டே பார்த்திபர்கள் அரியாசனத்தில் அமரும் போது அந்நாட்டுச் சால்வைகளை உடுத்துவது வழக்கமாயுளது.

இந்நாட்டில் முந்தை நாளில் இரும்புத் தொழிலும் இயன்று கொண்டிருந்தது. அது இக்காலத்தில் இழிவுற்றது. இந்தியாவில் செய்யப்பட்ட கத்திகளைப் பாரசீக மக்கள் பாராட்டினதாகத் தெரிகிறது. அங்குள்ளவர்களுக்குக் கோபம் வந்தால் "இந்தியா தேசத்துக் கத்தியால் வெட்டட்டுமா" என்னும் பொருளில் திட்டும் வழக்கம் இன்றும் இருப்பதாகத் தெரிகிறது. இன்னும் நமது நாட்டில் செய்யப்பட்ட அழகான கத்தி முதலியவை அந்நிய நாட்டுப் பொருட்காட்சி சாலைகளுக்கு அனுப்பப்பட்ட தாகவும் தெரிகிறது.

இவ்வளவு சீரும் சிறப்பும் பெற்றிருந்த இந்தியா இக்காலத்தில் முயற்சி குன்றி யிருக்கிறது. பாருங்கள்! ஏழை உழவர்கள் வருந்தி வயலை உழுகிறார்கள். எப்படி எப்படியோ சேர்த்து எரு விடுகிறார்கள். பின்பு விதைத்து, நீர் பாய்ச்சி, களை கட்டி, காவல் புரிந்து, விளைந்தபின் அறுவடை செய்கிறார்கள். அப்போது அவர்கள் பெறும் பயன் பெரும் பயனன்று. அதை அவர்கள் அறிந்தும் வாளா விருக்கின்றனர். தகுந்த முறையில் பாடு பட்டால் பலன் மிகுதியாகு மல்லவா? ஏழைகளை இயம்புவானேன்? அதிக நிலமுள்ளவர்களும் அப்படியேதான். பணக்காரர் நன்கு முயன்று நல்வழி காட்டினால் மற்றை யோரும் அதைப் பின்பற்றிப் பெரிதும் பேறு பெறுவார்கள்.

ஆனால், நம் நாட்டில் கைத் தொழில் இல்லையா? இருக்க இருக்கச் சிறிது சிறிதாக மேற் கொள்ளப்பட்டே வருகிறது என்பதில் ஐயமில்லை. பம்பாயில் பஞ்சு வர்த்தக

மும் நெசவும் நடக்கிறது. வங்காளத்தில் கோணிப்பை நெய்யப் படுகின்றது. கல்கத்தா நகரில் காகிதச் சாலையும் வேலை செய்கிறது. சென்னையில் கண்ணாடி வேலை தொடங்கப் பட்டிருக்கிறது. மதுரையில் சாயத் தொழில் நிகழ்கிறது. மைசூரில் சோப்பு, காகிதம், மரச்சாமான், தந்தப் பொருள்கள் ஆக்கப் படுகின்றன. மலையாளத்திலும் நெசவு சுமாராக் இருக்கிறது.

நம்மவர், கைத் தொழிலின் கனத்தை யுணர்ந்து முயன்றால் நம் நாடு மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் நன்னிலை யுறுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

பயிற்சி 18.

(அ) வேற்று நாடு, பட்டாடை, அரியாசனம், இழிவுற்றது, மேற்கொள்ள, நன்னிலை மொழி பிரிக்க.

(ஆ) மட்டு, பேண, அரி, இயன்று, பொருள் எழுது.

(இ) மலிந்த எதிர்மொழி கூறு.

(ஈ) ஆடையைக் குறிக்கும் வேறு சில மொழி கூறு.

(உ) நெய், அரி இருபொருள் எழுது.

(ஊ) காரணம், மலிந்த, நூற்கும், பழக்கம், பாராட்டி, களை, நன்னிலை தொடரில் அமைக்க.

(எ) கோடிட்ட சொல்லை மாற்றி எதிர்மொழி அமைக்க.

(1) பண்டைக் காலத்தில் கைத்தொழில் மிகுதி.

(2) நம் நாட்டுப் பொருள் மிக்க விலையுடையது.

(3) அழகு வெளிக்குத் தெரியும்.

(4) நூற்குந் தொழில் பெண்களால் பேணப்பட்டது.

கேள்விகள்.

(1) நம் நாட்டுப்பொருள் விலையேறக் காரணம் யாது?

(2) மற்ற நாட்டவர் மனதைக் கவர்ந்த நம் நாட்டுப் பொருள்கள் எவை?

(3) சர்க்கரை முதன் முதல் செய்யப்பட்ட இடம் எது?

(4) காஷ்மீர உடை எப்படிப்பட்டவை?

(5) பாரசீகப் பழமொழியால் நாம் அறிவது யாது?

இலக்கணம்

பட்டாடையும் பருத்தியாடையும் உடுத்தனர் என்னும் சொற்றொடரில் பட்டாடை, பருத்தியாடை என்பன பெயர்ச் சொற்கள் அல்லவா! அவற்றோடு சேர்ந்துள்ள உம் என்பது இடைச்சொல். அவ்வாறு, பெயரோடாவது, வினையோடாவது, இரண்டின் இடையிலாவது வரும் சொல் இடைச்சொல். இடைச்சொல் தனியே வருவதில்லை.

கீழே காணும் தொடர்களில் உள்ள இடைச்சொற்களை எடுத்தெழுது :—

(1) தழைகளை உடையாக உடுத்தனர்.

(2) பாலுடன் பழம் கூடியது போல.

(3) பத்தோடு மூன்றைக் கூட்டு.

(4) ஐயோ! பாவம்.

அம்மா, இந்தச் சொல்லின் முடிவில் உள்ள குறியைப் பாருங்கள். , இது கால்புள்ளி எனப்படும். இதைக் கண்ட விடத்தில் நாம் கொஞ்ச நேரம் நிறுத்திப் பின்பு தொடங்கவேண்டும், அண்ணா, நான் சென்றதனால், இராமன் மகிழ்ந்தான். எனவரும்.

அப்பா, என்னை ஏன் அழைத்தீர்கள்? இதன் முடிவில் உள்ள குறி கேள்விக்குறி. இது வினாவைக் காட்ட வருவது.

19. செஞ்சிக் கோட்டை

நயப்பார்கள்	பின்னடைதல்	கட்டடங்கள்
போன்று (போல)	தனியன்	சிலம்பக்கூடம்
இவுளி	வடகரை	பள்ளிவாசல்
வெகுளி	காவல்	நெறி (வழி)
சீற்றம்	அரண்	வேலைப்பாடு
இறுதி	மதில்	ஆச்சரியம்
தயார்	கிரி	சங்கிலி
வழிபடு கடவுள்	கிட்டத்தட்ட	இணைக்கும்
அனுமதி	கருங்கல்	வளையம்
திருவாக்கு	மேடை	அண்மை
எதிர் பாராமல்	தெற்றி	சுனை
போர்க்களம்	இவர்ந்து	அறிகுறி
கோறினன்	மலை	நாகரிகம்
புரவி	வாயில்கள்	

மாணவர்களே, மூன்றும் வகுப்பில் தேசிங்கு என்னும் ஒரு வீரனைப் பற்றி நீங்கள் படித்தீர்கள் அல்லவா! இந்த வகுப்பில் அவனைப் பற்றிய மற்ற வரலாற்றையும் நன்றாகக் கூறுகிறேன். அன்றியும் அவன் வசித்திருந்த கோட்டையைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அன்றோ! அதையும் சொல்லுகிறேன்.

தேசிங்கு சிறந்த வீரன் ஆகையால், அவனுடைய உதவியை அரசர் பலர் நயப்பார்கள். அவனும் தன்னைக் கோரியவர்களுக்குத் துணையாகச் சென்று தன்னாலான மட்டில் தக்க விதமாக உதவி புரிவான். அதே போன்று ஒரு

முறை இந்திய மன்னரொருவருக்குதவி செய்து இலக்ஷ ரூபாயும் ஓர் சிறந்த இவுளியும் இனமாகப் பெற்ருன். டெல்லி பாதுஷா முன்னரே தேசிங்குக்குச் சிறப்புச் செய்திருந்தான் அன்ரே! ஆதலால், அவன் ஆற்காட்டு நவாபுக்கு அடங்காமல் தனி ஆட்சி செலுத்தினன். அதனல், ஆற்காட்டு நவாபுவாகிய சாதத்கான் மிக்க வெகுளி கொண்டான். தன்னிடமிருந்த சேனைத் தலைவனகிய தோண்டர் மல்லனேடு சிறிது சேனையைக் கூட்டித் தேசிங்குவிடம் கப்பம் வாங்கி வருமாறு சொல்லியனுப்பினன். அந்தச் சேனைத் தலைவன் அடங்காத ஆண்மையுடையவன்; அஞ்சாத நெஞ்சமுடையவன்.

தொண்டர் மல்லனைக் கண்டும், அவன் மொழிந்ததைக் கேட்டும் தேசிங்கு சீற்றம் கொண்டான்; இழிவான மொழிகளைக் கூறினன். "ஆற்காட்டு நவாபுக்கு யான் அடங்கியவனக மாட்டேன்; அவன் ஆண்மையுடையவனயின் அமர் செய்து வெற்றி பெறட்டும்" என இறுதி மொழிந்து விட்டான். தேசிங்கினல் அவமான மடைந்த தொண்டர் மல்லன் மீண்டு சென்று சாதத்கானிடம் சமாச்சாரம் மொழிந்தான். ஆற்காட்டு நவாபுக்கு அப்போதுண்டான ஆத்திரத்துக்கு அளவில்லை; அதே நேரத்தில் பெரும் படையுடன் செஞ்சியை நோக்கிச் சண்டைக்குப் புறப்பட்டான். சாதத்கான் சண்டைக்கு வந்ததை யுணர்ந்த தேசிங்கு, தானும் படையைத் தயார் செய்தான்.

தேசிங்கு தினமும் குல தேய்வத்தை வணங்குவதோடு அரங்கநாதரையும் தொழுவது வழக்கம். தனது வழிபடு கடவுளாகிய அரங்கநாதர் அனுமதியின்றி எந்தக் காரியத்திற்கும் போகமாட்டான். அதுபோல போருக் கேகு

யன் இலகுங் காலமாகிய சுமார் பன்னிரண்டு (12) மணி நேரமே ஒரு பகல். அது தோன்ருத காலமே இரவு. இப்படி ஒரு பகலும் ஓரிரவும் கழிவது ஒருநாள் என வழங்குகிறது. அதைக் கொண்டு ஏழு நாள் கொண்டது வாரம், முப்பது நாள் முடிந்தது மாதம். பன்னிரண்டு மாத கால அளவு யாண்டு என்னும் அளவுக்குக் காரணம் கதிரவன் அன்ருே! அதைக் கொண்டே பகற் பொழுதைப் பன்னிரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் மணி என்னும் பெயர் இட்டனர். மணியை அறுபதாக்கி ஒரு பகுதியை ஒரு நிமிஷம் என்று கூறினர். அதையும் அறுபது கூறு செய்து செகண்டு என்றனர். மணி, நிமிஷம், செகண்டு என்பன ஆங்கில முறை.

தமிழர் பகலை முப்பது கூருக்கி ஒரு கூறுக்கு நாழிகை எனப் பெயரிட்டனர். அதை அறுபது பிரிவாக்கி ஒரு பிரிவுக்கு விநாழிகை (விநாடி) என்னும் பெயர் அமைத்தனர். தமிழர் கூறும் நாழிகை இரண்டரை கூடியது ஆங்கில முறைப்படி ஒரு மணி யாகிறது.

இன்னும் சூரியனுடைய பெருமையைப் பேசுவதென்ருல் பெருகும். மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத காற்று சூரியனுலேயே சுத்தப் படுத்தப் படுகிறது. கெட்ட காற்றை நல்ல காற்ருக்கும் தொழிலைப் பரிதி செய்யாவிடில் பல்லுயிரும் பட்டொழியும். தாவரங்களும் தலை காட்டுவதற்கில்லை. அடுத்தபடி அனைத்துயிருக்கும் உணவாயிருப்பதும் உணவை விளைவிப்பதும் நீர். நீருக்குக் காரணம் மழை. அம் மழையை மாநிலத்துக்குத் தருபவன் ஆதவன். சூரியனில்லாவிட்டால் வெப்பமில்லை. வெப்ப

மில்லாமல் நீராவி ஏற்படாது. அது ஏற்படாமல் மேகம் ஏது. மேகமில்லாமல் மழை பெய்யாதல்லவா!

இவ்வளவையும் கருதி அறிஞர் சூரியனைத் தெய்வமாகப் போற்றுகிறார்கள். அதன் பெயரால் ஒரு நாள் அமைத்தார்கள். காலை, நண்பகல், மாலை ஆகிய முப்பொழுதிலும் சூரியனை வணங்கும் முறையை விதித்தார்கள். ஞாயிற்றுக் கிழமை தோறும் சூரியனைக் கருதி விரத மிருக்கும் வழக்கம் செய்தார்கள். யாண்டு தோறும் தை மாதம் முதல் தேதியில் சூரிய பூசையைப் பழக்கினார்கள். ஒளியில் மிகுந்த சூரியனைப் புகழுக்கு உதாரணமாக அறிஞர் கூறுவது வழக்கம். மிகுந்த புத்தியுள்ளவனைப் பார்த்து "அப்பா, அவன் புத்தியில் ஆதவன் போன்றவன்" என்பதும் உண்டு.

இப்படிப்பட்ட இயற்கைப் பொருள்களின் உதவியாலேயே உலகத்து உயிர்கள் இன்பமாக வாழ்கின்றன. இயற்கைப் பொருளை ஈந்த இறைவனை எப்போதும் துதித்து நன்றி செலுத்துவதே அறிவுடையோரது கடன்.

பயிற்சி 20.

(அ) புலப்படும், பட்டொழியும், மேற்றிக்கு, மொழி பிரிக்க.

(ஆ) சூரியனைக் குறிக்கும் சில மொழி கூறு.

(இ) விழி, நிகழ்ச்சி, கோளம், ஈந்த பொருள் எழுது.

(ஈ) இருள் எதிர்மொழி எழுது.

(உ) கதிர் இருபொருள் எழுது.

(ஊ) வெய்யோன், குறுக்கு, செய்தி, பட்டொழியும் தொடரில் கூட்டி எழுது.

(எ) யாண்டு என்பதைப்பற்றி ஐந்து சொற்றொடர் எழுது.

(ஏ) கோடிட்ட சொல்லை நீக்கி எதிர்மொழி எழுது.

(1) சூரியன் பகலில் தோன்றும்.

(2) சூரியன் இல்லை என்றால் காலவரை யறை இல்லை.

(3) வெப்பம் இல்லாமல் நீராவி ஏற்படாது.

கேள்விகள்

(1) சூரியனுக்கு எதனுல் வெய்யோன் எனப் பெயர் வந்தது?
(2) பொய்த்தோற்றம் எது?
(3) கால வரையறை எதனுல் ஏற்படுகிறது?
(4) ஆங்கிலக் கால அளவு எவை?
(5) மழைக்குக் காரணம் எது? எப்படி?
(6) இயற்கைப் பொருளை ஈந்தவர் யார்?

இலக்கணம்

முத்தன் கண்டான் என்பது ஒரு தொடர் அதில் முத்தன் என்பவனுல் கண்ட தொழில் நடந்தது. தொழில் நடத்திய முத்தன் என்னும் சொல் எழுவாய்ச் சொல் எனப்படும். அவனுல் நிகழ்ந்த பயனைக்காட்டும் கண்டான் என்னும்சொல் பயனிலைச் சொல் எனப் படும். இன்னும் முத்தன் சூரியனைக் கண்டான் என்ருல், சூரியன் காணப்பட்ட பொருள் ஆகின்றது. ஆகையால், அது செயப்படு பொருள் ஆகும். இவற்றைக் கண்டுபிடிக்க முதலில் பயனிலையை எடுத்துக்கொண்டு யார்? அல்லது எது? என்று கேட்டால் எழுவாய் வரும்; பின்பு யாரை? அல்லது எதை? எனக்கேட்டால் செயப்படு பொருள் வரும். இப்படியே கீழுள்ள சொற்ருெடர்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கண்டுபிடிக்க.

(1) நாம் கடவுளைத் தொழுகிருேம்.
(2) ஞாயிறு ஒளியைத் தருகிறது.
(3) மரம் வளர்கிறது.
(4) மாடு ஓடுகிறது.
(5) உழவன் நிலத்தை உழுகிருன்.

, (காற்புள்ளி)
. (முற்றுப்புள்ளி)
! (வியப்புக்குறி)
? (வினுக்குறி) இவைகளை உபயோகப்படுத்தி ஐந்து சொற்ருெடர் எழுது.

21. கடிதம் எழுதும் முறை.

(1) நண்பனுக்குக் கடிதம்.

(விநாயகனுக்கு இராஜேஸ்வரன் எழுதுவது)

காரைமேடு.
31—3—1939

அன்புகூர்ந்த நண்பா,

நாங்கள் இவ்விடம் க்ஷேமமாயிருக்கிறோம். உங்களுடைய க்ஷேமத்தைக் கேட்க ஆவல் கொண்டிருக்கிறேன். சுமார் ஒரு மாத காலமாக உன் கடிதம் வருவதில்லை; என்ன காரணம்? பரிக்ஷை நெருங்கி விட்ட படியால், ஓய்வில்லாமல் படிக்க வேண்டியிருக்கும்; அதனாற்றான் கடிதம் எழுதாமலிருக்கிறாய் என்று நினைக்கின்றேன். ஆயினும் நீ என்னை மறந்திருக்க மாட்டாய் என்றே நம்புகிறேன். எங்கள் பாட சாலையில் ஏப்பிரல் மாதம் 15உ முதல் பரிக்ஷை நடக்கப் போகிறது. உங்கள் பள்ளிக்கூடத்துப் பரிக்ஷை ஆரம்பத் தேதியைத் தெரிவிக்கவும். தமிழ்ச் செய்யுளிலும் தமிழ் இலக்கணத்திலும் பரிக்ஷைக்கு முக்கியமாகத் தெரிய வேண்டியவைகளைக் குறித்தனுப்பவும். இக்கடிதத்துடன் சில கணக்குக் குறிப்புக்களை உனக்கு அனுப்பி யிருக்கிறேன், உன் பெற்றோருக்கு எனது நமஸ்காரம் சொல்லவும். உடனே பதில் எழுதவும்.

இப்படிக்கு, உன் அன்பன்,
இராஜேஸ்வரன்.

(விலாசம்)
நண்பன்,

விநாயகனுக்கு, சம்பு புரி,
சேதுராயன் பட்டு போஸ்டு.
(வடாற்காடு ஜில்லா.)

(2) தந்தைக்குக் கடிதம்.

உத்தரமேரூர்.
25—4—1939

நலம், நமஸ்காரம்.

தேவரீர், அப்பா அவர்களுக்கு முருகேசன் வணக்கமாய் எழுதிக் கொண்ட கடிதம் :—க்ஷேமம் ; க்ஷேமத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இவ்விடத்தில் நான் நன்ருகப் படிக்கிறேன். ஆனுலும் மாமா என்னை எப்போதும் படிக்க வேண்டும் என்று தொந்தரவு செய்கிருர். ஆகையால், எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. அடுத்த வாரம் (அதாவது) 1—5—39 முதல் எங்களுக்கு விடுமுறை. இதற்குள் தாங்கள் வந்து என்னை அழைத்துக் கொண்டு போகவும். அல்லது பிரயாணச் செலவுக்கு ஐந்து ரூபாய் மணியார்டர் செய்யவும். நான் வரும் தினத்தை மறு கடிதத்தில் எழுதுகிறேன். ஆரணி பஸ் ஸ்டாண்டுக்கு நமது குதிரை வண்டியை யனுப்பவும்.

இப்படிக்குத்
தங்கள் அருமை மகன்,
முருகேசன்.

(விலாசம்)

தேவரீர், அப்பா,

இராமைய பிள்ளை,
ஹெட்மாஸ்டர்.
போர்டு எலிமெண்டரி ஸ்கூல்,
கேளூர் போஸ்டு,
(போளூர். S. I. R.)

(3) ஆசிரியருக்கு மாணவன் கடிதம்.

திரு ஆயர்பாடி,
17—5—1939

பணிவு,

அருள்மிக்க ஆசிரியர் திருவடிகளில் வணக்கம்.

நலன், தங்கள் நலனறிய விரும்புகிறேன். தாங்கள் எனக்குப் புகட்டிய புத்தி மதிகளாலும் கல்வியாலும் நான் எனக்குக் கிடைத்த உத்தியோகத்தில் சுகமாயிருக்கிறேன். என் வேலையைக் காலந் தவறாமல் ஒழுங்காகச் செய்கிறேன்.

சென்ற இரண்டு வாரமாகவும் இன்னும் மூன்று வாரம் வரையிலும் எங்களுக்குக் கோடை விடுமுறை; ஆகையால், தங்களைப் பார்க்க யான் வர நினைத்திருக்கிறேன்; வருகிறேன். நான் வரும்போது சென்னை வழியாக வருவேன். தங்களுக்குத் தேவையுள்ள பொருளைக் குறித்தனுப்பினால் வாங்கி வருகிறேன். உடனே தயவு செய்து பதில் எழுதக் கோருகின்றேன். தங்கள் கடிதம் கண்டு புறப்படுகிறேன்.

இங்ஙனம்
தங்கள் மாணவன்,
ந. ஈசன்

(விலாசம்)

உயர்திரு,

ஆசிரியர், கா. மு. சுந்தரர்,
மகாவித்துவான், காமநகர்,
இராயவேலூர் மார்க்கம்.

(4) ஆசிரியருக்கு மாணவன் மனு.

குருவப்ப செட்டி தெரு,
10—4—39

ஐயா,

நான் சென்ற (சனி, ஞாயிறு) இரண்டு நாட்களாகத் தலைவலி சுரங்களால் படுத்த படுக்கையாயிருந்தேன். ஆதலால், தயவு செய்து எனக்கு இந்த வார முழுதும் (10 தேதி முதல் 14 தேதி வரையில் ஐந்து நாட்களுக்கு) லீவு தரவேணுமாய்ப் பணிவுடன் மனு செய்து கொள்கின்றேன்.

இப்படிக்கு,
தங்களுக்குக் கீழ்ப்படிந்த,
ஐயாசாமி.
(5-ஆம் வகுப்பு)

(விலாசம்)

மகா-ராஜ-ராஜஸ்ரீ,
வகுப்பு உபாத்தியார்,
5-ஆம் வகுப்பு
இராமலிங்க சுவாமிகள் பாடசாலை,
ஐயா முதலி தெரு,
சிந்தாதிரிப் பேட்டை.

(5) புத்தகக் கடைக்குக் கடிதம்.

மதுரை,
16—6—39

ஐயா,

தங்கள் கடையில் உள்ள கீழே குறிக்கப்பட்ட புத்தகங்களை என் பேருக்கு அனுப்பி வைக்கவும். இன்று ரூபாய் 5—0—0 மணியார்டர் செய்திருக்கிறேன்.

நன்னூல்	1.	1-12—0
திருக்குறள் (உரையுடன்.)	1.	1—4—0
சூடாமணி நிகண்டு		1—4—0
ஆங்கில ஒக்கபிலேரி I. II.		0—6—0
ஆக ரூ		4-10—0

என் விலாசம் :—
ம. சோக்கன்,
'கமலாலயம்'
சன்னதி தெரு,
மதுரை.

(விலாசம்)

மானேஜர்,

எஸ், வாசன் கம்பெனி,

சாந்தோம்,

மைலாப்பூர், சென்னை.

செய்யுட் பகுதி

1. இனியது

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே. 1

ஏகாந்தம் - தனிமை, ஆதி - கடவுள், அறிவினர் - புலவர்.

2. கொடியது

கொடியது கேட்டின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்புஇலாப் பெண்டிர்
அதனினும் கொடிது
இன்புற அவர்கையில் உண்பது தானே. (2)

கொடியது - தீயது, வறுமை - இன்மை, ஆற்றொணா - தாங்க முடியா.

3. பெரியது

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்

கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடலோ குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்.
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே. (3)

எரி - தீ, புவனம் - உலகம், படைப்பு - ஆக்கல், உந்தி - வயிறு, துயின்றோன் - தூங்கியவன், அரவு - பாம்பு, தொண்டர் - அடியவர்.

4. அரியது

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடர் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
தானமும் தவமும் தான்செய்வர் ஆயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே (4)

பேடு - பெண்மை, ஞானம் - அறிவு, நயத்தல் - விரும்பல்.

முன் அரங்கநாதரின் அடிபணிந்து உத்தரவு வேண்டினுன். ஆனல், தெய்வத்தின் திருவாக்கு மாறுபட்டிருந்தது. அதனல், அவனுடைய மனம் அமைதி கெட்டது. அதோடு அவன் மனேவியும் மயக்கத்தோடே விடைதந்தாள். பெருவீரனுகிய தேசிங்கு எதையும் எதிர் பாராமல் போர்க்களம் போகப்புறப்பட்டான்.

அவனிடம் மிக்க படையில்லே. ஆகையால், ஒரே குதிரைச் சேனேயைக் கொண்டும். முகம்மதுகான் என்னும் தன்னுடைய தோழனது துணேயைக் கொண்டும் வெற்றி பெறலாம் என்னும் துணிவுடன் நவாபை எதிர்த்தான். நாவாபு ஒரு பெருங் களிற்றின் மீதிலிருந்து போர் செய்தான். தேசிங்கோ ஒரு குதிரை மேலிருந்தே அமர் புரிந்தான். தேசிங்கின் குதிரை எல்லாவற்ருலும் சிறந்தது. ஆதலால், அவன் அஞ்சாமல் படைக்குள் புகுந்து பலரைக் கோறினுன். நாவாபையும் தாக்கி வருத்தினுன்.

நவாபுவினுடைய படை சாலப் பெரிதாயினும் தேசிங்கைத் தோற்கடிக்க முடியாமல் தவித்தது. முடிவில் ஒரு முகம்மதிய வீரன், தேசிங்கின் பின் புறமாக வந்து புரவியின் கால் ஒன்றை வெட்டினுன். குதிரை கீழே விழுந்தது; ஆயினும் தேசிங்கு பின்னடையவில்லே. பெரும்படையில் தனியனுக நின்று போர் செய்வது அருமையல்லவா! வெகு நேரம் முயன்றும் தனக்கு வெற்றி விளேயாதென உணர்ந்த தேசிங்கு தன்னேத்தானே குத்திக் கொண்டு மாண்டான். அதை யறிந்த அவன் மனேவியும் தீயில் பாய்ந்திறந்தாள். இதை யறிந்த சாதத்கான் சஞ்சலமடைந்தான். இராணியின் பெயரால்

5. அன்னை

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து—செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனிந்தமுது தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி (5)

பரிந்து - விரும்பி, அமுது - பால்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன் (6)

காதலித்து - விரும்பி, சிறகில் - பக்கத்தில்.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள்சுமந்து
அந்திபக லாச்சிவனை ஆதரித்து—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன் (7)

ஆதரித்து - பக்தி செய்து, தொந்தி - வயிறு, தழல் - தீ.

6. கல்வி

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லவராம்
கல்லாத மூடர் கருத்து அறி யாரே (8)

கடன் - கடமை, கருத்து - நற்பொருள்.

7. கர்வம் கூடாது

கற்றதுகைம் மண்ணளவு கல்லாது உலகு அளவுஎன்று
உற்ற கலை மடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டாம் புலவீர்
எறும்பும் தன்கையால் எண்சாண் (9)

ஓதுகிறாள் - படிக்கிறாள், சொல்கிறாள்.

8. பழக்கம்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்தது ஒருகல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம் (10)

நடை - ஒழுக்கம், கொடை - ஈகை.

9. வாக்குண்டாம்

(1) வாக்கு உண்டாம்; நல்ல மனம் உண்டாம்; மாமலராள்
நோக்கு உண்டாம்; மேனி நுடங்காது;—பூக்கொண்டு
துப்புஆர் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு (11)

மாமலராள் - திருமகள், நோக்கு - பார்வை.

(2) நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரம் இல்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர் (12)

ஈரம் - கருணை.

(3) நல்தா மரைக்கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்புஇலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம் (13)

கயம் - குளம், காமுறுவர் - விரும்புவார்கள், கற்பு - கல்வி, முகப்பார் - ஏற்பார்கள், முதுகாடு - சுடலை, உகக்கும் - விரும்பும்.

(4) மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புஉடையன்—மன்னனுக்குத்
தன்தேசம் அல்லால் சிறப்புஇல்லை கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு (14)

மாசற - குற்றம் ஒழிய, சீர்தூக்கின் - ஆராய்ந்தால்.

10. நல்வழி

(1) பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன்—கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா (15)

கோலம் - அழகு, துங்கம் - தூய்மை, (குற்றமில்லாத இயல்பு.)

(2) சாதி இரண்டு ஒழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி (16)

சாற்றுங்கால் - செல்லும்போது, நீதி - கடமை, மேதினி - உலகு, இழிவு - தாழ்வு, பட்டாங்கு - சாஸ்திரம்.

11. நீதி வெண்பா

(1) கண்இரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணும் விழி ஏழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
அநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்கு
அநந்தம் விழி என்று அறி (17)

நண்ணும் - பொருந்தும், அநந்தம் - மிகுதி.

(2) கொம்பு உளதற்கு ஐந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்கு ஆயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி (18)

வம்பு - சண்டை, செறி - மிகு, தீங்கினர் - கெட்டவர், நெறி - முறை.

12. நன்மதி மாலை

(1) தங்கத் தவிசில் தகையில்லா நாயினைத்
தங்கும் படிபட்டம் தந்தாலும்—சிங்கம்போல்
தோன்றுமோ கீழோரைத் தோத்திரம் செய்தாலும்
தோன்றுமோ ஈகைத் தொழில் (19)

தவிசு - சிம்மாசனம், தகை - பெருமை, ஈகை - தருதல்.

(2) தேளுக்கு நஞ்சு சிறிதே கொடுக்களவே
வாளொக்கும் பல்மட்டே வல்லரவிற்கு—ஆளும்
கொடுமைதீய நல்லணியாக் கொண்டவருக் கம்மா
உடல்முழுதும் நஞ்சே உணர் (20)

அணி - ஆபரணம், உணர் - அறி.

ஒரு நகரம் அமைத்தான். அதன் பெயர் இராணிப்பேட்டை அது வடாற்காடு ஜில்லா வாலாஜா தாலூக்காவில் பாலாற்றின் வட கரையில் உள்ளது.

இனி செஞ்சிக் கோட்டையைப் பற்றிச் சிறிது கூறுவோம் :—

கோட்டை என்பது நான்கு காவல் பொருந்தியதாயிருக்க வேண்டும். அவை மதிலரண், நீராண், காட்டரண், மலையரண், எனப்படும். கோட்டையைச் சுற்றி மதிலும், மதிலைச் சுற்றி அகழி நீரும், அதைச் சுற்றிக் காடும், காட்டைச் சூழ்ந்து மலைகளும் இருக்க வேண்டும். அரண் நான்கும் அமையப் பெற்ற கோட்டையில் வாழும் கொற்றவனை வெல்வது எந்த மன்னர்க்கும் அரிதாகும். அதே நிலையில் செஞ்சிக் கோட்டையும் உளது.

தேசிங்கு மன்னன், தன் வாழ்விடத்தை இராஜகிரி என்னும் குன்றில் அமைத்திருந்தான். அரசாங்கம் புரியும் இடமாகக் கிருஷ்ண கிரி என்னும் குன்றை நியமித்திருந்தான். இராஜகிரிக்கும் கிருஷ்ணகிரிக்கும் கிட்டத்தட்ட கால் மைல் தூரமிருக்கும்.

இராஜகிரி, கிருஷ்ண கிரியைவிடக் கொஞ்சம் உயர்ந்தது. அக்குன்றின் படிகள் அழகான கருங் கற்களால் ஆனவை. அக்குன்றில் ஒரு அழகிய கோயிலுண்டு. அது தேசிங்கு மன்னனுடைய குல தெய்வமாகிய காளியம்மன் ஆலயம். அதன் பக்கத்தில் நீர்ச்சுனை ஒன்றுளது. அதன் சுற்றுப் புறத்தில் பல மேடைகளும் தெற்றிகளும் உள்ளன. அதுவே தேசிங்குக்கு நீராடும் சுனை. இராஜகிரியின் உச்சியில் அரசன் வாழ்மனை உளது. அதைச் சுற்றி மதிலும் அகழியும் உண்டு. அங்கே உள்ள மண்டபங்

கள் அழகானவை. அம் மண்டபங்கள் எட்டுக் கோண வடிவ முடையவை. அங்கே செல்வதற்கு மாத்திரம் கற்படிகள் கிடையா. மரப் படிகளிலேயே இவர்ந்து செல்லுதல்வேண்டும். இவ்வரை அடிவாரத்தில் கோட்டை வாயில்கள் ஐந்து உண்டு. ஒவ்வொரு வாயிற்படியிலும் போர் வீரர் தங்கக் கட்டடங்களுள்ளன. ஆங்கு நெற் களஞ்சியம், நெய்க் கிணறு, எண்ணெய்க் கிணறு முதலியவை கட்டப் பட்டுள்ளன. மல் யுத்தம் பயிலும் சிலம்பக் கூடங்களும் பள்ளி வாசலும் அங்கே உண்டு.

கிருஷ்ண கிரியின் மீது ஏறுவதற்கு இரு நெறிகளுண்டு. அவற்றுள் ஒன்று போர் வீரருக்கென்றே நியமிக்கப் பட்டுள்ளது. அக்குன்றின் சிகரத்தில் இராஜ மண்டபம் அமைக்கப் பட்டிருக்கின்றது. அம்மண்டபம் அழகு மிக வாய்ந்தது. ஆண்டுக் கல்லால் செய்யப்பட்ட ஓர் ஊஞ்சல் உண்டு. அதன் வேலைப்பாடு மிக வியப்பை யுண்டு பண்ணும். ஊஞ்சலின் சங்கிலியை இணைக்கும் இரு கல்வளையங்களை அதில் காணலாம். அவ் வளையங்கள் பெரியன; மேலும் எழிலுடையன.

இவ்விரு குன்றுகளுக்கும் நடுவில் ஒரு கருங்கற்சுவர் உண்டு. அதன் உயரம் நூறு அடி; அகலம் இருபது அடி. அச்சுவர், தேசிங்கின் குதிரைச் சவாரி அதன் மீது நடப்பது வழக்கமாம்.

இராஜகிரி, கிருஷ்ணகிரி ஆகிய இவ்விரண்டைவிடச் சிறிய குன்று ஒன்றும் அங்கே உண்டு. அது கிருஷ்ண கிரிக்கு வடபுறத்தில் உளது. அதன் பெயர் அரங்க நாத கிரி. அதன் உச்சியில் தான் தேசிங்கின் வழிபடு கடவுளாகிய அரங்கநாதர் கோயில் உளது. திருவரங்கத்தில் உள்ள

திருமால் போலவே ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கும் சுவாமியை அக்கோயிலில் தரிசிக்கலாம். அரங்க நாதர் கோயிலின் எதிரில் ஒரு நந்தியா வர்த்தச் செடியும் ஒரு எலுமிச்சைச் செடியும் உண்டு. அந்தப் பூஞ்செடி தினமும் ஒரு மலரேனும் பூசைக்குத் தருகிறதாம். எலுமிச்சஞ் செடியும் நாடோறும் குறைந்தது ஒரு பழமேனும் கடவுள் பூசனைக் குதவுமாம். அவ்வாலயத்தின் அண்மையினுலும் அழகிய சுனை ஒன்றுண்டு. அதில் எக்காலமும் நீர் இருந்து கொண்டே இருக்குமாம்.

இவ்வளவு எழிலுடன் விளங்கும் அக்கோட்டையைக் கண்டு களிக்க இக்காலத்திலும் பல விடங்களிலிருந்து பலர் அங்குச் செல்வதுண்டு. செஞ்சிக் கோட்டை, தேசிங்கின் சிறப்பைக் காட்டுவதற்கென நிலைத்திருக்கின்ற அறிகுறியாகும். பழங் காலத்திலிருந்த தமிழ் நாட்டு மன்னரது அரசாட்சியின் பெருமையையும் ஒழுங்கையும் அவர்களுடைய நாகரி கத்தையும் ஆலயம், கோட்டை, நகரம் முதலியவைகளின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். ஆதலால், நாம் ஒரே இடத்திலிருந்து புத்தகங்களின் மூலம் பலவற்றைப் படித்தறிவதோடு பல விடங்கட்குஞ் சென்று, ஆங்காங்குள்ள காட்சிகளைக் கண்டு, பல செய்திகளை ஊகித் துணர்தலும் வேண்டும்.

பயிற்சி. 19

(அ) போருக்கேகுமுன், தோற்கடிக்க மொழி பிரிக்க.

(ஆ) சீற்றம், இறுதி என்பவற்றைக் குறிக்க வேறு சில மொழி கூறு.

(இ) இவர்ந்து, இணைக்கும் இவற்றின் எதிர்மொழி கூறு.

(ஈ) கோருதல், கோறுதல் பொருள் வேறுபாடு யாது ?

(உ) தயார், திருவாக்கு, தனியன், வியப்பு தொடரில் அமைக்க.

(ஊ) அரங்கநாதர் கோயிலுக்கு எதிரில் ஒரு நந்தியாவர்த்தச் செடி யிருக்கிறது. ஒரு எலுமிச்சைச் செடி இருக்கிறது. பூஞ்செடி தினம் ஒரு பூ தரும். பழச்செடி தினம் ஒரு பழந்தரும். இத் தனி வாக்கியங்களைக் கூட்டி ஒரே தொடர்வாக்கியமாக எழுது.

(எ) கோடிட்ட சொல்லை மாற்றி எதிர்மொழி யமைக்க.

(1) தேசிங்கு சீற்றத்தால் இழிவான மொழி கூறினன்.

(2) இராஜகிரி கொஞ்சம் உயர்ந்தது.

(3) சுனை ஆலயத்தின் அண்மையில் உண்டு.

(ஏ) இராஜகிரியைப்பற்றி ஐந்து வரிகள் எழுது.

கேள்விகள்

(1) சாதத்கான் என்பவன் யார்?

(2) தொண்டர்மல்லன் எப்படிப்பட்டவன்?

(3) தேசிங்கின் வழிபடு தெய்வம் எது? குலதெய்வம் எது?

(4) தேசிங்குக்கு எதனல் தோல்வி விளைந்தது?

(5) பல செய்திகளை நாம் எப்படி அறிதல் வேண்டும்?

இலக்கணம்

இராஜகிரி மிகப் பெரியது. என்பதில் உள்ள மிக என்பது பெரியது என்பதை அதிகப்படுத்திக் காட்டவந்தது. இவ்வாறு பெயர், வினைகளின் இயல்பைக் குறிக்க உரிமைப்பட்ட சொல், உரிச் சொல் எனப்படும். உரிச்சொல் பெயரோடு சேர்ந்துவந்தால் பெயர் உரிச்சொல். அது வினையோடு சேர்ந்துவந்தால் வினைஉரிச்சொல்.

கீழுள்ள தொடர்களிலிருந்து எது பெயருரிச்சொல், எது வினை யுரிச்சொல் என எடுத்துக்காட்டு.

(1) தேசிங்கு மிக வெகுளி கொண்டான்.

(2) நவாபு படை சாலப் பெரியது.

(3) தேசிங்கு வெகுநேரம் முயன்ருன்.

(4) ஒன்றைவிட மற்றொன்று கொஞ்ச முயர்ந்தது.
(5) சுனையில் தண்ணீர் உண்டு.

கீழுள்ள தொடர்களில் வேண்டிய குறிகள் இடுக.

கந்தா செஞ்சிக்கோட்டையை நீ பார்த்ததுண்டா
ஆ ஆ செஞ்சிக்கோட்டை மிகப் பெரிது
ஐயோ தேசிங்கு தானே குத்திக்கொண்டான்
பாவம் இராணியும் தீயில் விழுந்திறந்தாள்
வீரர்கள் புகழ் என்றும் அழியாது

---

20. சூரியன்

விழி	செலுத்துவது	ஓர்
பகலவன்	புலப்படுவது	கூறு (பிரிவு)
கதிரவன்	இசைப்போம்	நிமிஷம்
மேற்றிக்கு	ஓயாமல்	செகண்டு
வெய்யோன்	சக்கரம்	நாழிகை
வெளி	தொடை	விநாழிகை
நிஜம்	முடவன்	பரிதி
நிகழ்ச்சி	கற்பித்து	பட்டொழியும்
மடங்கு	மரபு	தலைகாட்டுவது
குறுக்கு	ஓதுகிறவர்	அடுத்தபடி
கோளம்	இலகும்	ஆதவன்
சுழலும்	கழிவது	ஈந்த

நமது முகத்தில் இரண்டு விழிகள் இருக்கின்றன. அவைகளால் என்ன பயன் என்பதை முன்னமே படித்திருக்கிறோம். எதிரில் உள்ள பொருள்களைப் பார்த்தறியும் திறமை கண்ணுக்கிருந்தாலும், இருளில் இருக்கும் எதையும் இதனல்

அறிய முடியாதல்லவா? இருள் ஒழிந்தால் எதையும் விழி அறியும். அவ்விருளை யொழிப்பது எது? அது தான் சூரியன், சூரியனுக்கு ஞாயிறு, பகலவன், கதிரவன், இரவி எனப்பல பெயர்கள் உண்டு. உலகத்தில் உள்ள இருளைப் போக்கி, ஒளியளிக்கும் பகலவனால் மற்றும்பல நன்மைகளும் உண்டு. ஆதலால், நாம் சூரியனைப் பற்றிக் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும்.

நாம் சூரியனை எங்கே காண்கிறோம்? காலையில் கிழக்கே பார்க்கிறோம். நடுப்பகலில் உச்சியில் காண்கிறோம். மாலையில் மேற்றிக்கில் பார்க்கிறோம். மாலை ஆறு மணி முதல் மறுநாள் காலை ஆறுமணி வரையில் அதாவது, இரவு நேரத்தில் இரவியைக் காண முடியாது. இப்படிக் காலையில் கிழக்கே தோன்றும் கதிரவன், பகல் முழுதும் வான வெளியில் மேற்கு நோக்கி நகர்ந்து சென்று மாலை வேளையில் மேற்கே மறைவதாக நமக்குத் தோன்றுவது நிஜக் காட்சியா? இல்லை; இல்லை. அது பொய்த் தோற்றம். ஆனால், உண்மை நிகழ்ச்சி யாது?

சூரியன் இருந்த இடம் விட்டு அசையாத ஒரு பொருள். அது, பந்து போன்ற ஒரு நெருப்பு உருண்டை. எப்பொழுதும் எரிந்து கொண்டிருப்பதனால் அதனிடத்திலிருந்து ஒளியும் வெப்பமும் உண்டாகிறது. அவ்வெப்பத்தோடு கூடிய வொளிதான் வெய்யில். வெய்யிலைத் தருவதால் சூரியனை வெய்யவன் அல்லது வெய்யோன் என்றும் கூறுவதுண்டு. வெய்யோன் உதவியின்றி எப்பொருளும் உயிர் வாழ முடியாது. ஆகையினாலேயே அதை மக்கள் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

சூரியனுக்கு மற்றுெரு இயல்பும் உண்டு. பூமியையும் மற்ற கிரகங்களேயும் ஒரே நிலேயில் நிறுத்துவது அது தான். சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் சுமார் ஒன்பது கோடி முப்பது லக்ஷம் (93,000,000) மைல், அது பூமியை விடப் பல கோடி மடங்கு பெரியது. சூரியன் என்னும் உருண்டையின் குறுக்களவு எட்டு லக்ஷத்து அறுபத்தாருயிரத்து ஐந்நூற்று நாற்பது (8,66,540) மைல். இச்சூரிய கோளம், சுழலுந் தன்மை யுடையது. அது ஒரு முறை தன் பாட்டில் சுழல்வதற்கு இருபத்தைந்து (25) நாட்கள் வேண்டும். பகலவன் ஒளிக்கு நிகராக வேறெந்த ஒளியையுங் கூற முடியாது. ஆகையினுலேயே பகலில் சந்திரன், நக்ஷத்திரம் முதலியவை நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லே.

சூரியனேப் பற்றி நம் முன்னேர் சில செய்திகள் கூறியிருக்கிருர்கள். அவற்றையும் இங்கே இசைப்போம்:—சூரியன் ஒரு தேரில் ஏறி வான வீதியில் ஓயாமல் போய்க்கொண்டிருக்கிருன். அவனுடைய தேருக்கு ஒரே சக்கரந் தான். அத்தேரை ஓட்டுகிறவன் அருணன் என்னும் பாகன். பாகனுடைய நிறம் செம்மை. அவனுக்குக் காலில்லே. அருணன் தொடையில்லாத முடவன். பகலவன் தேரை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. அவை பசுமை நிற முடையன. என்று கற்பித்துள்ளார்கள். மற்றும் சிலர் சூரியனுடைய தேரில் கட்டப்படும் ஏழு குதிரைகளும் வெண்மை நிற முடையவை என்று பகர்வதும் மரபு. எழு பசும் புரவி என்பது ஒன்றே என்று ஓதுகிறவர்களும் உண்டு.

இச்சூரியன் இல்லே என்ருல் நமக்குக் கால வரையறையேயில்லே என்னலாம். எப்படி என்று பாருங்கள். சூரி